# இஸ்லாமிய சிந்தனை

மலர்: 2 | ஸபர் 1400 -- ஜனவரி 1980 | இதழ்: 2




நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With

best

compliments

from

# Al-Haj A. H. M. MUKTHAR

GEM MERCHANT

66, Naleem Hajiar Mawatha,

Beruwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thambiah Markandu
PRIVATE ROAD
NEAR MALI SANTHY
ALVAI SOUTH
ALVAI

بسم الله الرحمن الرحيم

# இஸ்லாமிய சிந்தனை

முத்திங்கள் வெளியீடு

மலர்: 2 | ஸபர் – 1400 ஜனவரி – 1980 | இதழ்: 2

நளீமிய்யா இஸ்லாமிய
வெளியீட்டுப் பணியகம்,
த. பெ. இலக்கம்: 1,
பேருவலை.

இஸ்லாமிய சிந்தனை
ஆசிரியர் குழு
கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
(தலைவர்)
யூஸுப் தலால் அலி
(அதிபர், ஜாமிஆ நளீமிய்யா)
எம். எச். எம்.
ஹிபதுல்லாஹ்,
ஐ. எல். எம். நிலாம்,
ஏ. ஆர். ஏ. நூர் அமீன்,
எம். எஸ். எம். ஹரீஸ்,
ஸி. எம். ஏ. அமீன்,
(முகாமையாளர்,
நளீமிய்யா இஸ்லாமிய
வெளியீட்டுப் பணியகம்)

சந்தா விபரம்
தனிப்பிரதி விலை ரூ. 2/00
தபால் மூலம்: ரூ. 2/30
ஆண்டு சந்தா: ரூ. 9/20

இச் சஞ்சிகையில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள கருத்துகளுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்.

## பொருளடக்கம்

பக்கம்

1. ஆசிரியர் தலையங்கம் 02

2. வாசகர் அரங்கு 04

3. அல்-குர்ஆன் சிந்தனைகள் 05

4. ஹதீஸ் தெளிவுரை :
'சிறந்த செயல்கள்'
- தாஹிர் ரஸூல் காதிரீ 08

5. சகோதரி மர்யம் ஜெமீலாவுடன்
ஓர் உரையாடல் 10

6. வான்மறையும் வானவியலும் பகுதி:3
'பிரபஞ்சத்தின் ஆக்கமும் அழிவும்'
- ஸீயெம்மே அமீன் 15

7. இஸ்லாமிய ஒழுக்கவியல் வளர்ச்சி
- பேராசிரியர் குர்ஷித் அஹ்மத் 30

8. சிந்தனைப் போக்கில் திருப்பம் ஏற்படுத்திய
பேரறிஞர் இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
- கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி 41

9. பெருமானாரும் குழந்தைகளும்
- பேராசிரியர் அப்துல் காதிர் ஹாஃபைதி 49

10. மேற்குலகின் பிடியில் இஸ்லாம்
- எஸ். எம். பளீல், பீ. ஏ. (ஆனர்ஸ்) 59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய சிந்தனை

இஸ்லாம் அதன் பதினன்கு நூற்ருண்டுகால வரலாற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு பதினைந்தாம் நூற்ருண்டில் காலடி யெடுத்துவைக்கும் காலப் பிரிவு, ஹிஜ்ரி பதினைந்தாம் நூற்ருண்டின் தொடக்க விழாவாக உலகெங்கும் கொண்டாடப்படும் இச்சந்தர்ப்பத்தில், மனித இன வரலாற்றில் மகத்தான திருப்பத்தை ஏற்படுத்திய வரலாற்றுப் பெருமைமிக்க இம்மகத்தான நிகழ்ச்சி பற்றிய நினைவலைகள் ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்திலும் தோன்றுவது இயற்கையாகும்.

முஸ்லிம் உலகில் இஸ்லாமிய மறுமலர்ச்சியின் பேரொளிச் சுடர்கள், அதன் ஒளிக்கதிர்களைச் சிந்தி, இஸ்லாமிய உலகைக் கவ்வியிருந்த, இறை நிராகரிப்பு, லோகாயதவாதம் ஆகியவற்றினடிப்படையிலெழுப்பப்பட்ட மேற்கத்திய சிந்தனையின் பேரிருளை விரட்டியடிக்கப் போர் தொடுத்து, அந்தக் களத்தில் முஜாஹிதுகளின் முழக்கம் எதிரொலித்து, ஷஹீத்களின் இரத்தம் சிந்தப்படும் சூழ்நிலையில் ஹிஜ்ரி பதினைந்தாம் நூற்ருண்டு ஆரம்பமாகின்றது.

'ஹிஜ்ரா' என்பது அரபு நாட்டின் வரலாற்றில் மட்டுமன்றி, மனித இன வரலாற்றிலேயே மகத்தான திருப்பத்தை ஏற்படுத்திய பெருநிகழ்ச்சியாகும். வரலாற்றின் ஓட்டத்தையே திசைதிருப்பிய இம்மகத்தான நிகழ்ச்சியை flight of Muhammad (முஹம்மது மக்காவிலிருந்து மதீனுவிற்குத் தப்பியோடிய நிகழ்ச்சி) எனக்குறிப்பிட்டு, அந்நிகழ்ச்சியின் பின்னல் பொதிந்துள்ள வீர உணர்வையும், கொள்கைப் பற்றையும், தியாக உணர்வையும் மூடிமறைக்க முனைகின்றனர் மேற்கத்திய வரலாற்ருசிரியர். மக்காவிலிருந்து மதீனுவிற்கு முஹம்மது (ஸல்) அவர்களும், அவர்களது தோழரும் குடிபெயர்ந்து சென்ற சம்பவமே 'ஹிஜ்ரத்' எனக்குறிப்பிட்டு வரலாற்றில் நிகழ்ந்த ஆரிய, செமித்திய குடிபெயர்வுகளோடு ஒப்புவமைகாணச் சிலர் முனைகின்றனர்.

ஹிஜ்ரத்தின் கோட்பாடும், தத்துவமும் இந்த வரைவிலக்கணங்களுக்கு அப்பாற்பட்டது. அது ஒரு கொள்கையை, இலட்சியத்தைப் பேணிக்காக்கும் பெரும் பணியில் தமது உடைமை, பொருள், பிறந்த பொன்னுடு, உற்ருர் உறவினர் அனைத்தையும் துறந்து பெருமானுர் (ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் மேற்கொண்ட தியாகப் பயணமாகும். ஒரு கொள்கைக்காக, இலட்சியத்திற்காக ஒரு பிரதேசத்தை விட்டு, இன்னெரு பிரதேசத்திற்குக் குடிபெயர்ந்து சென்ற இத்தகைய தியாக நிகழ்ச்சியை, வரலாறு இந்த ஒரே தடவை மட்டுந்தான் சந்தித்துள்ளது.

பெருமானுர் (ஸல்) அவர்கள் இறைவனின் தூதை மக்களுக்குச் சமர்ப்பித்து, அந்தத் தூதினடிப்படையில் ஒரு சமுதாயத்தைக் கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெழுப்பும் பணிக்காக வந்தார்கள். இஸ்லாமிய இலட்சியவாதத்தின் அடிப்படையில், ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் இலட்சியப் பயணத்தின் முக்கிய மைல் கல்லே ஹிஜ்ராவாகும்.

ஹிஜ்ரா என்பது மனிதனின் உடலோடும் பொருளோடும் மட்டும் தொடர்புடையதன்று; அது மனிதனின் உள்ளத்தோடும், ஆன்மாவோடும் தொடர்புடையது. நாட்டைத் துறப்பது போன்று, நாயனுக்குப் பொருத்தமற்ற பண்புகளைத் துறப்பதும் ஹிஜ்ரத் ஆகும். "முஜாஹித் என்பவன் தீய உணர்வுகளுக்கெதிராகப் போராடுபவனாவான்; முஹாஜிர் என்பவன் தீமையைவிட்டு வெறுத்தொதுங்குபவனாவான்" என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் கருத்துரை, இத்துறையில் சிந்திக்கத் தக்கதாகும்.

பதினான்கு நூற்றாண்டுகால இஸ்லாமிய வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்து, அது புகட்டும் பாடங்களைப் படித்துணர்ந்து, சமுதாயப் புனருத்தாரணத்திற்கான பணியில் ஈடுபட ஒவ்வொரு முஸ்லிமையும் ஹிஜ்ரி நூற்றாண்டின் ஆரம்பம் தூண்ட வேண்டும்.

இன்று இஸ்லாமிய உலகம் மானசிகமான, ஆத்மீக ரீதியான ஹிஜ்ரத்தை வேண்டி நிற்கின்றது. எனவே, ஹிஜ்ரத்தின் இந்தத் தத்துவத்தை உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் ஒரு முஹாஜிராக மாறுவோமாக!

வாருங்கள்! நாம் அந்த மானசிகமான, ஆத்மீக ரீதியான ஹிஜ்ராவில் பங்கு கொள்வோம். அஃது ஆடம்பர விழாக்கள், வீண் கேளிக்கைகள், அர்த்தமற்ற ஆரவாரங்கள் அனைத்தையும் கடந்ததாகும்! நாம் இஸ்லாமல்லாத வாழ்க்கை முறையின் பிடியிலிருந்து விடுபட்டு, தூய்மையான இஸ்லாமிய வாழ்வின்பால் ஹிஜ்ரத் செல்வோம்! தீமையிலிருந்து நன்மையின் பக்கமும், சுயநலத்திலிருந்து பொதுநலத்தின் பக்கமும், கீழான உணர்வுகளிலிருந்து விடுபட்டு உயர்ந்த இலட்சியங்கள்பாலும் நாம் ஹிஜ்ரத் செல்வோம்! தவறுகளும், இருளும் நிறைந்த வாழ்விலிருந்து, தூய்மையும், ஈமானின் பேரொளிச் சுடரும் நிறைந்த வாழ்வின்பால் ஹிஜ்ரத் செல்வோம்!

ஹிஜ்ரி பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தோடு, முஸ்லிம் உலகில் நீறுபூத்த நெருப்பாகக் கிளம்பிச் சுடர்பெருக்கும் இஸ்லாமிய மறுமலர்ச்சியின் வெளிச்சத்தில், முஹாஜிர்களாக எமது வெற்றிப் பயணத்தை ஆரம்பிப்போம்! இந்த ஹிஜ்ரத்தின் இறுதி இலட்சியம் இறைவனின் திருப்தியாகவும், மறுமை வாழ்வின் வெற்றியாகவும், சுவனவாழ்வின் இன்பமாகவும் அமையட்டும்!

•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் அரங்கு

இதுகாலவரையில் எமது சமய, சமூக கலாசாரங்களைக் கட்டியெழுப்பு வதற்கான எத்தனையோ ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. ஆனால் 'இஸ்லாமிய சிந்தனை'யைப் போன்றதொரு சிறந்தபடைப்பு இதுவரையில் வெளி வரவில்லை யெனத் துணிந்து கூறினால் அது மிகையல்ல. அதில், சமூகத்தை மேல் நோக்கி எழுச்சி பெறச் செய்கின்ற எத்தனையோ பல ஆக்கங்கள் காய்தல், உவத்தலின்றி வெளியிடப்படுவதைக் கண்ணுற்றபோது சுயமாகவே யான் அதன் அபிமானியாகவும், சந்தாதாரராகவும் சேர்ந்து கொண்டேன். அதில் எடுத்தமாத்திரத்தில் நுனிப்புல் ஆய்விற்கு இடமேயில்லை. அது தனது இஸ் லாமியக் கருத்துகளை ஆழமாகவும், அதேவேளை நிதர்சனமாகவும், தர்க்க ரீதியாகவும் வெளியிடுகின்றது.

மௌலவி எம். எம். ஏ. அப்துல் லதீப், அக்கரைப்பற்று-4.

உங்களது பதிப்பாக வெளியாகும் 'இஸ்லாமிய சிந்தனை'யைப் படித்து நன்மைபெறும் ஆயிரமாயிரம் முஸ்லிம் வாலிபர்களுள் நானும் ஒருவன். ஆசிரியனாகப் பணிபுரியும் என் கடமையோடு, உங்களது வெளியீட்டை விரும்பி வாசிக்குமாறு மாணவர்களையும் தூண்டி வருகின்றேன்.

ஜனாப் இஸட். ஏ. எம். ஹனிபா, முறுதகஹமுல.

'இஸ்லாமிய சிந்தனை' இரு மலர்களையும் வாங்கி வாசித்தேன். கட்டுரை எழுதுகின்றவர்கள் நீண்ட வசனங்களில்லாமல், மெல்லிய தமிழில் எழுது வார்களாயின் நிச்சயம் பொதுமக்கள் ஆதரிப்பார்கள். எழுத்தாளர்களுக்கு நன்றியும், ஸலாமும் உண்டாகுக!

மௌலவி நஸீம் ஹாஜியார், நாவலப்பிட்டிய.

இஸ்லாமிய சிந்தனையின் வாசகர்கள் இதழுக்கிதழ் பல்கிப்பெருகுவதால், சில வேளைகளில் இதழ் கைக்குக் கிட்டாமலும் போய்விடுகின்றது. ஈழத்தில் இதுவரை வெளிவந்த இஸ்லாமியப் பத்திரிகைகளுக்கெல்லாம் வழிகாட்டும் ஒளி விளக்காக மின்னிக்கொண்டிருக்கும் 'இஸ்லாமிய சிந்தனை'யின் பிரகாசத் திற்கு ஏது தடை? தேடியும் கிடைக்காத, சிந்தையைத் தொடும் சிறந்த கட்டுரைகளைத் தெள்ளு தமிழில் அள்ளித்தரும் 'இஸ்லாமிய சிந்தனை' கொள் விலையிலும் குறைவாக எம் கரங்களில் தவழ்வது அல்லாஹ்வின் அருளன்றோ!

ஜனாப் தா. லெ. மு. அமீனுத்தீன், மருதமுனை.

'ஸக்காத்' கணக்கிட இலங்கை ரூபாவின் குறைந்தபட்ச அளவு (நிஸாப்) பற்றிய ஒரு விளக்கக் கட்டுரையைப் பிரசுரித்தால் நன்று. ஏனெனில், ரூபா வுக்கான 'நிஸாப்' பலராலும் பலவிதமாகச் சொல்லப்படுகின்றது. சிலர் ரூபா 52/- சிலர் ரூபா 42/- வேறு சிலர் ரூபா 5000/- இதில் எது சரி? உங்கள் வெளியீடு விளக்குமென நம்புகின்றேன்.

ஜனாப் ஏ. ஓ. எம். இஸ்மத், புத்தளம்.

இஸ்லாமிய உலகின் உண்மையான பிரச்சினைகளைத் தொட்டுக்காட்டி, அதற்கான நிவாரணங்களையும் தேடும் வகையில் செயல்படும் 'இஸ்லாமிய சிந்தனை' உண்மையிலேயே உலக முஸ்லிம்களால் மாத்திரமல்லாமல், இஸ் லாத்தின்பால் அக்கறை கொண்டுள்ள ஏனைய மதத்தினர்களாலும் வரவேற் கப்படும் என்பதில் ஐயமில்லை.


ஜனாப் எஸ். ஸித்தீக், கொழும்பு-2.

**(இஸ்லாமிய சிந்தனையில் வெளியிடப்படுகின்ற கட்டுரைகள் பற்றிய அபிப் பிராயங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. அவை தெளிவாக வும், சுருக்கமாகவும், பயனுடைய கருத்துகளைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்-குர்ஆன் சிந்தனைகள்:

# த.'.ப்ஹீமுல் குர்ஆன்



''எவர்கள் நிராகரிக்கின்றார்களோ அவர்கள், (மற்றவர்களை நோக்கி) 'நீங்கள் (இறந்து மக்கி) அணுவணுவாகப் பிரிக்கப்பட்டதன் பின்னரும், நிச்சயமாக நீங்கள் (மீண்டும் சிருஷ்டிக்கப்பட்டு) புதிய படைப்பாகி விடுவீர்கள் என்று உங்களுக்கு (ப் பயமுறுத்தி)க் கூறக்கூடிய ஒரு மனிதனை நாம் உங்களுக்கு அறிவிக்கவா?' என்று (பரிகாசமாகக்) கூறுகின்றனர்.

அன்றி, (இவ்வாறு கூறுகின்ற அவர்கள், நமது நபி) 'அல்லாஹ்வின் மீது பொய்யாகக் கற்பனை செய்து கொண்டாரோ, அல்லது அவருக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கின்றதோ[1], என்று (கூறுகின்றனர்) — அவ்வாறன்று. எவர்கள் மறுமையை நம்பவில்லையோ அவர்கள்தாம் (பெரும்), வேதனையிலும் வெகு தூரமானதொரு வழிகேட்டிலும் இருக்கின்றனர்.[2]

வானத்திலும் பூமியிலும், அவர்களுக்கு முன்னும் பின்னும் இருப்பவைகளை அவர்கள் கவனிக்கவில்லையா? நாம் விரும்பினால், அவர்களைப் பூமிக்குள் சொருகிவிடுவோம்; அல்லது வானத்திலிருந்து ஒரு துண்டை அவர்கள்மேல் எறிந்து (அவர்களை அழித்து) விடுவோம்.[3] நிச்சயமாக, (அல்லாஹ்வையே) நோக்கி நிற்கும் ஒவ்வோர் அடியானுக்கும் இதில் ஓர் அத்தாட்சி இருக்கின்றது.[4]''
(34 : 7, 8,9)

1. பெருமானார் (ஸல்) அவர்களை ஒரு பொய்யரென மக்களை நம்பவைப்பது மிகவும் கடினம் என்பதைக் குறைஷித் தலைவர்கள் அறிந்திருந்தனர். ஏனெனில், முழு நாடுமே அவர்கள் ஓர் உண்மையாளரென்பதை ஏற்றுக் கொண்டிருந்தது; அவர்கள் பொய் பேசுவதை யாருமே கேட்டதில்லை. ஆகவே தான் அவர்கள் மக்கள் மத்தியில் சென்று, முஹம்மத் (ஸல்) அவர்கள் இவ்வாறு என்றுமே கேட்டிராத, நம்ப முடியாத ஒரு மறுமை வாழ்க்கையைப் பற்றிப் பேசுகிறார் என்று கூறித் திரிந்தனர். இவ்வாறு கூறும் ஒருவர், குறைஷித் தலைவர்கள் பார்வையில் பின்வரும் இருவரில் ஒருவராகத்தான் இருக்க முடியும்: ஒன்றில், அவர் ஒரு பொய்யராகவே இருக்க வேண்டும்; அல்லது புத்திசுவாதீனமற்றவராக இருக்க வேண்டும். எனினும், இந்த இரண்டாவது குற்றச்சாட்டும் முதலாவதுபோலவே எத்தகைய அடிப்படையுமற்றதாகும். ஏனெனில், தனது புத்தி சுயநிலையில் இல்லாத ஒருவனால் மட்டுந்தான் இத்தகைய அறிவுக் கூர்மையும், சிந்தனைசக்தியுமிக்க ஒருவரைப் பைத்தியம் பிடித்தவரெனக் கூற முடியும். அதனால்தான் இந்த இரண்டாவது குற்றச்சாட்டையும் யாராலும் நம்ப முடியவில்லை.

2. அவர்களின் குற்றச்சாட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள முதலாவது பதில் இதுவாகும்: 'இல்லை. நீங்கள்தான் உங்கள் பகுத்தறிவை உபயோகித்து, உண்மை நிலையை அறிய மறுக்கின்றீர்கள். உண்மை என்னவென்பதை உங்களுக்குச் சொல்லிக் காட்டும் ஒருவர் இதோ உங்கள் மத்தியில் இருக்கின்றார்.

மூலம் :- The Universal Message (November 1979), Pakistan.

ஆனால், நீங்களோ அவர்களுக்குச் செவி சாய்ப்பதில்லை. பதிலாக, உங்களை நரக வேதனையின்பால் இட்டுச் செல்லக் கூடிய பாதையிலேயே விரைந்து செல்கின்றீர்கள். இவ்வாறு, எவர் உங்களுக்கு மோட்ச வழியைக் காட்டுகின்றாரோ அவருக்குச் செவிசாய்ப்பதற்குப் பதிலாக, அவரை நீங்கள் முட்டாள்தனமாக எதிர்க்கின்றீர்கள்.'

3. இஃது இரண்டாவது குற்றச்சாட்டுக்கான பதிலாகும். முதலில் நாம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டிய முக்கிய விஷயம் யாதெனில், குறைஷிகள் மறுமை வாழ்வு ஒன்று உண்டென்பதை மறுப்பதற்குப் பல காரணங்கள் இருப்பினும், அவற்றுள் மூன்று காரணங்கள் மிக முக்கியமானவை. முதலில், தமது செயல்கள் யாவற்றிற்கும் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்ற கொள்கையை ஏற்க மறுத்தனர். காரணம், அவ்வாறு ஏற்றுக்கொண்டால், தாம் விரும்பியவாறு தான்தோன்றித்தனமாகவாழ முடியாதுபோய்விடும். இரண்டாவதாக, இப்போதுள்ள பிரபஞ்சம், மனித வாழ்வு யாவும் அழிந்துபோய், புதிய ஓர் அமைப்பும், மறுமை வாழ்வும் உண்டாகும் என்பது கற்பனைக்கு மெட்டாத ஒரு விஷயம் என அவர்கள் கருதினர். மூன்றாவதாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இறந்து, மக்கி மண்ணுகிவிட்ட மனித உடல், மீண்டும் முன்பிருந்ததே போன்று படைக்கப்பட்டு, உயிரூட்டப்படுமென்பது என்றுமே நடக்க முடியாத ஒரு சம்பவம் என நம்பினர். குர்ஆனில் கொடுக்கப்பட்டுள்ள பதில், இம்மூன்று வகையான மறுப்புகளையும் கருத்திற்கொண்டதாகவும், கடுமையான ஓர் எச்சரிக்கையைக் கொண்டதாகவும் இருக்கிறது. இந்தப் பதிலை நாம் சற்று விரிவாக ஆராய்வோம்.

(அ) பூமியையும் வானத்தையும் அவர்கள் தம் கண்களைத் திறந்து பார்ப்பார்களேயாயின், அவை வெறும் விளையாட்டுப் பொருட்களோ அல்லது தற்செயலாக உண்டானவைகளோ அல்லவென்பதை உணர்ந்து கொள்வர். இப்பிரபஞ்சத்திலுள்ள அத்தனை பொருட்களையும் உற்றுநோக்கினால், அவை யாவற்றையும் படைத்த, சகல வல்லமைகளும் பொருந்திய ஒருவன் இருக்கின்றான் என்பதற்கு அத்தாட்சியாக அவை அமைந்துள்ளன. மேலும், அவை யாவும் ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் பிரகாரம் ஒரு நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். இவ்வாறு மிகவும் உயர்ந்த ஒழுங்கமைப்பில் இயங்கும் இப்பிரபஞ்சத்தின் ஓர் அங்கமான மனிதன், தனக்களிக்கப்பட்டுள்ள பகுத்தறிவு, அதிகாரம் ஆகியவற்றுடன் பொறுப்புணர்ச்சியோ, பதில் சொல்லியாக வேண்டும் என்ற கடமையோ இன்றி, விடப்பட்டுள்ளான் என்பது ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகும்.

(ஆ) இப்பிரபஞ்சத்தின் அமைப்பை ஆழ்ந்து நோக்கும் ஒருவன், இறுதி நாளென்று ஒன்று தோற்றுவிக்கப்படுவது அவ்வளவு புதினமான காரியமல்ல என்பதை உணர்ந்துகொள்ள முடியும். பூமியும், வானங்களும் அவற்றில் அடங்கியுள்ள அத்தனை படைப்பினங்களும் சில இயற்கையான சட்டதிட்டங்களுக்கமையவே இயங்கிக்கொண்டிருக்கின்றன. இச்சட்டங்களில் சிறிதேனும் மாற்றமேற்படின், இந்த அமைப்பே குலைந்து, புதியதொரு அமைப்பிற்கு வழிகோலும். இப்பிரபஞ்சத்தை உருவாக்கிய அதன் கர்த்தாவுக்கு, அதைத் திரும்பவும் உருவாக்குவது அவ்வளவு கஷ்டமான காரியமல்ல. இவ்வாறு உலகைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் படைப்பது அவனுக்கு ஒரு கஷ்டமான காரியமாக இருந்தால், அவன் எவ்வாறு இப்பிரபஞ்சத்தை முதன்முதலில் படைத்தான்?

(இ) அதன்பின் மரித்தோரை உயிர்ப்பிக்கச் சக்தியற்ற ஓர் இறைவன் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை குறித்துக் கேட்கப்படுகின்றது. இறந்துபோனவர்களின் உடல் எம்முறையில் மக்கி மண்ணோடு மண்ணாகிவிட்டாலும், மனித உடலின் அடிப்படையான மூலப்பொருட்கள் இப்பிரபஞ்சத்திற்கு வெளியில் எங்கும் சென்றுவிடுவதில்லை. அஃது இங்கேதான் இருக்க வேண்டும். அவ்வாறெனின், இப்பிரபஞ்சத்தின் கர்த்தாவாகிய இறைவனுக்கு, மனித உடல் மண்ணோடு, காற்றோடு, தண்ணீரோடு கலந்திருப்பினும், அவற்றை ஒன்றுசேர்த்து மீண்டும் படைக்க முடியாதா? மனிதனின் உடலில் உள்ள மூலப்பொருட்கள் ஒரு குறிப்பிட்ட அளவிலும், ஒரு குறிப்பிட்ட வடிவிலும் காற்று, மண், நீர் ஆகியவற்றிலிருந்து அதே இறைவன்தான் படைத்தான். பல மூலப் பொருட்களையும் கொண்டு அவனால் ஒருமுறை படைக்க முடியுமானால், ஏன் திரும்பவும் அவனால் அதனைச் சாதிக்க முடியாது?

இந்த மூன்று ஆதாரங்களுடன் குர்ஆன் ஓர் எச்சரிக்கையையும் விடுக்கின்றது. மனிதன் அல்லாஹ்வின் படைப்பினங்களால் சூழப்பட்டிருக்கின்றான். எங்கு சென்றாலும் அவன் இப்பிரபஞ்சத்தினுள் அன்றி, வெளியே சென்றுவிட முடியாது. அவனிடமிருந்து தப்பியோடி வேறு எங்கும் தஞ்சம் புக முடியாது. அவனது சக்தி எவ்வளவு வல்லமை பொருந்தியதெனில், அவன் நாடினால் பூமியிலிருந்தோ, வானத்திலிருந்தோ பேரழிவுகளை அவன் நினைத்த நேரத்தில், நினைத்த இடத்தில் உண்டு பண்ணிவிட முடியும். தன் தாயின் மடி போன்று மனிதன் தனது புகலிடத்தை அமைத்துக் கொண்டிருக்கும் இப்பூமியினுள்ளே, எத்தகைய அழிவுச் சக்திகள் வேலை செய்து கொண்டிருக்கின்றன என்பதை யாரறிவர்? எப்பொழுது பூகம்பம் ஏற்பட்டு, இதே பூமி ஒரு சவக்காலையாக மாறும் என்பதை யாராலும் கூறமுடியாது. வானத்தை முகடுபோன்று கருதி, எவ்வளவு அமைதியுடன் மனிதன் வாழ்ந்து வருகின்றான்! எனினும், எப்போது இடி மின்னலால் தான் தாக்கப்படுவான் அல்லது பிரளயமொன்றிற்காதாரமான கடும் மழை எப்பொழுது பெய்யும் என்பதை அவன் சிறிதே அறிந்துவைத்திருக்கிறான். நமது நல்வாழ்வு ஒன்றில் மாத்திரமே அக்கறைகொண்டுள்ள ஒருவரின் உபதேசங்களைப் புறக்கணித்துவிட்டு, இறைவனைப் பற்றிய அச்சமின்றி, மறுமையைப் பற்றிய சிந்தனையின்றி, வெறும் கற்பனாவாதத்தில் ஈடுபட்டிருத்தலால் துன்பத்தையே கூவியழைக்கின்றனர்.

4. எத்தகைய பக்கசார்புமின்றி, தன் கருத்துகளில் பிடிவாதமுமின்றி, மனப்பரிசுத்தத்துடன் இறைவழிகாட்டலை நாடிநிற்கும் ஒருவன், தனது மனக்கண்ணை வானம், பூமி ஆகியவற்றின்மீது செலுத்துவதன் மூலம் எவ்வளவோ பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். இறைவன் பக்கலிருந்து திசை திரும்பிய ஓர் இதயமோ, இப்பிரபஞ்சத்தில் தன்னைச் சூழ உள்ள அத்தனையும் பார்த்தாலும் உண்மையின் திசையில் எத்தகைய குறியையும் கண்டு கொள்ளமாட்டாது.

தமிழில்: எம். எச். எம். ஷிபதுல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் தெளிவுரை:

# சிறந்த செயல்கள்

— தாஹிர் ரஸூல் காதிரி —

அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அறிவிப்பதாவது, ''ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, 'இஸ்லாத்தில் மிகவும் சிறந்த செயல் என்ன?' என்று கேட்டார். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள், 'உணவளிப்பதும், தெரிந்தவர் தெரியாதவர் யாவருக்கும் ஸலாம் சொல்லுவதுமாகும்' என்று கூறினார்கள்.''

அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) அறிவிப்பதாவது, ''ஒரு மனிதன் பெருமானார் (ஸல்) அவர்களிடம் 'முஸ்லிம்களில் சிறந்தவர் யார்?'' என வினவினார் அதற்கவர்கள், 'எவரது கரங்களிலிருந்தும், நாவிலிருந்தும் முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருக்கின்றனரோ அவரே சிறந்தவர்' எனக் கூறினார்கள்.''

விசுவாசம் (ஈமான்), மனிதனின் நாளாந்த வாழ்க்கையிலும், அவனது நடத்தையிலும் பல மாற்றங்களை உண்டாக்குகின்றது. மனிதனின் சமுதாயத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கு இரு விஷயங்கள் அவசியமாகின்றன. ஒன்று, பசித்தவனுக்கு உணவளிக்கும் அளவிற்கு அவன் பெருந்தன்மை பெற்றவனாக இருக்க வேண்டும்; மற்றது, அவன் தன் சக மக்களுக்கு வாழ்த்துக் கூறுமளவிற்கு இனிய சுபாவமுள்ளவனாக இருக்க வேண்டும். முஸ்லிம் சமூகத்தில் ஒருவருக்கொருவர் வாழ்த்துக் கூறுவது, 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!) என்பதாகும். தனது சகமக்களுக்கு நல்லன நாடுவதும், சமாதானம் உண்டாகும்படி இறைஞ்சுவதும் ஒரு விசுவாசியின் பண்பாகும். சாந்தி, சமாதானம் உலகில் நிலவ வேண்டுமென்பதே முஸ்லிம் சமுதாயத்தின் இலட்சியமாகும். முஸ்லிம்களின் வாழ்த்துக் கூறல் இந்த சமாதானத்தின் சுலோகமாகவே அமைந்திருக்கின்றது.

முதலில் உள்ள ஹதீஸில், பெருமானார் (ஸல்) அவர்கள் தாராளத் தன்மை, மற்றவர்க்குதவுதல், மற்றவரின் நல்வாழ்வில் அக்கறை ஆகியவற்றை வலியுறுத்தியுள்ளதை அவதானித்தோம். இரண்டாவது ஹதீஸில், ஒரு முஸ்லிம் அநியாயக்காரனாக இருக்க முடியாது என்பதை வலியுறுத்துகிறார்கள். அவன் கருணையுள்ளவனாகவும், மற்றவரின் உயிர், மானம், கௌரவம் ஆகியவற்றின் பாதுகாவலனாகவும் இருப்பான். இது மிகவும் முக்கியமான பண்பாகும். ஏனெனில், அநியாயத்தினதும், அடக்குமுறையினதும் அடிப்படையில் ஒரு சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியாது. சாந்தி, சமாதானம் நிறைந்த வாழ்வுக்கு அடிப்படை – மனிதன் தனது வெறுப்புணர்ச்சிகளை அடக்கி, மற்றவர்களுக்கு எத்தகைய தீங்கும் செய்யாமல் காத்துக்கொள்வதிலேயே தங்கியுள்ளது. மனிதன் மீது சுமத்தப்படும் கொடுமைகள் பலவகையாக உள்ளன: இவற்றுள் கரங்களினாலும், நாவினாலும் செய்யப்படும் கொடுமைகளே மிகவும் கொடி

மூலம்: The Universal Message (November – 1979), Pakistan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவை. உடற்பலம் மிக்க ஒருவன் தனது வலிமையினால் பலவீனரை அடக்கியாளலாம்; மற்றவர் மீது சேற்றை வீசி அவர்களது கண்ணியத்திற்கும், கௌரவத்திற்கும் பங்கம் விளைவிக்கலாம். இந்த ஹதீஸ் மிகவும் விரிவான கருத்தைக் கொண்டது என்பதை நாம் மறக்கலாகாது. எல்லா வகையான இம்சைகளும் இங்கு கண்டிக்கப்படுகின்றன. அஃது அடக்குமுறை அரசியலாயினும் சரி, அநீதியான சமூக அமைப்பாயினும் சரி, அல்லது வலியான் எளியானைச் சுரண்டுவதானாலும் சரி, அல்லது மனிதரது உடல், உடைமை, கண்ணியம் என்பவற்றிற்கு ஆபத்து வருத்துவதாக இருப்பினும் சரியே. இதேபோன்று மனித குலத்திற்கு அல்லது ஒரு தனிமனிதனுக்குத் தீமையை வருத்தக்கூடிய ஒரு சொல்லோ, தீர்ப்போ நாவினால் செய்யக்கூடிய அநியாயமாகும்.

திர்மிதியில், இப்னு ஹிப்பான் அறிவிப்பதாக வரும் வேறொரு ஹதீஸ், ''எவனுடைய கரங்களிலிருந்தும், நாவிலிருந்தும் மக்கள் பாதுகாப்பாக இல்லையோ...'' என்று துவங்குகின்றது. அதாவது இங்கே முஸ்லிம்கள் மாத்திரமல்லாது, மக்கள் எல்லோரும் உள்ளடக்கப்படுகின்றனர்.

அல்லாஹ்வின் வேதத்தை மக்களுக்குப் படித்துக் கொடுப்பதோடு மட்டும் திருத்தூதர் (ஸல்) அவர்களின் வேலை முடிந்துவிடுவதில்லை. குர்ஆனின் உண்மையான உள்ளர்த்தத்தை விளங்க வைத்து, அவற்றை மக்கள் காணக்கூடியவிதத்தில் செயல் ரூபம் கொடுத்து, அக்கருத்துகள் ஒரு சமுதாயத்தில் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதைக் காண்பிப்பதும் அவர்களது வேலையாகும். சொற்கள் எவ்வளவு சக்திவாய்ந்தனவாகவும், கூர்மையானவையாகவும் இருப்பினும், அவை எமது மனதில் பிரதிபலிப்பை ஏற்படுத்த வேண்டுமானால், அவற்றுக்குச் செயல் ரூபம் கொடுக்கப்படல் வேண்டும். போதனைகள், சாதனையில் காட்டப்படாதவரையில் அவற்றை மக்களால் சிறப்பாக விளங்கிக் கொள்ள முடியாது.

''அவ்வாறே, இந்தக் குர்ஆனையும் (நபியே!) நாம் உமக்கு அருளினோம். மனிதர்களுக்காக (உம்மீது) அருளப்பட்ட இதை, நீர் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்பியும். (இதன் மூலம்) அவர்கள் கவனித்தறிந்து கொள்வார்கள்.''

(அல்குர்ஆன் - 16 : 44)

இத்திருவசனங்களுக்கொப்ப பெருமானார் (ஸல்) அவர்கள், தாம் போதித்தவற்றைச் செயலிலும் காட்டினார்கள். அவர்களது வாழ்நாளிலே யாரையும் தமது கரங்களினாலோ அல்லது நாவினாலோ நோவினை செய்தது கிடையாது. அவர்களது சேவகராக நெடுங்காலமாக இருந்த அனஸ் (ரலி) அவர்கள், தம்மைப் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு வேளை கூட ஒரு கடிந்த வார்த்தை கொண்டு அழைத்தது கிடையாது என்று கூறியுள்ளார்கள். அதேபோன்று பசியென்று வரும் யாவருக்கும் உணவளிக்கும் பழக்கம் அவர்களிடம் இருந்தது. தமக்கு இல்லாவிட்டாலும், பிறர்க்கு வழங்கி மகிழ்வார்கள். யாராவது ஏழைகள் வருவார்களாயின் தமது போர்வையை விரித்து அதில் அமரச் செய்து பரிமாறுவார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் யாரையாவது சந்தித்தால் முதலில் 'ஸலாம்' சொல்வார்கள். தம் வீட்டுக்குள் நுழையும் போதும், வழியில் குழந்தைகளைக் காண்கின்ற போதிலும் 'ஸலாம்' சொல்வார்கள். சந்தித்ததும் கைகுலுக்கி முகமன் விசாரிப்பார்கள். மற்றவர் தமது கரத்தை எடுக்கும் வரையில் தம் கரத்தால் பற்றிக்கொண்டிருப்பார்கள். இவ்வாறுதான் அவர்கள் தமது போதனைகளைச் செயலில் காட்டினார்கள்.

தழுவல்: 'முஹாஜிர்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரி மர்யம் ஜெமீலாவுடன் ஓர் உரையாடல்!

நிவ்யோர்க்கில் ஒரு யூத குடும்பத்தில் பிறந்து, இஸ்லாத்தின் உயர்போதனைகளால் கவரப்பட்டு இஸ்லாத்தைத் தழுவியவர் மர்யம் ஜெமீலா பேகம். தற்போது பாகிஸ்தானில் வசித்து வரும் இவர், இருபதிற்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். அவருடைய அநேக நூல்கள் மேல்நாட்டு நாகரிகத்தின் போலித்தன்மையை அம்பலப்படுத்துவனவாக அமைந்துள்ளன. சகோதரி ஜெமீலா இந்தியாவிலுள்ள ராம்பூரிலிருந்து வெளிவரும் 'ஹிஜாப்' என்ற மாதர் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

**எத்தகைய சூழ்நிலையில் நீங்கள் உங்கள் இளமைப் பருவத்தைக் கழித்தீர்கள்? அக்காலத்தில் நீங்கள் எத்தகைய கல்வியைப் பெற்றீர்கள்? அக்கல்வி உங்கள் மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது?**

எனது குழந்தைப் பருவத்தையும், வாலிபப் பருவத்தையும் அநேகமாக 'லாச்மொன்ட்' என்ற நிவ்யோர்க்கின் புறநகரிலேயே கழித்தேன். முழுக்க முழுக்க அமெரிக்கச் சூழலில், யூதக் குடும்பத்தில்தான் பிறந்து வளர்ந்தேன். யூதக் குடும்பமாயினும் அமெரிக்க வாழ்க்கை முறையை முற்றிலும் ஏற்றுக் கொண்ட ஒரு குடும்பம். எனினும், எமது குடும்பம் ஏனைய அமெரிக்கக் குடும்பங்களைவிட ஒரு விஷயத்தில் வேறுபட்டிருந்தது. அதுதான் நமது குடும்பம் வைத்திருந்த மிக நெருங்கிய பந்தத் தொடர்பாகும். விவாக விலக்குகளோ, பிரிவினைகளோ எமது குடும்பத்தில் இருக்கவில்லை. எனவே பெற்றோரும் தமக்கிடையேயும், தம் குழந்தைகளுடனும் மிகவும் பாசம் வைத்திருந்தனர். 'கௌரவமான' என்ற சொல்லுக்கு எல்லாவகையிலும் பொருந்தக் கூடிய வகையில் எனது குடும்பம் இருந்தது. குடும்பத்தில் சச்சரவுகள் மிகவும் குறைவாகவே இருந்தன; மோசமான வார்த்தைகள் குடும்பத்தில் ஒருபோதும் பிரயோகிக்கப்பட்டது கிடையாது. குடும்பத்தில் நடந்த மிகப் பெரும்பாலான திருமணங்கள் வெற்றிகரமாகவும், சந்தோசமாகவும் அமைந்தன. குடும்பத்தில் குற்றச் செயல்களுக்காக யாரும் தண்டிக்கப்படவுமில்லை; சிறுவர்கள் யாரும் பால்ய குற்றவாளிகளாகவுமில்லை.

நான் சமூகத்தின் பொதுப் பள்ளிக்கூடத்தில் முழுக்கமுழுக்க மதசார்பற்ற அமெரிக்கக் கல்விமுறையில் பயிற்றப்பட்டேன். உயர் பள்ளிப்படிப்பை முடித்துக் கொண்டு, எனது பதினெட்டாவது வயதில், நிவ்யோர்க் சர்வகலாசாலையில் சேர்ந்து இரண்டு வருடங்கள் மட்டுமே என்னால் படிக்க முடிந்தது. கடுஞ் சுகயீனம் காரணமாகப் படிப்பை இடைநிறுத்த வேண்டியேற்பட்டது. நான் படித்த பாடசாலைகள் சிறந்தவையாகக் கருதப்பட்டன; கல்வி நிலை உயர்ந்ததாகவிருந்தது; போதனுமுறை மிகவும் பயன்தரக்கூடியதாகவும், கட்டுப்பாடு நியாயமான அளவு சிறந்ததாகவும் இருந்தது. எனினும், பாடத் திட்டத்தில் எத்தகைய சமயக் கல்வியும் சேர்க்கப்படவில்லை. நான்

மூலம்: **Awake (May - 1971), South Africa.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகள், இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம், கணிதம், கலைகள் எல்லாம் பற்றிப் படித்தேன். ஆனால், இறைவனைப் பற்றி எதுவுமே படிக்கவில்லை. எனினும் அதிர்ஷ்டவசமாக, வீட்டில் கிடைத்த ஊக்குவிப்பும், எனது அறிவார்வமும், உயர்ந்த ஆன்மிக அறிவுத் தாகமும் பள்ளிக்கூடப் பாட நூல்களுக்கும் மேலாக என்னை அநேக நூல்களை வாசிக்கத் தூண்டின. அல்லாஹ்வின் அருளால், இஸ்லாத்தைப் பற்றி ஓரளவாவது நான் பெற்ற அறிவும் முழுக்க முழுக்க எனது சொந்த முயற்சியினாலேயே பெறப்பட்டது.

**உங்கள் பிற்கால வாழ்க்கையை உங்கள் சூழல் எவ்வாறு பாதித்தது? எந்த அளவுக்குப் பாதித்தது?**

உண்மையைக் கூறுவதாயின், நான் வாழ்ந்த சூழலில் முழுக்க முழுக்கச் சிக்கியிருந்த போதிலும், நான் ஒருபோதும் அதில் சங்கமமாகிவிடவில்லை. உலகின் பல 'பாகங்களிலுமுள்ள ஏனைய கலாசாரங்களையும், வாழ்க்கை முறைகளையும் பற்றி நான் பரவலாக வாசித்ததன் பயனாக, என்னுடைய சொந்த கலாசாரத்தை நான் விமரிசன அடிப்படையிலேயே நோக்கினேன். நான் எப்போதும் மேலோட்டமான சிந்தனை நயவஞ்சகத் தன்மை, பகட்டுத்தன்மை ஆகியவற்றை வெறுத்தொதுக்கி, உயர் ஆன்மிகக் கருத்துகளின் சிந்தனையால் ஏற்படுகின்ற எளிமையையும் அமைதியையும் வேண்டி நின்றேன். அதனாலேதான் மதுபான வகைகளையோ போதை வஸ்துகளையோ நான் என்றுமே ஆசித்ததில்லை. நம் நாட்டில் வழக்கிலுள்ள எதிர்பாலாருடன் திருமணத்திற்கு முன் உறவு கொள்ளும் முறையையும் நான் வெறுத்தொதுக்கினேன். நான் தனிமையிலிருந்தாலும், சந்தோசமாக இருக்கக்கூடிய போதிய ஆன்மபலம் என்னிடமிருந்தபடியால், அநேகமாக நவீன இளைய தலைமுறையினர் போன்று பொழுது போக்கிற்காகவும், இன்பத்திற்காகவும் சினிமா, வானொலி, டெலிவிசன், நாடக அரங்கு, நடனக் கச்சேரிகள் போன்றவற்றை நம்பியிருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**உங்களுடைய வாழ்க்கையில் நடைபெற்ற மறக்க முடியாத சம்பவங்கள் ஏதும் உண்டா?**

எனது வாழ்க்கையில் மறக்க முடியாத முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி, எனது பத்தொன்பதாம் வயதில், அதாவது 1953ல் எனக்கேற்பட்ட நோயும், அத்தோடு நான் திருக்குர்ஆனை இனங்கண்டு கொண்டதுமாகும். இந்நிகழ்ச்சி, எனது கண்களை ஆன்மீக உண்மையின் பால் திறந்துவிட்டது. இன்றைய மருத்துவ அடிப்படையில் குணப்படுத்த முடியாததெனக் கருதப்பட்ட எனது நோயும், அதே நேரத்தில் குர்ஆனை நான் அறிந்து கொண்டதுமான நிகழ்ச்சியும் எனக்கு என்றுமே மறக்க முடியாத ஒரு பாடத்தைக் கற்றுத் தந்தது. இந்த உலகில் பரிபூரணத்துவம் வாய்ந்தது என்று கருதக்கூடியது ஒன்றுமில்லையென்பதும், 'வெற்றி' என்று கருதப்படுபவை யாவும் மரணத்தோடு முடிவடையும் ஒரு மாயை என்பதுமே அப்பாடமாகும். மனிதனுக்குள்ள ஒரே நம்பிக்கை இறைவன்பால் உள்ளதுதான். நோய் போன்றவற்றால் துன்பமுறுபவன் இறைவனிடம், கருணைக்காக இறைஞ்சுவதையும், செய்த தவறுக்கு மன்னிப்பு வேண்டி மன்றாடுவதையும், நல்லாத்மாக்களுடன் சேர்த்து எம்மையும் 'ஜன்னத்'தில் சேர்க்கும்படி கேட்பதையும்விடச் சிறந்தது வேறேதுமில்லை. குர்ஆன் கூறுவது போன்று, ''நிச்சயமாக அல்லாஹ்வின் ஞாபகத்தில்தான் நெஞ்சங்கள் அமைதியடைகின்றன.''

**பர்தா அணிவதால் அல்லது அணியாமலிருப்பதால் ஏற்படும் பிரச்சினைகளை நீங்கள் எவ்வாறு தீர்த்துக் கொண்டீர்கள்?**

நான் 1961ல் அமெரிக்காவில் இஸ்லாத்தைத் தழுவியதும் என்னால் இயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றளவு எளிமையாகவும், ஒழுங்காகவும் உடையணிய முயற்சி செய்தேன். தேவையற்ற ஆபரணங்கள், உதட்டுச் சாயம், ஏனைய அழகுசாதனப் பொருட்கள் ஆகியவற்றை உபயோகிப்பதை நிறுத்திக் கொண்டதுமல்லாமல், அந்நிய ஆடவருடன் கலந்துறவாடுவதையும் நிறுத்திக் கொண்டேன். எனினும், என்னால் அங்கு முழுமையாகப் பர்தா முறையை அனுஷ்டிக்க முடியவில்லை. எதிர்பாலாருடன் இஸ்லாம் பற்றிய கலந்துரையாடல்களில் ஈடுபடவும், அவர்களுடன் தொழில் தொடர்புகள் வைத்துக்கொள்ளவும் செய்தேன். முழுமையான பர்தா முறையை, பாகிஸ்தானுக்கு வந்த பின்னர்தான் அனுஷ்டிக்கலானேன். தற்போதும் நான் வெளியே செல்ல நேரும் போதெல்லாம் பர்தாவுடன்தான் செல்கின்றேன். வீட்டுக்கு வெளியே பர்தா இன்றிச் செல்வது நிர்வாணமாகச் செல்வதற்குச் சமம் என உணர்கின்றேன். எங்களுடைய வீட்டில் வேலையாட்கள் இல்லாதபடியால் கடைத்தெருவுக்குச் சென்று வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கி வரவும், அயலிலுள்ள சிநேகிதர்களைக் காணவும் நான் அடிக்கடி வெளியே செல்வதுண்டு.

பர்தா முறையில் மிகவும் உறுதியான நம்பிக்கையுடையவள் நான். ஏனைய மதங்களைவிட இஸ்லாத்தை உயர்வாகக் காட்டும் ஓர் அம்சம் என்னவென்றால், அது மானக்கேடான காரியங்களை விலக்குவதோடுமட்டும் நில்லாமல், அத்தகைய மானக்கேடான காரியங்கள்பால் இட்டுச் செல்லக்கூடிய எல்லாவழிகளையும் அடைத்தும் விடுகின்றது. ஆண்–பெண் உறவு முறையில் விதித்துள்ள கட்டுப்பாடும், ஒழுங்காக உடையணிவதில் காட்டும் கரிசனையும், இஸ்லாமிய கலாசாரம், ஒழுக்கக் கட்டுக்கோப்பு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் முக்கியமானவை. அதே நேரத்தில், இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பர்தா, பாரம்பரியக்குடும்பங்களினால் மிகவும் கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளது என்பதையும் இது சில சமங்களில் ஷரீஅத் வேண்டி நிற்கும் கட்டுப்பாடுகளையும்விட மிகமிகக் கடுமையானவை என்பதையும் நாம் மறத்தலாகாது. பெருமானார் (ஸல்) அவர்கள், பெண் ஒழுங்காக உடையணிந்து சென்று தம் அலுவல்களைக் கவனிப்பதற்கு மிகவும் தெளிவாக அனுமதியளித்திருக்கின்றார்கள். பெண்கள் பள்ளிவாசலுக்குத் தொழுகைக்காகச் செல்வதை ஹதீஸ் அனுமதிக்கின்றது. எனினும்; அவர்கள் வீட்டில் தொழுவதுதான் ஏற்புடையது. தமது வீட்டுக் கடமைகளைச் செவ்வனே முடித்துவிட்டு, வெளியே தம் நண்பர்களைக் காணச் செல்வதையோ, விருந்துகளில் கலந்துகொள்வதையோ ஷரீஅத் விலக்கவில்லை.

**இப்போது எவ்வாறு வாழ்வைக் கழிக்கின்றீர்கள்? அதில் திருப்தி காண்கின்றீர்களா?**

என்னுடைய நேரத்தை எழுதுவதிலும், வாசிப்பதிலும், எனது மூன்று குழந்தைகளையும் கவனித்துக் கொள்வதிலும், வீட்டுப்பணிகளில் ஈடுபடுவதிலுமே செலவழிக்கின்றேன். அநேகமான வானொலி நிகழ்ச்சிகள் கீழ்த்தரமானவையாகவும், நேரத்தை வீணாக்குபவையாகவும் இருப்பதால் அவற்றை வெறுத்தொதுக்குகின்றேன். நான் பாகிஸ்தானில் வசிக்கும் இவ்வளவு காலத்திலும், ஒரு நாள் கூட சினிமாவுக்குப் போனது கிடையாது. பொழுது போக்கு என்ற பெயரில் நடைபெறும் இந்தத் தரங்கெட்ட நிகழ்ச்சியில் பங்குகொள்ள எனக்கு ஆசையுமில்லை. உயிர்த்துடிப்பும், குறும்புத்தனமுமுள்ள சுகதேகிகளான மூன்று குழந்தைகள் ஒரு தாயை இருபத்திநான்கு மணிநேரமும் பொழுதுபோக்குவிக்கவும், மகிழ்விக்கவும் போதுமானவர்கள் என்பது எனது கருத்து. இதற்கும் மேலாகச் சிறிது வேடிக்கை வேண்டுமென்றால், ஒன்பது வயதான கிளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையொன்று என்னிடமுள்ளது. இதைக் கடந்த எட்டு வருடங்களாக நான் வளர்த்து வருகின்றேன்.

எனக்கேற்பட்ட பெருநோயின் பின்னரும் எனது கணவருடனும், குழந்தைகளுடனும் மகிழ்ச்சியாக வாழவும், என்னுடைய மார்க்கத்திற்காக எழுத்துத் துறையில் ஈடுபடவும் எனக்கு உதவியளித்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நான் என்றும் நன்றியுடையவளாவேன். ஒரு மனைவியைப் பொறுத்தமட்டில் அவளோடு திருப்தியடைந்துவாழும் ஒரு கணவனைப் பெற்றிருத்தல் போன்று வேறொன்றுமில்லை. ஒருவரது வாழ்வின் பணிகளை அல்லாஹ் ஏற்றுக்கொண்டான் என்ற திருப்தியுடன் மரணிப்பதுதான் வாழ்வின் உயர் இலட்சியமாக அமைதல் வேண்டும். இதனை வேண்டியே நான் அல்லும் பகலும் அவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**உங்களது குழந்தைகளுக்கு எத்தகைய கல்வியை அளிக்கின்றீர்கள்? அக்கல்வி முறை குழந்தைகளின்மீது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் பற்றிக் கூற முடியுமா?**

எனது குழந்தைகளின் கல்வியும், அவர்கள் மீது அதன் எதிர்காலப் பாதிப்பும் பற்றியே நான் அதிகம் சிந்திக்கின்றேன். அது பற்றியே நான் ஆழ்ந்த கவலையும் கொண்டிருக்கின்றேன். அவர்கள் கல்வி பயிலும் உர்து மொழிப் பள்ளிக்கூடங்கள் பற்றியோ, ஆங்கிலமொழிப் பள்ளிக்கூடங்களைப் பற்றியோ எனக்குப் பூரண திருப்தி கிடையாது. இவையிரண்டும் போதிய தரமற்றவையாகவும், மதசார்பற்ற கல்வி முறையைக் கொண்டதாகவும் இருக்கின்றன. நான் என்ன கருத்துகளைப் போதனை மூலமும், எனது நடத்தை மூலமும் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க விரும்புகின்றேனோ அவற்றுக்கு நேர்முரணாகவே கல்வி முறை அமைந்திருக்கின்றது. இந்த 'இஸ்லாமியக் குடியரசி'ல் இன்றைய தேவைகளுக்கேற்ப நவீன கல்வியுடன் இஸ்லாத்தையும் போதிக்கக்கூடிய பாடசாலைகள் மிகவும் சொற்பமே இருக்கின்றன, என்பதை நினைக்கும் போது மிகவும் வேதனையாகவே இருக்கின்றது. எனது கணவர் ஜமா அதே இஸ்லாமியின் முழுநேர ஊழியராக இருப்பதாலும், இரவு பகலாக அவரது சேவை அதற்குத் தேவைப்படுவதாலும், குழந்தைகளின் போதனையும் பயிற்சியும் என் பொறுப்பிலேயே உள்ளன. இப்பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்ற அல்லாஹ் எனக்குத் தேவையான சக்தியை அளிப்பானாக! இன்றுள்ள கல்விமுறையின் பாதிப்பிலிருந்து அவனே எமது குழந்தைகளையும் காப்பானாக!

**உங்களது முஸ்லிம் சகோதரிகளுக்கு நீங்கள் விடுக்கும் செய்தி என்ன?**

அவசியமாகவும், அவசரமாகவும் உள்ள தற்போதைய தேவை என்னவென்றால், அறிவுக்கூர்மையும், தகுதியும், உணர்ச்சித்துடிப்புமுள்ள, உளப்பரிசுத்தத்துடன் செயல்படக்கூடிய சகோதரிகள் ஒன்றுகூடி, மாதர்களுக்கான ஓர் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். அத்தோடு தமது பெண் பிள்ளைகளையும் அதில் சேர்ந்துழைக்கப் பழக்க வேண்டும். தம் பிள்ளைகளுக்கு உருப்படியான இஸ்லாமிய பயிற்சியளித்து, வீட்டுக்கு வெளியேயுள்ள இஸ்லாமிய எதிர்ப்புச் சக்திகளின் தாக்கத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுதல் தனிப்பட்ட தாய்மார்களால் மட்டும் முடிந்த காரியமன்று; இதற்குக் கூட்டு முயற்சி கட்டாயமாகத் தேவைப்படுகின்றது. ஓர் இஸ்லாமிய மறுமலர்ச்சியை வேண்டி நிற்கும் ஒவ்வோர் இஸ்லாமியத் தாயும் தம் பிள்ளைகளை இத்தகையதோர் அமைப்பில் சேர்ப்பதைத் தம் முதல் கடமையாகக் கொள்ள வேண்டும். நாம் என்னென்ன கருத்துகளை உயிரினும் மேலாக மதிக்கின்றோமோ, அவையாவற்றிற்கும் எதிராகக் கலகம் செய்யும் மனப்பாங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தான் பள்ளிக்கூடத்திலும் வீட்டுக்கு வெளியேயும் நமது பிள்ளைகள் பெறுகின்றனர். இந்நிலையில், இஸ்லாத்தின் மீது அன்புள்ளவர்களாக அவர்கள் எவ்வாறு வளர்வார்கள்? இக்காரியத்தைச் சாதிப்பதில் நின்றும் தப்பிக் கொள்ள நாம் வீட்டுவேலை, நேரமின்மை போன்று சாக்குப்போக்குகளைக் கூறிக்கொண்டே இருப்போமானால், எமது குழந்தைகள் வளர்ச்சியடையும்போது, அவர்களுடைய முழுக் கவனமும் நவீன மோஸ்தர்களிலும், சினிமா, பொப்பாடகர்கள், ஆபாசப் பொழுதுபோக்குகள், வீண் விளையாட்டுக்களிலும்தான் செல்லுமே தவிர, இஸ்லாத்தின் பாலல்ல என்பதை நாம் உணரல்வேண்டும். இவற்றில் நமது குழந்தைகள் பிரியம் வைக்கக் காரணம், அவர்கள் அடிப்படையிலேயே மோசமானவர்கள் என்பதால் அல்ல; நாம் உருப்படியானவற்றைக் கற்றுக் கொடுக்காவிட்டால் அவர்களுடைய சூழல் இவற்றைத்தான் கற்றுக் கொடுக்கும் என்பதால்தான். இத்தகைய தீமைகளை ஒழித்துக்கட்ட வேண்டுமானால், உண்மையாகவே இஸ்லாமிய மறுமலர்ச்சியை வேண்டி நிற்கும் சகோதரிகள் ஒன்றுகூடி, நமது குழந்தைகளுக்குக் குர்ஆனையும், பெருமானார் (ஸல்) அவர்களின் ஸுன்னாவையும், எமது முன்னோரினதும் தற்போதுள்ளவர்களினதும் வீர வரலாறுகளையும், அரபுப்பாஷையின் அடிப்படைகளையுமாவது போதிப்பதற்கான வழிவகைகளையும் அமைக்க வேண்டும். மேலும், இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றும் முறைகளை — வுழு, தொழுகை ஆகியவற்றின் ஒழுங்குகள் போன்றவற்றை - சம்பிரதாயபூர்வமாக மட்டுமன்றி, அவற்றில் ஆர்வமும், ஆசையும் ஏற்படும் வகையிலும் சொல்லிக் கொடுக்க வேண்டும். இத்தகைய பயிற்சி முறைகளுக்குப் பெரிய செலவினங்களொன்றும் ஏற்பட்டுவிடாது, இதற்கான பாடப் புத்தகங்களைப் பெற்று, வீடுகளிலேயே வகுப்புகளை நடாத்தலாம். தேவைப்படுவதெல்லாம் சிறந்த இயக்கவமைப்பும், நேரமும், உற்சாகமுமாகும். எத்தனையோ தாய்மார்கள் பக்தி சிரத்தையுடன் தொழுகையை நிறைவேற்றி, ஏனைய கடமைகளையும் செய்கின்றனர். ஆனால், தம் பிள்ளைகளுக்கு அவற்றை முறையாகக் கற்றுக் கொடுப்பதில்லை. பக்திசிரத்தையுள்ள பெரும்பான்மையான முஸ்லிம்கள் செய்யும் பெருந்தவறு அவர்கள் குர்ஆனை ஓதுவதை வெறுமனே ஒரு சடங்காகச் செய்து வருகின்றார்களே தவிர, அதன் கருத்தை விளங்கித் தமது வாழ்வில் நாளாந்தம் பின்பற்றும் ஒன்றாகக் கருதுவதில்லை. முஸ்லிம்கள் குர்ஆனை விளங்கி, அதனைச் செயலிலும் கொணருவார்களானால் இவ்வுலகம் இதுவரை காணாத மாபெரும் புரட்சியொன்றைக் காணுமென்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை.

(தமிழில்: 'முஹாஜிர்')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான்மறையும்

## வானவியலும்

## 3

# பிரபஞ்சத்தின் ஆக்கமும் அழிவும்

— ஸீயெம்மே அமீன் —

ஞாயிற்றுத் தொகுதி, நட்சத்திர மண்டலங்கள், நெபுலாக்கள், பிரபஞ்சம் போன்ற பிரமாண்டமான பொருள்களின் ஆக்கம், அழிவு பற்றி ஆராயும்போது, இப்பொருள்களுக்கு ஆதாரமாக அமைகின்ற சிறிய பொருள்களையும், அவற்றோடு சம்பந்தமான சில எளிய விஞ்ஞான விதிகளையும் சுருக்கமாகவேனும் அறிந்திருத்தல் அவசியம். சுருங்கக் கூறின், பொருள்களைப் பற்றியும், அவற்றில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றியும் ஆராயும் பௌதிகவியலின் சில அம்சங்களைப் பற்றிய அறிவு எமது ஆய்வுக்கு அடிப்படையாகும்.

அன்றாட வாழ்வில் நாம் மூன்று வகையான பொருள்களைக் காண்கின்றோம். அவை திடப்பொருள், திரவப் பொருள், வாயுப்பொருள் என்பனவாகும். இம்மூன்று வடிவங்களும் பொருள்களின் வெவ்வேறு நிலைகளேயாகும். திடப்பொருள்களைச் சூடாக்கினால் அவை குறிப்பிட்ட வெப்ப நிலையை அடைந்த பின் திரவமாகின்றது. அது மேலும் சூடாக்கப்பட ஆவியாகின்றது. இதே போன்று, எந்தவொரு வாயுவையும் தகுந்த சூழ்நிலையில் (அதாவது தேவையான அமுக்கத்தில்) குளிர்வித்தால் முதலில் திரவமாகும். திரவத்தைக் குளிர்வித்தால் திடப்பொருளாகும்.

### அணு

பொருள்கள் அனைத்தும் மூலக்கூறுகளால் (Molecule) ஆனவை. மூலக்கூறுகள் எவ்வளவு சிறியவையாக இருந்தாலும், அவை அணு எனப்படும் மேலும் நுண்ணிய பொருளால் ஆனவை.[1] அணு, பொருளின் மிகச் சிறிய பகுதி என்பதை வலியுறுத்தி அதுபற்றி விபரமாகக் கூறியவர் டெமாக்ரடீஸ் ஆவர். அணுக்கள் எப்போதும் இயக்கத்தில் இருக்குமென்றும், அவை பலவிதங்களில் ஒன்றுடன் ஒன்று சேர்கின்றன என்றும், அதனால் பற்பல அமைப்புகளும், உருவங்களும் தோன்றுகின்றன என்றும் அவர் கூறினார்.[2] எனவே, மிகச் சிறிய ஒன்றான அணுவே அகில உலகப் பொருள்கள் அனைத்திற்கும் அடிப்படையாகும்.

ஒரே இனத்தை மட்டும் சேர்ந்த அணுக்களைக் கொண்ட ஒரு பொருள் மூலகம் (Element) எனக் கூறப்படுகின்றது.[3] இதுவரை ஏறக்குறைய 104 மூலகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வெள்ளி, செம்பு, இரும்பு, அலுமினியம், ஹைட்ரஜன் போன்றன நமக்கு நன்கு பரிச்சயமான மூலகங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மூலக்கூறுகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவகையான அணுக்களால் ஆனவை. இவை சேர்வைகள் (Compounds) எனப்படுகின்றன. சமையலுக்கு உபயோகமாகின்ற உப்பு ஒரு சேர்வைப் பொருளாகும். அதன் இரசாயனப் பெயர் சோடியம் குளோரைட் (Sodium chloride). ஒரு மூலக்கூறு சோடியம் குளோரைட், சோடியம் மூலக அணு ஒன்றினாலும், குளோரின் மூலக அணு ஒன்றினாலும் ஆக்கப் படுகிறது. இதே போன்று இரண்டு ஹைட்ரஜன் அணுக்களும் ஓர் ஒட்சிசன அணுவும் சேர்ந்து நீர் ஆகின்றது.[5] இவ்வாறே உலகிலுள்ள எல்லாப் பொருள்களும், ஒரு மூலகத்தாலோ அன்றேல் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மூலகங்கள் சேர்ந்த சேர்வைகளாலோ ஆனவை.

அணு, கரு (Nucleus) வையும் இலெக்ட்ரோன்களையும் உள்ளடக்கியிருக்கிறது. கோள்கள் சூரியனைச் சுற்றி வருவது போல, இலெக்ட்ரோன்கள் வேறுபட்ட தூரங்களில் கருவைச்சுற்றி வருகின்றன. கருவை ஓர் இலெக்ட்ரோன் சுற்றிவரின் ஹைட்ரஜன் அணுவாக அமைகின்றது. இரு இலெக்ட்ரோன்கள் சுற்றி வந்தால் ஹீலிய அணுவாக அமைகின்றது. நைட்ரஜன், ஒட்சிசன், இரும்பு, தங்கம், தோரியம், யுரேனியம் என்னும் மூலகங்களில் முறையே 7, 8, 26, 79, 90, 92 இலெக்ட்ரோன்கள் தத்தமது கருக்களைச் சுற்றி வருகின்றன. இவ்வுலகில் காணப்படுகின்ற ஏனைய மூலகங்களும், தத்தமது கருக்களைச் சுற்றிக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஓடுகின்ற இலெக்ட்ரோன்களுக்கு இணங்கவே அமைந்துள்ளன.[5]

மின்சக்தி

அணுக்கருவில் புரோட்டன்களும், நியூட்ரன்களும் உண்டு. புரோட்டன்கள் நேர்மின்சாரம் கொண்டவை. நியூட்ரன்கள் நடுநிலையானவை. அணுக்கருவைச் சுற்றி வட்டப்பாதைகளில் இயங்குகின்ற இலெக்ட்ரோன்கள் எதிர் மின்சாரத்தையுடையன. ஆகவே, ஓர் அணுவில் இடைவிடாது இவ்விருவகையான மின்சக்திகளும் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

எல்லா அணுக்களும் நேர் மின், எதிர் மின்சக்திகளாகவே இருப்பதனால், பல்வேறு மூலகங்கள், வேறுபட்ட பண்புகளையும் உருவங்களையும் உடையதாக இருப்பதேன்? என்று ஒருவர் வினவலாம். உதாரணமாக, ஓர் அலகாக உள்ள நேர் மின்சக்தியை அதேயளவு ஆற்றலுடைய எதிர் மின்சாரமுள்ள ஓர் இலெக்ட்ரோன் சுற்றி வந்தால், அது ஹைட்ரஜன் என்னும் வாயுவின் உருவத்தைப் பெறுகின்றது. நேர்மின் சாரத்தின் இரு அலகுகளை, வேறுபட்ட பாதைகளில் இரு இலெக்ட்ரோன்கள் சுற்றி வரும்போது அது ஹீலியத்தின் (Hellium) உருவைப் பெறுகிறது.[6] இதுபோன்றே ஏனையனவும் அமைகின்றன.

எனவே, எமது பூமியை ஒன்றுபட்டு உருவாக்கிய எல்லாப் பொருள்களும், எமது வளிமண்டலத்தின் உருவில் பூமியைச் சூழ அமைந்துள்ள எல்லாப் பொருள்களும், பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் உண்மையில் நேர், எதிர் மின்சக்திகளேயன்றி வேறன்று.

இலெக்ட்ரோன்களும், புரோட்டன்களும் நேர், எதிர் மின்சக்திகளாகவே இருப்பதனால், புரோட்டன்களுக்கு மிக நெருக்கமாக இலெக்ட்ரோன் வருவதனாலோ அல்லது புரோட்டனை விட்டு இலெக்ட்ரோன் தூரச் செல்வதனாலோ அணுக்கள் சிதைவடையலாம்.[7] இவ்வாறு அணுக்கள் சிதைவடைய, அவை பொருளின் உருவத்தை இழந்து சக்தியாக மாற்றமடைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளும் சக்தியும் ஒன்றே

எமது அண்டம், ஏனைய அண்டங்கள், அனைத்தும் சேர்ந்தமைந்த இப்பிரபஞ்சமானது, பொருளின் உருவத்தைப் பெற்றுள்ள ஒரு குறிப்பிட்ட அளவு சக்தியேயாகும். பொருள் வெறும் சக்தியே என்ற உண்மையை 1905ல் ஐன்ஸ்டீன் ஒரு சமன்பாடு மூலம் விளக்கிக் காட்டினார். அது பின்வருமாறு:

$$E = MC^2$$

இச்சமன்பாட்டில் E என்பது ஏர்கில் அளக்கப்பட்ட சக்தியையும், M என்பது கிராமில் அளக்கப்பட்ட திணிவையும், C என்பது சமீ / செக்கன் அலகில் அளக்கப்பட்ட ஒளியின் வேகத்தையும் குறிக்கின்றன. இச்சமன்பாட்டைக் கொண்டு, அணு அழியும்போது வெளியிடப்படும் சக்தியைக் கணிக்கலாம். இதற்கான சிறியதொரு உதாரணத்தைப் பார்ப்போம். இரண்டு கிலோகிராம் நிலக்கரியைச் சக்தியாக மாற்றினால் 25,000 கோடி கிலோவோட் (அதாவது, நம் வீட்டு மின்சார பில்களில் குறிக்கும் 'யுனிட்') மின்சாரம் கிடைக்கும்.[3]

சக்தி அழிவில்லாதது. அஃது ஒரு வடிவத்திலிருந்து வேறு வடிவத்திற்கு நிலைமாற்றம் எய்துமே தவிர, அழிந்து போய்விடுவதில்லை. இதனையே சக்திக் காப்பு விதி (Principle of conservation energy) குறிக்கிறது.

சக்தியின் வடிவங்கள்

சக்தி சர்வ வியாபகமானது. உயரத்திலிருக்கும் ஒரு பொருள், சக்தியை நிலைப் பண்புச் சக்தியாகத் (Potential energy) தேக்கி வைத்துக் கொண்டிருக்கிறது. பொருள் புவியீர்ப்பினால் கீழே விழும் போது இச்சக்தியே இயக்கப் பண்புச் சக்தியாக (Kinetic energy) ப் பரிணமிக்கிறது. இதுபோலவே சக்தியானது வெப்பம், ஒளி, மின்சாரம் என்ற பல வடிவங்களிலும் தோன்றக் கூடும். சக்தி, இரசாயன சக்தி (Chemical energy)யாகவும் தேக்கிவைக்கப்படலாம். உதாரணமாக, தரை மட்டத்து கு வெகு உயரத்திலுள்ள தண்ணீர் நிலைப் பண்புச்சக்தியை உடையதாக இருக்கிறது. இதுவே நீர்வீழ்ச்சியாக மாறி, ஒரு விசைப்பொறி உருளை (Turbine)யைச் சுழல்விக்க உதவி செய்கிறது. விசைப்பொறி உருளையுடன் இணைக்கப்பட்ட டைனமோவில் இயக்கப்பண்புச் சக்தி, மின்சார வடிவத்தை அடைகிறது. மின்சாரம் நம் வீட்டை அடைந்த பின்னர் மின் விசிறிகளில் இயங்கு சக்தியாகவும், மின் விளக்குகளில் ஒளிச்சக்தியாகவும், மின்னடுப்புகளில் வெப்பச் சக்தியாகவும் மாற்றமடைகிறது.[9]

இவற்றைத் தவிர, பிரபஞ்சத்தில் சக்தி இன்னும் பல வடிவங்களிற் காணப்படுகிறது. அவை அனைத்தையும் பற்றி, விஞ்ஞானிகளுக்குக் கூடத் தெரியவில்லை. திருக்குர்ஆனோ, சக்தியின் எல்லா வடிவங்களையும் இறைவனைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள் என்று கூறுகின்றது.

வேறு வகையில் கூறின், எல்லையற்ற பெரும் சமுத்திரம் என்று கூறக்கூடிய சக்தியானது எப்போதும் இருந்து வந்திருக்கிறது; இதன் பிறகும் இருந்து வரும். அவற்றுள் சிலவற்றை மட்டுமே நாம் அறிவோம். பல, இன்னும்கூட எமக்குத் தெரியவில்லை. அச்சிறிய பகுதியில் ஒரு பாகமே மின்சார சக்தியாகும். அதாவது சமவலிமையுள்ள நேர், எதிர் மின்சக்திகள். சிறியதொரு பகுதியான மின்சக்தியே பொருள்களில் அணுக்களின் உருவைப் பெற்றிருக்கிறது.[10]

இறுதியாக, மையக்கவர்ச்சி விசை (Power of attraction), மைய நீக்க விசை ஆகிய இரண்டினதும் தொழிற்பாடுகளை நோக்குவோம்.

மையக்கவர்ச்சி விசையானது பொருளுக்கு உருவத்தைக் கொடுக்கவும், சக்தி பொருளின் வடிவைப் பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் காரணமாக'இருக்கும்போது, மைய நீக்க விசையானது பொருள்கள் உடைவதற்கும், தோற்றத்தை இழப்பதற்கும் காரணமாக இருக்கிறது.[11] இது, காந்தமாக அல்லது கவரும் சக்தியாகச் செயலாற்றுகின்ற ஒரு சக்தி இருப்பதையும், அது படைப்பு நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும் காட்டுகிறது. மையநீக்கு விசை என்ற மறுவடிவமானது அழித்தல் நோக்கத்திற்காகவும், பொருள்களைச் சிதைப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.[12]

இதுவரை கூறப்பட்ட விஞ்ஞான விதிகளினதும் விளக்கங்களினதும் துணைகொண்டு, திருக்குர்ஆனின் வெளிச்சத்தில் பிரபஞ்சத்தின் ஆக்கம் அழிவு பற்றிய கருத்துகளையும் கருதுகோள்களையும் ஆராய்வோம்.

'நிலையான அண்டம்'

பிரபஞ்சமானது சக்தியின் வெளிப்பாடாகும். சக்தி, வெறுமையிலிருந்து தோன்றவில்லை. பிரித்தானிய வானியற் பௌதிகவியலறிஞரான பிரெட் ஹோய்ல் (Fred Hoyle), விண்மீன் மண்டலங்களுக்கிடையே பொருளானது வெறுமையிலிருந்து தோன்றியதெனக் கூறுகின்றார். ஹோய்ல், நிலையான அண்டம் (பிரபஞ்சம்) (Steady-State universe) என்னும் கோட்பாட்டின் பிரதான ஆதரவாளராவர். நிலையான அண்டம் என்ற கருதுகோளானது, நிலைபேறுடைய பிரபஞ்சம் தொடக்கமும் முடிவுமற்றது எனக் கூறுகின்றது. பல பில்லியன் *(Billion) வருடங்களாக வெறுமையிலிருந்து தோன்றிய ஹைட்ரஜன் அணுக்களிலிருந்து, தொடராகப் பொருள்கள் ஒடுங்கும் செய்முறை (Condensation) மூலம் வானவெளியில் ஒடும், விண்மீன் மண்டலங்களுக்கிடையில் விண்மீன்களும், விண்மீன் மண்டலங்களும் தோன்றுகின்றன என்றும், பாரமான மூலங்களின் (Heavy elements) அணுக்கள், நட்சத்திரங்களின் எரிந்து கொண்டிருக்கும் வெப்பம் மிகுந்த மையப் பகுதியில் உருவாகின்றன என்றும், சுபர் நோவா(Supernova) வெடிப்பின் மூலம் அவை வான வெளிக்குத் தள்ளப்படுகின்றன என்றும் ஹோய்ல் அபிப்பிராயப்படுகின்றார். (சடுதியாக மிகுந்த பிரகாசம் பெறுகின்ற ஒரு நட்சத்திரமே சுபர்நோவாவாகும். இது நமது சூரியனைவிடப் பல பில்லியன் மடங்கு ஒளியை வீசும். எனினும் இவ்வொளி குறுகிய காலத்திற்கே நீடிக்கும்.) பழைய விண்மீன் மண்டலங்கள் தொலை நோக்கிக் கண்ணாடிகளுக்கு அப்பால் விலகிச் செல்ல, புதிய விண்மீன் மண்டலங்கள் அவ்விடத்தை எடுக்கின்றன. இவ்வாறு பிரபஞ்சமானது எப்போதும் நிலையான தன்மையைத் தொடர்ந்து வைத்திருக்கிறது.[13]

சமீபத்தில் அண்டப் பிறப்புக் கோட்பாடுகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. இவற்றில் ஒன்று ஹோய்லினுடையது; மற்றையது அண்டத் தோற்ற ஆய்வாளரும், அணுப் பௌதிகவியலாளருமான ஜோர்ஜ் கமோ (George Gamow)வினுடையது. கமோ வேறுபட்ட கருத்தையுடையவர். பிரபஞ்சத்திற்கு ஓர் ஆரம்பம் இருந்தது என்று கருதும் இவர், ஹோய்லுடைய நிலையான பிரபஞ்சம் என்ற கருதுகோளை அவதானிப்பு அத்தாட்சிகளின் அடிப்படையில் நிராகரிக்கின்றார். மேலும், யுரேனியம் உட்பட பாரமான மூலகங்கள் நட்சத்திரங்களின் மையப் பகுதியில் உருவாக முடியாது என்றும், மிக வெப்பமான நட்சத்திரங்களின்

---

* 1,000,000 = 1 மில்லியன், 1 மில்லியன் × மில்லியன் = 1 பில்லியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பம் கூட பாரமான மூலகங்கள் அமையப்போதியதல்ல என்றும் ஜெர்மனியைச் சேர்ந்த அண்டத் தோற்ற ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிடுகின்றார்.[14]

இறைபடைப்பு

திருக்குர்ஆனே நோக்கின் வானங்களையும் பூமியையும் இறைவனே படைத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

> "நிச்சயமாக உங்கள் இறைவனாகிய அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்து அர்ஷின் மீது தன் ஆட்சியை நிலை நாட்டினான்." (7 : 54)

கமோவின் கோட்பாடாகிய பிரபஞ்சம் படைக்கப்பட்டது என்பது குர்ஆனுடைய கூற்றுடன் பொருந்துகிறது. புகழ்பெற்ற விஞ்ஞானியான அல்பர்ட் ஐன்ஸ்டீன், நாள்தோறும் 'அழிந்துவரும் விண்மீன்களின் துணைகொண்டு பிரபஞ்சத்திற்கு ஓர் ஆரம்பம் இருந்திருக்க வேண்டுமென்று கருதுகிறார். சக்தி, பொருளின் வடிவைப் பெறுமிடத்து அப்பொருள் முப்பரிமாணங்களையும் (Dimension) அதாவது நீளம், அகலம், உயரம் இவற்றோடு காலம் என்ற பரிமாணத்தையும் பெறுகிறது.[15]

வயது, காலத்தின் அளவீடாகும். அது இரு கால எல்லைகளுக்கிடையிலுள்ள இடைவேளையேயாகும். மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும், தாவரங்களுக்கும் வயதுகள் இருக்கின்றன. பூமியிலுள்ள மிகப் பழைய பாறைகள் யுரேனியப் படிவுகள் இருப்பதைக் காட்டுகின்றன. யுரேனியம் 4 முதல் 5 பில்லியன் வருடங்களுக்கு நீடித்திருக்கக் கூடும், என நம்பப்படுகிறது. கதிரியக்க சக்தியுள்ள யுரேனியம், தனது வாழ்க்கைக்காலத்தைத் தாண்டக்கூடிய மிகப் பழங் காலத்தில் அமைந்திருக்குமாயின் இப்போது அதனுடைய எல்லா அணுக்களும் சிதைந்து போயிருக்க வேண்டும். ஏனெனில், இவை தாமாகவே சிதையும் தன்மையுடையன. இவ்வுண்மையானது, கோள்களும் விண்மீன்களும்; விண்மீன் மண்டலங்களும் ஒரு படைப்புச் செயலின் மூலமே உருவாயிற்று என்பதற்குச் சான்று பகர்கின்றது.

எனவே, இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட 104 மூலகங்களின் அணுக்களும், இன்னும் கண்டுபிடிக்கப்படவுள்ள ஏனைய மூலகங்களின் அணுக்களும், சில பில்லியன் வருடங்களுக்கு முன்னர், கடந்த யுகத்தில் நடைபெற்ற படைப்புச் செயல் ஒன்றினாலேயே தோற்றம் பெற்றன என்று விஞ்ஞான ரீதியாக நாம் நம்பலாம். இதனாலேயே குர்ஆன்,

> "அவனே வானங்களையும். பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன். அவன் எதை (ப் படைக்கக் கருதி) முடிவு செய்தாலும், அதனை 'ஆகுக' என்று கூறிய மாத்திரத்தில் உடனே ஆகிவிடுகின்றது." (2 : 117) என்று கூறுகின்றது.

வேறு ஆதாரங்கள்

கிறிஸ்தவ வேத நூலான பைபிள் இப்படிக் கூறுகின்றது:

> "ஆரம்பத்தில் வானங்களையும் பூமியையும் ஆண்டவனே படைத்தான்"[17] (ஜெனஸிஸ்–1)

பிரபல விலங்கியலாளரும் பூச்சியியலாளருமான எட்வர்ட் லூதர் கெஸல் என்பார் பிரபஞ்சத்தை ஆரம்பத்தில் இறைவனே சிருஷ்டித்ததாகத் தர்க்க முறைப்படி பின்வருமாறு விளக்குகின்றார்:

"பிரபஞ்சத்திற்கு ஓர் ஆரம்பம் இருந்தது, என்பதை விஞ்ஞானம் நிரூபிக்கிறது. அதன் மூலம் இறைவன் பற்றிய மெய்மையை அது நிரூபிக்கின்றது. எதற்கும் ஆரம்பம் ஒன்றிருக்குமானால், அது தானகத் தொடங்கியிருக்க முடியாது; அது ஒரு சிருஷ்டிகர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவை, இறைவனை வேண்டி நிற்கின்றது.''[18]

அண்ட முட்டை

இனி, பிரபஞ்சத்தின் ஆரம்பநிலை பற்றி ஆராய்வோம். இது சம்பந்தமாக இரு கொள்கைகள் நிலவுகின்றன. முதற்கொள்கை பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு அடிமூலமான பொருள் தொடக்க காலத்தில் வாயுநிலையிலிருந்தது என்று கூறுகின்றது. 1927ல் பெல்ஜிய நாட்டுக் கணித நிபுணர் அப்பே ஜோர்ஜஸ் எடோர்வர்ட் லெமேட்ரே (Abbe Georges Edoward Lemaidra) என்பவர், எல்லாப் பொருள்களும் ஆதியில் மிகக் கெட்டியான அண்ட முட்டை (Cosmic egg) யிலிருந்து வந்தது என்றும், அம்முட்டை வெடித்து இவ்வண்டத்தை உருவாக்கியது என்றும் கூறினார். இதுவே இரண்டாவது கொள்கையாகும்.

பௌதிகவியல் நிபுணர் ஜோர்ஜ் கமோ இக்கூற்றை விரிவாக்கினார். அவர் கணக்கிட்டு இந்த வெடிப்புக்குப் பிறகு முதல் அரைமணி நேரத்தில் நமக்குத் தெரிந்த மூலகங்கள் யாவும் ஏற்பட்டன என்றார். வெடிப்புக்குப் பின்னால் 250 பில்லியன் ஆண்டுகளுக்குக் கதிரியக்கம் பொருள்களைத் தன் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தது என்றும், அதனால் அண்டத்தின் பொருள்கள் இலேசான வாயுவாக இருந்தன என்றும் கூறினார். சில காலங்களுக்குப் பின்னர் பொருள்கள் வலிமை பெற்றனவாகவும், அவை இறுகி விண்மீன் மண்டலங்களாகச் சுருங்கியதாகவும் கூறினார்.[19]

இந்த அண்ட முட்டையின் பொருள் எங்கிருந்து வந்தது? சில ஆராய்ச்சி நிபுணர்கள், அண்டம் ஓர் இலேசான வாயுவாகத் தொடங்கியதென்றும், காலம் செல்லச் செல்ல ஈர்ப்புச் சக்தி காரணமாக மிகக்கெட்டியானதாகவும், அடர்த்தியானதாகவும் மாறி, பின்னர் வெடித்தது என்றும் சொல்கிறார்கள்.[20]

சுருங்கச் சொன்னால், பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய எல்லாக் கோட்பாடுகளுமே, ஆதி நிலையில் அஃது ஆவியுருவிலிருந்தது என்பதை ஏற்றுக்கொள்கின்றன. இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் எடுத்துக்கூறிய இக்கருத்தை அருள்மறை குர்ஆன் ஏழாம் நூற்றாண்டிலேயே கூறிவைத்திருக்கின்றது:

> ''பின்னர் புகை(வாயு) ஆக இருந்த வானத்தளவில் திரும்பி அதனையும் பூமியையும் நோக்கி, 'நீங்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, (வழிபட்டு என்னிடம்) வாருங்கள்', என்று கூறினான். அதற்கு அவைகள், (இதோ) நாங்கள் விருப்பத்துடனேயே வந்தோம்' என்று கூறின. பின்னர் அவன் அவைகளை இரண்டு நாட்களில் ஏழு வானங்களாகத் திட்டமிட்டு, ஒவ்வொரு வானத்திற்கும் அதன் (அதன்) கடமையை அறிவித்தான்.'' (41 : 11 -12)

பிரபஞ்சத்தின் தோற்றத்திற்குக் காரணமான ஹைட்ரஜன் வாயு முற்றாக மறைந்துபோய்விடுவதில்லை; அதன் அளவு குறைவதுமில்லை. அவ்வாயு எங்கிருந்து வருகின்றது? புதிய விண்மீன் மண்டலங்கள் உருவாக்கப்பட்டமையால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதற்காகத் தொடராக அஃது எல்லையற்ற அண்டவெளியில் இருந்து வருகின்றதா? அல்லது அது மறைவான ஓரிடத்திலிருந்து வருகின்றதா? இன்றேல், அது படைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதா? இவ்வாறு விஞ்ஞானிகள் வினவுகின்றனர். பெரும்பாலான விஞ்ஞான ஆதாரங்கள், அவ்வாயு குறிப்பிட்ட ஓரிடத்தில் இருந்து வரவில்லை என்றும், அது படைக்கப்படுகிறது என்றும் தெளிவுபடுத்துகின்றன.[21]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு வானங்கள்

மேலே எடுத்துக்காட்டப்பட்ட திருவசனத்திலுள்ள ஏழு வானங்கள் என்பதன் பொருளைச் சிறிது விளக்க வேண்டியிருக்கின்றது. 'அரபு மொழியில் ஏழு என்பது எழுபது, எழுநூறு என்ற பொருளில் எப்போதும் பிரயோகிக்கப்படுவதில்லை. சில வேளைகளில் இதைவிடப் பெருந் தொகையையும் குறிக்கக் கூடும்'[22] என முஹம்மதலி அவர்கள் மொழிபெயர்த்த திருக்குர்ஆனின் அடிக்குறிப்பு 46ல் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, ஏழு என்பது விரிந்த பொருளில், தொலை நோக்கியால் பார்க்கக்கூடிய விண்மீன் மண்டலங்களையும், பார்க்க முடியாத தூரத்திலுள்ளவற்றையும் கூடக் குறித்து நிற்கின்றது.

விண்மீன் மண்டலங்கள் (Galaxies)

விண்மீன்களின் தொகுப்பை விண்மீன் மண்டலம் எனலாம். இவற்றின் எண்ணிக்கையை அளவிடுவது மனித சக்திக்கு அப்பாற்பட்டது. அண்ட வெளியை நோக்கக்கூடிய தொலை நோக்கிகளால் பார்க்கக்கூடிய எல்லைப் பரப்பு அண்டவெளியுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவு என்றே கூற வேண்டும். உலகிலேயே மிகப் பெரிய தொலைநோக்கியான, கலிபோனியாவிலுள்ள பலோமர் (Palomar) மலையின் மீது நிறுவப்பட்டுள்ள 200 அங்குலத் தொலைநோக்கியால் கூட நட்சத்திர மண்டலங்கள் அனைத்தையும் தெளிவாகப் பார்க்கமுடியவில்லை. அப்பெருந் தொலைநோக்கி மூலம் அண்டவெளியில் ஒரு பில்லியன் ஒளிவருடங்களுக்கு அதிகமாக தூரத்தையும், ஏறக்குறைய ஒரு பில்லியன் விண்மீன் மண்டலங்களையுமே பார்க்கமுடியும்.[23] எட்வின் பி: ஹப்பிள் (Edwin P. Hubble 1889 – 1953) என்பாரும், மில்டன் எல். ஹியூமன்சன் என்பாரும், பிரபஞ்சத்தில் 100, 000, 000 க்கும் மேற்பட்ட விண்மீன் மண்டலங்கள் இருப்பதாகக் கணக்கிட்டனர்.[24]

விண்மீன் மண்டலங்கள் பல்வேறு அளவுகளில் காணப்படுகின்றன. 10, 000 ஒளிவருட விட்டமுடைய சிறிய விண்மீன் மண்டலங்கள் முதல் 100,000 ஒளிவருட விட்டமுடைய இராட்சஸ விண்மீன் மண்டலங்கள் வரை வேறுபட்ட அளவுகளில் இவை காணப்படுகின்றன. சிறிய விண்மீன் மண்டலங்கள் பெரியவற்றை விட எண்ணிக்கையில் அதிகமாக இருக்கின்றன.[25] எமது பால்வழி மண்டலத்தின் விட்டமும் ஏறக்குறைய 100,000 ஒளிவருடங்களேயாகும்.[26]

தீவு அண்டங்கள்

விண்மீன் மண்டலங்கள் பலவகைப்படும்: பல நீள்வட்ட வடிவானவை; தொலைநோக்கியால் பார்க்கும்போது இன்னும் சில முட்டை வடிவானவையாகத் தோன்றுகின்றன; வேறு சில உருண்டை வடிவானவையாகக் காட்சியளிக்கின்றன. பால்வழி மண்டலத்திற்கு மிகவும் அயலிலுள்ள அன்ட்ரோமீடா (Andromeda) நெபுலா, ஒரு சுருள்வடிவான விண்மீன் மண்டலமாகும்.[27] இது பூமியிலிருந்து ஏறக்குறைய 2 மில்லியன் ஒளிவருட தூரத்தில் இருக்கின்றது.[28] அன்ட்ரோமீடா, விண்மீன் கூட்டங்களாலும், விண்மீன் மேகங்களாலும் ஆனது. அன்ட்ரோமீடா நெபுலாவும், M33 என்ற விண்மீன் மண்டலமும் ஒன்றுக்கொன்று ஏறத்தாழ 800, 000 ஒளிவருடங்களுக்கப்பால் இருக்கின்றன. பால்வழி மண்டலத்திற்கு அண்மையில் சிறிய மெகல்லானிக் மேகங்கள் (Magellanic Clouds) என்றும் பெரிய மெகல்லானிக் மேகங்கள் என்றும் இரண்டு நெபுலாக்கள் இருக்கின்றன. அவை இரண்டிற்குள்ள இடைத் தூரம் 80, 000 ஒளிவருடங்களாகும். பிரபஞ்சத்தில் விண்மீன் மண்டலங்கள் பெருமளவு தூரத்தால் பிரிக்கப்பட்டிருப்பதால் அவை 'தீவு அண்டங்கள்' (Island Universes) எனக் கூறப்படுகின்றன.

விலகியோடும் அண்டங்கள்

சில தசாப்தங்களுக்கு முன்னர் வானியலறிஞரானஎட்வின் பி.ஹப்பிள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மீன் மண்டலங்கள் எம்மை விட்டும், ஒன்று இன்னொன்றை விட்டும் கடுமையான வேகத்தில் விலகிச் சென்று கொண்டிருக்கின்றன என்று கண்டு பிடித்தார். எல்லா வானுராய்ச்சியாளர்களும் இக்கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர்.

1912ல் அமெரிக்க நாட்டு வான விஞ்ஞானியாகிய வெஸ்டோ மெல்வின் ஸ்லைபர் (Vesto Melvin Slipher), அன்ட்ரோ மீடா விண்மீன் மண்டலத்தின் சுற்றுவிசையைக் கண்டறிந்து, அது எம்மை நோக்கித் தோராயமாக நொடிக்கு 125 மைல் வேகத்தில் வந்து கொண்டிருக்கிறது என்று கூறினார். மற்ற விண்மீன் மண்டலங்களைப் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்தியதில் அவை நம்மைவிட்டும் பிரிந்து கொண்டிருக்கின்றன என்றார். 1914ல் ஸ்லைபர் 15 அண்டங்களைப் பற்றிய புள்ளிவிபரத்தைச் சேகரித்தார். அவற்றில 13 நம்மைவிட்டும் பிரிந்தோடிக் கொண்டிருக்கின்றன என்றும், அவைகளின் வேகம் சுமார் நொடிக்குப் பல நூறு மைல்களாகும் என்றும் கண்டறிந்தார்.[30]

எமது அண்டத்திற்கு அயலிலுள்ள விண்மீன் மண்டலங்கள் மணித்தியாலத்திற்கு மில்லியன் கணக்கான மைல் வேகத்தில் ஓடுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. வெகு தொலைவிலுள்ள ஏனைய விண்மீன் மண்டலங்கள் மணிக்கு 200 மில்லியன் மைலுக்குக் கூடிய வேகத்தில் விலகியோடுகின்றன. எமது அண்டத்திலிருந்து மேலே குறிப்பிட்ட தூரத்தைவிட, இரண்டு மடங்கு தொலைவிலுள்ள விண்மீன் மண்டலங்களின் வேகம், ஒளியின் வேகத்தை நெருங்குகின்றன. இவ்வெல்லைக்கு அப்பால் விலகியோடும் அண்டங்களின் வேகம் ஒளியின் வேகத்தைவிட அதிகமாகும்.[31] இவ்வாறு பிரபஞ்சம் விரிந்து கொண்டு செல்கிறது. ஐன்ஸ்டீனுடைய பொதுச் சார்புக் கொள்கையில் (General Theory of Relativity) உபயோகிக்கப்பட்டுள்ள புலச்சமன்பாடுகள் (Field Equation) விரியும் அண்டத்திற்குச் சாதகமாக உள்ளன. விரிந்துகொண்டிருக்கும் இவ்வண்டம் ஏறக்குறைய 20 மில்லியன் வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்தது[32] என்று நம்பப்படுகிறது.

நோக்கல் மூலம் அறியப்பட்ட சான்றுகள் காட்டுவதுபோல, பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டே செல்வதாக இருந்தால் (பொருளல்ல, அண்ட வெளி விரிவடைகிறது), அவ்வாறு விரிவடையத் தொடங்குவதற்கு முன்பு, ஒரு நிலையில் இவ்வெல்லா அண்டங்களும் ஒரே அண்டத்திணிவாக இருந்திருக்க வேண்டும். இதனையே அப்பே லெமேட்ரே, ஜோர்ஜ் கமோ ஆகியோரது அண்டப் பிறப்புக்கோட்பாடு சுட்டிக் காட்டுகிறது. அப்பே லெமேட்ரே குறிப்பிட்ட அண்ட முட்டை அல்லது இராட்சஸ அணுவில் ஏற்பட்ட வெடிப்பினைத் தொடர்ந்து எல்லாத் திசைகளிலும் பொருட்கள் பாயத் தொடங்கிற்று. அதனைத் தொடர்ந்து அண்ட வெளி எங்கும் வாயுப் பொருட்கள் பரவின. காலப் போக்கில் இவ்வாயுப் பொருட்களிலிருந்தே பூமி உட்பட ஏனைய கிரகங்கள், நட்சத்திர மண்டலங்கள், நெபுலாக்கள் என்பன தோன்றின. எனவே, வானங்களும் பூமியும் ஒன்றாக இருந்தது என்பதற்கு மட்டுமன்றி, எல்லா அண்டங்களும் விலகியோடுவதற்கும், தூரம் அதிகரிப்பதோடு அவற்றின் வேகங்கள் அதிகரிப்பதற்கும் உரிய காரணத்தை இக்கோட்பாடு கூறுகின்றது. Big Bang Theory எனப்படுகிற திடுக்கிடச் செய்யும் இக்கோட்பாடு முதல் முறையாக 1929ம் ஆண்டிலேயே பெருமளவிற்கு விஞ்ஞான ஆதரவைப் பெற்றது.[33]

இதே கருத்தை 1400 ஆண்டுகளுக்கு முன்னர் திருக்குர்ஆன் முன்வைத்திருக்கிறது: "(ஆரம்பத்தில்) ஒன்றாகச் சேர்ந்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானங்களையும் பூமியையும் நாமே பிரித்தமைத்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரிலிருந்தே படைத்தோம் என்பதையும் இந்த நிராகரிப்போர் அவதானிக்க வேண்டாமா?''

(21 : 30)

தோற்றப்படிமுறை

அண்டம் வாயுவாக ஆரம்பித்தது என்பதிலும், அவ்வாயுவின் மூலமே பூமியும் ஏனைய வானப் பொருட்களும் தோன்றின என்பதிலும், குர்ஆனும் நவீன விஞ்ஞானமும் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன. வாயுப் பொருட்களிலிருந்து எப்படி இவ்வளவு பிரமாண்டமான விண்மீன் மண்டலங்களும் கோள்களும் தோன்றின? அல்லது அவை எப்படிமுறைகளினூடாக இன்றைய நிலையை அடைந்தன என்பது பற்றிக் குர்ஆன் விரிவாகக் கூறவில்லை;. அப்படிக் கூறுவது குர்ஆனின் நோக்கத்திற்கும் அப்பாற்பட்டது.

இதுபற்றித் தரப்படுகின்ற விஞ்ஞான விளக்கம் பின்வருமாறு: அண்டவெளியில் பரவியிருந்த வெப்பமான வாயு விரிவடைய ஆரம்பித்தது. அவ்வாறு விரிவடையும்போது வெப்பத்தை இழந்து கொண்டு வந்தது. ஈர்ப்புச் சக்தி காரணமாக வாயுப் பொருட்கள் மில்லியன் கணக்கான மேகங்களாகப் பிரிந்து, தற்போதைய நட்சத்திர மண்டலங்களாக மாறின. சேர். ஜேம்ஸ் ஜீன்ஸ், (Sir James Jeans) போன்ற விஞ்ஞானிகள். ஆதிமூல வாயுவானது இராட்சஸ வாயுமேகங்களாகப் பிரிந்து, நட்சத்திர மண்டலங்களாக அமைந்தன என்றும், பிரிந்த பிறகு ஒன்றிலிருந்து இன்னொன்று வெகு தூரத்திற்கு விலகிச் சென்றன என்றும் கூறுகின்றனர்.

நட்சத்திர மண்டலங்களிலிருந்து வாயுவும், தூசும் பில்லியன் கணக்கான மேகங்களாகப் பிரிந்தன. ஈர்ப்புச் சக்தி காரணமாக இம்மேகங்கள் நட்சத்திரங்களாக ஒடுங்கின. எல்லாப் புறங்களிலும் ஈர்ப்புவிசை தொழிற்பட்டதனால், அவை சுருங்கும் போதே வெப்பமுடையனவாக மாறின. அவை சுருங்கியமையே அவற்றின் சுழற்சிக்கும், கடுமையான வெப்பத்திற்கும் காரணமாயிற்று. எமது சூரியனும் அவ்வாறு தோன்றிய ஒரு நட்சத்திரமாகும்.

புவியின் தோற்றம்

விண்மீன் மண்டலங்கள் தோன்றிய பின்பே கிரகங்கள் தோன்றியிருக்க வேண்டும். கோள்களின் தோற்றம் பற்றி இதுவரை வெளியிடப்பட்டுள்ள கொள்கைகள் அனைத்தும் இக்கருத்தை ஏகமனதாக ஏற்றுக்கொள்கின்றன. எனவே, ஞாயிற்றின் வயதைவிடக் கோள்களின் வயது குறைவாகவே இருக்க வேண்டும். வாயுமேகங்கள் ஒடுங்கி, பல படிமுறைகளைத் தாண்டி நட்சத்திர மண்டலங்கள் உருவான செயல் 20 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்தது. ஏறக்குறைய 5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் எமது ஞாயிற்றுத் தொகுதி உருவானதென்றும் $4\frac{1}{2}$ பில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமிக்கிரகம் உருவானதென்றும் நம்பப்படுகிறது.[34]

குர்ஆனுடைய விண்கோளியல் கோட்பாடு வானங்கள் படைக்கப்பட்ட பின்பே பூமி உருவானது எனக் கூறுகிறது. கீழே தரப்பட்டுள்ள திருவசனமானது, நட்சத்திர மண்டலங்களையும், நட்சத்திரங்களையும் இறைவன் படைத்து அண்டவெளியில் பரப்பினான் என்பதையும், நட்சத்திர மண்டலங்கள் படைக்கப்பட்ட பின்பே பூமி உருவாயிற்று என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

''(மனிதர்களே! உருவ) அமைப்பில் நீங்கள் பலசாலிகளா? அல்லது அவன் படைத்த வானமா? அவனே அதன் முகட்டை உயர்த்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை ஒழுங்குபடுத்தினன். அவனே அதன் இரவை இருளாக்கி(ச் சூரியனைக் கொண்டு) பகலை வெளியாக்கி (வெளிச்சமாக்கி) ஞன். இதற்குப் பின்னர் அவனே பூமியை விரித்தான்.'' (79 :27-30)

கிரகங்கள் எப்படித் தோன்றிப் பரிணும வளர்ச்சியடைந்தன என்பது பற்றி கான்ட் (Kant, 1755), லாப்லாஸ் (1796), புபோன் (Buffon, 1745), லிகோண்டஸ் (Ligondes), மோல்டன் (Moulton), சேம்பர்லின் (Chamberlin) ஜேம்ஸ் ஜீன்ஸ் (1920) போன்ற பலர் தத்தமது கருதுகோள்களை வெளியிட்டனர். இவற்றுள் பல ஒப்புக்கொள்ளப்பட்ட விஞ்ஞான விதிகளோடு முரண்படுகின்றன. இக்கருதுகோள்களை விரிவாக ஆராய்வதும், அவை எவ்வெவ்விஞ்ஞான விதிகளுக்கு முரண்பட்டனவாக இருக்கின்றன என்பது பற்றி விளக்குவதும் இக்கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது.

தற்போதைய கருத்தின்படி, (1950ன் பின்) எல்லா விஞ்ஞானிகளும் கிரகங்கள் உருவானது சூரியனைச் சூழ்ந்திருந்த வாயு – தூசுப்படலம் ஒன்றிலிருந்துதான் என்று ஊகிக்கிருர்கள். இந்த ஆதிமூலக் கிரகப்படலம் எவ்வாறு தோன்றிற்று என்பது குறித்தும் கிரகங்கள் உருவான நிகழ்ச்சிப்போக்கு என்ன என்பது குறித்தும்தான் அவர்களுக்குள்ளே கருத்துவேறுபாடு இருந்து வருகிறது. வானியல் சிந்தனையில் உண்டான இத்திருப்பத்திற்கு வித்திட்டவை ஜெர்மனியப் பௌதிகவியலாளரான சி. வான். வெய்த்ஸ்ஸேக்கர் (C Von. Weitzsacker), சோவியத் யூனியன் பேரவை விஞ்ஞானி ஒட்டோ ஷ்மித் ஆகிய இருவரும் ஏறத்தாழ ஏக காலத்தில் 1943-44ல் முன்வைத்த கருதுகோள்களேயாகும்.[35]

## பிரபஞ்சத்தின் அழிவு

பால்வழி மண்டலத்திலுள்ள பல்லாயிரம் கோடி நட்சத்திரங்களில் ஒன்றே நமது சூரியனுகும். எனினும். எல்லா நட்சத்திரங்களும் ஒரே தன்மையானவையல்ல; பிரகாசம், நிறம், வயது, அளவு, வெப்பநிலை, இரசாயன அமைப்பு என்பவற்றைப் பொறுத்த அளவில் இவை கணிசமான அளவு வேறுபடுகின்றன. பீட்டல் ஜீஸ் (Betelgeuse). அண்டாரல் (Antares) என்பன பெருநட்சத்திரங்களுக்கு உதாரணங்களாகும். பின்னையது சூரியனைப் போல் 200 மடங்கு விட்டமுடையது. பீட்டல் ஜீஸ் என்ற நட்சத்திரத்தின் விட்டம் சூரியனைப்போல் 220 மடங்காகும். ஹெர்கியூலிஸ் (Herculis) மிரா (Mira) போன்றன ஏனைய பெரு நட்சத்திரங்களாகும். இவற்றின் விட்டங்கள் சூரியனின் விட்டத்தைப்போல் முறையே 580, 460 மடங்குகளாகும்.[36]

எமது பால்வழி மண்டலத்திலும், ஏனைய நட்சத்திர மண்டலங்களிலும் இருக்கின்ற விண்மீன்கள் பிறப்பு, வாழ்க்கை, இறப்பு என்ற தொடரான வட்டத்தினூடே சென்று கொண்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உண்மையில், விண்மீன்கள் உருவாவதை வானூராய்ச்சியாளர்கள் தம் கண் முன்னுலேயே கண்டிருக்கின்றனர். விண்மீன்களிடையே மிதந்து கொண்டிருக்கின்ற தூசியினுலும், வாயுவினுலுமான மேகங்கள், இந்நட்சத்திரங்களின் கருவறைகளாகும். இவை இயற்கையின் மிக எளிய மூலகமான ஹைட்ரஜனையே கொண்டிருக்கின்றன.[37]

நட்சத்திரங்கள் வாயுக்கோளங்களாகும். அவை ஹைட்ரஜனை எரித்து, ஹீலியமாக மாற்றிப் பெருமளவு சக்தியை வெளியிட்ட வண்ணமிருக்கின்றன. அவை ஹைட்ரஜனைத்தொடர்ந்து எரித்து வருவதனுல், அவை தமது நிறையை இழந்து கொண்டிருக்கின்றன.

நிறை கூடிய விண்மீன்கள் கூடிய பிரகாசத்தையுடையன. அவை மிக விரைவாக ஹைட்ரஜனைப் பயன்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித் தீர்க்கின்றன. ஆகவே, ஒரு நட்சத்திரம் எவ்வளவு காலம் வாழும் என்பது அதன் திணிவில் தங்கியிருக்கின்றது. பொதுவாக, திணிவில் கூடிய ஒரு நட்சத்திரம் வாழ்நாளில் குறைந்ததாகவே இருக்கும். சூரியனைவிடக் கணிசமான அளவு பெரிய நட்சத்திரங்கள், தமது எரிபொருளை அளவு கடந்து எரித்து விட்டு இளமையிலேயே இறந்து போகின்றன. சூரியனைவிடப் பத்து மடங்கு திணிவுடைய ஒரு நட்சத்திரம், உதாரணமாக 1000 மடங்கு விரைவாக எரிந்து 100 மில்லியன் வருடங்களே வாழ்கின்றன. எமது சூரியனின் வயது ஐந்து பில்லியன் வருடங்களாகும். அது தனது வாழ்நாளின் நடுப்பகுதியில் இருக்கிறது. மறுதலையாக, சிறிய நட்சத்திரங்கள் வானப் பொருட்களில் நீடிய காலம் வாழ்வனவாகும். சூரியனுடைய திணிவில் பத்தில் ஒரு பங்காக உள்ள ஒரு நட்சத்திரத்திற்கு 'டிரிலியன்* வருடங்கள் பிரகாசிக்க முடியும்.[38]

தமது ஹைட்ரஜனின் கடைசி அணுவையும் பயன்படுத்தியதோடு நட்சத்திரங்களின் உயிர்ப்புடைய வாழ்க்கை முடிவடைகின்றது. வெளிப்புறத்தில் ஏற்படும் அமுக்கத்தினால் அதன் மையப்பகுதி சுருங்க ஆரம்பிக்கின்றது. கடைசியில் அது தனது தற்போதைய அளவிலிருந்து மிகவும் சிறியதாகச் சுருங்கிவிடும். சூரியன் உட்பட எல்லா நட்சத்திரங்களைப் பொறுத்த வரையிலும் இறப்பே அவற்றின் இறுதி முடிவாக இருக்கும்.

### சிவப்பு இராட்சஸர்கள்

ஒரு நட்சத்திரம் தனது மையப் பகுதியிலுள்ள ஹைட்ரஜனின் பெரும் பகுதியைப் பயன்படுத்தித் தீர்த்து விட்டு, வெளிப்புறங்களிலுள்ள ஹைட்ரஜனை எரிக்க ஆரம்பிக்கின்ற போது அதனுடைய இறப்பின் முதற்படி ஆரம்பமாகிறது. இச்செயல்முறை பாரிய அளவிலான சக்தி வெளியேற்றத்தோடு, நட்சத்திரம் படிப்படியாகச் சிவப்பாக மாறவும், தனது தற்போதைய அளவைவிட 100 மடங்காக வீங்கவும் காரணமாகிறது. ஓரியன் நட்சத்திரக் கூட்டத்திலுள்ள பீட்டல்ஜீஸ் எனப்படும் கண்களுக்குப் புலனாகின்ற நட்சத்திரம், அவ்வாறான ஒரு சிவப்பு இராட்சஸன் (Red-giant) ஆகும். சூரியன் அவ்வாறான ஒரு மாற்றத்தை அடையும் பட்சத்தில் அது புதன், வெள்ளி ஆகிய கிரகங்களைச் சூழ்ந்து கொள்வதோடு, பூமியையும் ஆவியாக மாற்றிவிடும்.[39]

### வெள்ளைக் குள்ளர்கள்

தமது ஹைட்ரஜனை அபரிமிதமாக எரித்து முடித்துவிட்டு இறந்துபோன நட்சத்திரங்களே வெள்ளைக்குள்ளர் (White dwarfs)களாகும். இவை சூரியனை விடக்கூடிய வெப்பத்தையுடையனவாக இருந்தாலும், சுருங்கி ஏறக்குறைய பூமியின் அளவிற்கு வந்துவிடும். மிகவும் சுருங்கியதாயும், அடர்த்தியுடையனவாயும் இருப்பதால் இவை குளிரடைவதற்குக் காலம் எடுக்கும். பல்லாயிரம் ஆண்டுகள் கழிய வெள்ளைக்குள்ளர்கள் படிப்படியாகத் தமது வெப்பத்தையிழந்து முதலில் மஞ்சள் நிறமாகவும், பின்னர் சிவப்பாகவும் மாறி, முடிவில் கறுப்புக் குள்ளர்களாக ஆகிவிடும். இவ்வாறு, பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களைக் கொண்ட தற்போதைய பிரபஞ்சம், ஒரு நாள் குளிரும் சுருக்கமும் உடைய இறந்த நட்சத்திரங்களைக் கொண்ட பிரபஞ்சமாக மாறிவிடும்.

பிரகாசமுடையனவும், இறந்தனவுமான நட்சத்திரங்களைக் கொண்ட பிரபஞ்சத்தின் பொருட்கள் கடைசியில்

---

* ஒரு மில்லியன் × மில்லியன் × மில்லியன் = 1 டிரிலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்துவிடுமா என்பதே அடிக்கடி கேட்கப்படும் ஒரு வினுவாகும். பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருட்களும் சிதைந்து சக்தியாக மாற்றமடையக் கூடும், என்று இப்போது கருதப்படுகிறது. ஆராய்ச்சிப் பௌதிகவியலாளர் எதிர் பொருள் (Anti - matter) இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார். எதிர்பொருள் என்பது அணுவில் இருக்கின்ற உப அணுக்கருத்துகளாகும் (Sub nuclear particles) பொருளினதும், எதிர்பொருளினதும் மோதலானது பாரிய அளவிலான சக்தி வெளியேற்றத்தோடு அவற்றின் பரஸ்பர அழிவுக்கு அடிகோலும்.[40]

வெப்ப இயக்கவியலின் இரண்டாவது விதி

பொருள் சிதைவின் மூலம் வீணுகின்ற சக்தி, கடைசியில் விண்வெளியை நிறைத்துக் கொள்ளும். விடுபட்ட சக்தி, மீண்டும் அணுக்களாகவும், மூலக்கூறுகளாகவும், நட்சத்திரங்களாகவும், நட்சத்திர மண்டலங்களாகவும் அமைவதற்கு ஒன்றுசேர மாட்டாது பிரபஞ்சத்தில் பொருளின் சிதைவு, இயற்கையில் நிகழ்கின்ற, மீளச் செய்யமுடியாத ஒருபக்கச்செயல்முறையாகும். பிரபஞ்சத்தினது மாற்ற முடியாததும், தவிர்க்க முடியாததுமான விதியானது, வெப்ப இயக்கவியலின் இரண்டாவது விதி (Second law of thermo-dynamics) என்னும் கோட்பாட்டின் சர்ச்சைக்கிடமற்ற முன்கூறலாகும்.[41]

இக்கோட்பாட்டின்படி வெப்பம் எப்போதும் சூடான சடப்பொருள்களிலிருந்து குளிரான பொருள்களுக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இச்செயல்முறை மறுதலையாக நடைபெற முடியாது; வெப்பம், குளிரான பொருள்களிலிருந்து சூடான பொருள்களுக்குத் திரும்பி வரமுடியாது. கடைசியில் எல்லாப் பொருட்களும் வேறுபாடற்ற வெப்பநிலையை அடையும். (அவ்வெப்பம் உயிரினங்களை உறையச் செய்துவிடும்.) இதன் விளைவாக கதிர் வீசல், பல்வேறு பொருள்களிடையே நடைபெறுகின்ற வெப்பப் பரிமாற்றம் போன்ற இரசாயன, பௌதிக இயக்கங்கள் ஓய்ந்து, பிரபஞ்சத்தில் முற்றிலும் உயிர் வாழ்க்கை இல்லாமற் போய்விடும்.[42] சக்தியின் வடிவ வேறுபாடுகள் மறைந்துவிடும். உலகின் சார்புத்தன்மை இல்லாமலாகிவிடும். புதியது பழையது, ஒளி இருள், காரணம் காரியம் போன்ற சொற்கள் எல்லாம் தத்தமக்குரிய சார்புத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளமாட்டா. பிரபஞ்சத்தின் நிலை தாறுமாறானதாகிவிடும்.[43]

பல நூற்றுண்டுகளுக்கு முன்பு வெப்ப இயக்கவியலின் இரண்டாவது விதியின் முன்கூறுதலுடன் தொடர்புடைய வகையில், பிரபஞ்சத்தின் அழிவைப் பற்றிக் குர்ஆன் மனிதனை எச்சரிக்கின்றது.

> "வானங்களையும், பூமியையும், அவைகளுக்கு மத்தியில் உள்ளவைகளையும் தக்க காரணமும், குறிப்பிட்ட தவணையுமின்றி நாம் சிருஷ்டிக்கவில்லை. எவர்கள் (அல்லாஹ்வை) நிராகரிக்கின்றார்களோ அவர்கள், தங்களுக்குப் பயமுறுத்தி எச்சரிக்கை செய்யப்பட்டதைப் புறக்கணிக்கின்றனர்." (46 :3)

குர்ஆனின் கருத்துப்படி, சக்தியுட்பட அனைத்துப் பொருட்களும் அழிந்து போய்விடும். சக்தியும் ஒரு படைப்புப் பொருள் என்ற வகையில் அதற்கும் முடிவான ஓர் உயிர்ப்படக்கம் இருத்தல் வேண்டும். இறைவன் மட்டுமே என்றென்றும் நிலை பேறுடையவனுக இருப்பான்.

> "அவனைத் தவிர சகல பொருள்களும் அழிந்துவிடக் கூடியனவே." (28 : 88)

சக்திக் காப்பு விதியின்படி சக்தி படைக்கப்படுவதன்று. எனவே, சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கப்பட முடியாதது. குர்ஆனியத் தர்க்க முறைப்படி சக்தி ஒரு படைப்புப் பொருளாக இருப்பதால் அழிக் கப்பட முடியும் எனக் கருதுவதே சரி யானது. எது படைக்கப்பட்டதோ, அஃது அழியக்கூடியது.[44]

இறுதியாக, உலகம் எவ்வகையில் அழியக்கூடும் என்பது பற்றிய சில விஞ்ஞானக் கருத்துகளை நோக்குவோம்.

சூரியனின் இறப்பு

1. சூரியன் ஒவ்வொரு மணித்தி யாலமும் 15, 000, 000, 000 தொன் பொருளை வெப்ப, ஒளிக்கதிர்களாக வீசி, நிறையை இழந்து கொண்டிருக் கின்றது. நிறையில் ஏற்படுகின்ற படிப் படியான இழப்பின் விளைவாக, சக்தி யையும் திணிவையும் இழப்பதனால், பூமியின் மீதுள்ள சூரியனின் ஈர்ப்புச் சக்தி படிப்படியாகப் பலவீனமடையும். பூமி வருடத்திற்கு 36 அங்குலம் சூரி யனிலிருந்து பின்னோக்கி நழுவுவதனால், சூரியனுக்கும் பூமிக்குமிடையிலான தூரம் இன்னும் அதிகரிக்கும். கடல் கள் உறைந்துபோகக் கூடிய ஒரு சம யம் வரும். பூமியில் உயிர் வாழ்க்கை நீடிக்க முடியாத அளவுக்கு அவ்வளவு கடுமையான குளிர் காணப்படும்.[45]

2. இறந்து கொண்டிருக்கின்ற சூரியனின் குறைந்து செல்லும் வெப் பத்தினைத் தொடர்ந்து, பின் வாங்கிச் செல்லும் பூமியில் உயிரினங்கள் குளிரி னால் அழிந்து போய் விடும், என்ற கொள்கைக்கு மாறாக, ஹைட்ரஜன் முடிந்து கொண்டு வருகின்ற நிலையைச் சூரியன் எட்டும்போது, அதிகரித்துச் செல்லும் வெப்பத்தினால் சகல உயிரி னங்களும் எரிக்கப்பட்டுவிடும், என்று மற்றைக் கோட்பாடு முன்கூறுகின் றது. எரிந்து கொண்டிருக்கும் பெருந்தீ எரிந்து முடியப்போகும் தறுவாயில், பிரகாசமாக எரிவது போன்று, சூரிய னின் ஒளி வீச்சு 100 மடங்கு அதிக ரிக்கும். இந்நிலையில் கடல் கொதிக்கும். பூமியில் உயிர் வாழ்க்கை சாத்தியமற் றதாகிவிடும்.[46]

3. புவிச் சுழற்சி விஞ்ஞானிகள் கருதியிருந்ததைவிட 50 மடங்கு விரை வாகக் குறைந்து கொண்டு வருகிறது என்று ஒரு பிரிட்டிஷ் விஞ்ஞானி கண்டுபிடித்திருக்கின்றார். இதனை அவ ரது அணுக் கடிகாரம் கண்டு பிடித்தது. புவிச் சுற்றுகை கடைசியில் ஓய்ந்து போவதே வேகம் குறைந்து கொண்டு வருவதன் இறுதியான விளைவாக இருக் கும். இதனால், பூமியின் அரைவாசிப் பகுதி சூரியனை நோக்கியிருந்து நிரந் தரமான அயனமண்டல ஞாயிற்றொளி யைப் பெற்றுக் கொண்டிருக்கும்; கோளத்தின் மற்றைய அரைவாசிப் பகுதி நிரந்தர இருளினதும், பனிக் கட்டியினதும் போர்வையால், மூடி மறைக்கப்பட்டுவிடும்.[47] இச்சூழ்நிலை யில் உயிர் வாழ்க்கை சாத்தியமாகு மென்பது ஐயத்திற்கிடமானதே.

சடுதியான அழிவு

4. ஒரு நட்சத்திரம் 50, 000 மில் லியன் வருடங்களுக்கு ஒருமுறை சுடர் விட்டு எரிவதாக நம்பப்படுகின்றது. அதாவது, அது ஒரு (நோவா - Nova) புது விண்மீனாக மாறுகின்றது. எமது சூரியன் எந்த நேரத்திலும் பயங்கர மான பேரொளியைப் பெறும் வகையில் வெடித்து, புது விண்மீனாக மாறலாம். (இதன் பிறகு அது தனது சாதாரண நிலையைப் பெறும்.) எனவே, உலகின் சடுதியான அழிவு எதிர்பாராத எந்த நேரத்திலும் ஏற்படக் கூடும். இந்நிலை ஏற்படுமாயின் — அதனைத் தடுத்து நிறுத்த எவராலும் முடியாது — சூரி யனைச் சுற்றி வருகின்ற பூமியும் ஏனைய கிரகங்களும் உடனே வாயுவாக மாறி விடும். என்ன நடந்து கொண்டிருக் கிறது என்று மானிட இனம் உணர் வதற்கு முன்பே, ஒருசில செக்கன்களுக் குள் மிகவும் துக்ககரமான ஒரு நாட கம் நடைபெற்று முடிந்திருக்கும்.[48]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சூரியனுக்கு மேற்குறித்த எந்த அபாயமாவது நேரும் பட்சத்தில் அது பூமியிலே எத்தகைய பயங்கர மாறுதல்களை ஏற்படுத்திவிடும் என் பதை மானிடனுல் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. மயிர்க்கூச் செறியும் அந்தப் பேரழிவை உண்டு பண்ணும் நிகழ்ச்சி பற்றிக் குர்ஆன் வர்ணிப்பதைப் பாருங்கள்!

"வானங்களிலும், பூமியிலுமுள்ள இரகசியம் அல்லாஹ்வுக்கே சொந் தம். (அதனை மற்றெவரும் அறிய மாட்டார்கள்.) ஆகவே, (யுக) முடிவு காலம் இமைகொட்டி விழிப்பதைப் போல், அல்லது அதைவிட விரைவாகவே முடிந்து விடும். நிச்சயமாக, அல்லாஹ் யாவற்றின் மீதும் மிக்க ஆற்ற லுடையோனுகவே இருக்கின்றுன்." (16 : 77)

"(நபியே!) தெளிவானதொரு புகை, வானத்திலிருந்து வரும் நாளை நீர் எதிர்பார்த்திரும். மனி தர்களை அது சூழ்ந்துகொள்ளும். அது துன்புறுத்தும் வேதனையுமா கும்." (44-10–11)

"(யுக முடிவுக்காகச்) சூரியன் ஒளி மங்கும் போது, நட்சத்திரங்கள் சுடரிழந்து உதிர்ந்து விழும்போது, மலைகள் பெயர்த்துப் பறக்கடிக்கப் படும்போது......" (81 : 1 - 3)

அந்த யுக முடிவு நாளைப் பற்றி மக்கள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அப்போது இறைவன் பின்வருமாறு பதிலளித்தான்.

'(நபியே! விசாரணைக்) காலத்தைப் பற்றி–அது எப்போது வரும், என -அவர்கள் உம்மிடம் கேட்கிறுர் கள். (அதற்கு) நீர் கூறும்: 'அதன் அறிவு என் இறைவனிடத்தில் தான் இருக்கிறது. அது வரும் நேரத்தை, அவனைத் தவிர மற் றெவரும் தெளிவாக்கவும் முடி யாது. (அது சமயம்) வானங்களி லும், பூமியிலும் மகத்தான சம்ப வங்கள் நிகழும். திடுகூறுகவன்றி (அது) உங்களிடம் வராது.' அதனை முற்றிலும் அறிந்து கொண்டவ ராக உம்மை அவர்கள் மதித்து, (அதனைப் பற்றி) உம்மிடம் கேட் கிறுர்கள். அதற்கு நீர் கூறும்: 'அதன் அறிவு அல்லாஹ்விடத் தில்தான் இருக்கிறது. மனிதரில் பெரும்பாலோர் (அதனை) அறிய மாட்டார்கள்'." (7 : 187)

படைக்கப்பட்டவை அனைத்தும் அழிக்கப்பட்டாலும், அவற்றைப் படைத்த மகத்தான ஆற்றலுடைய வனும், தொடக்கமும் முடிவும் அற்ற வனுமான அல்லாஹ் மட்டும் என் றென்றும் நிலைத்திருப்பான்.

"பூமியிலுள்ள யாவும் அழிந்தே போகும். மிக்க கண்ணியமும் பெரு மையும் தங்கிய உமதிறைவன் மட்டும் (அழியாது) நிலைத்திருப் பான்." (55 : 26 - 27)

---


## உசாத்துணைக் குறிப்புகள்:

1. Questions and Answers from the Book of Knowledge, Published in India (1967) P. 90
2. அணுவைப் பற்றி- ஆக்கியோர் விஞ்ஞானத் தமிழ் வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம். 22 (1968) பக்கம், 27
3. Questions and Answers from the Book of Knowledge, P. 90
4. Ibid.
5. Jaleel, T. B. 'Creation of the Universe, - The Islamic Review, Vol - 5I, Nos. 7, 8, 9 (1963) P. 23
6. Nawab Muhammad Yamin Khan, 'God,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Soul and Universe in Science and Islam'. Lahore (1969) P. 36

7. Ibid. P. 94

8. ஐன்ஸ்டீன் தத்துவம், மஞ்சரி - ஆகஸ்ட் 1966, பக்கம். 18

9. அணுவைப்பற்றி. பக்கம். 9 - 10

10. God, Soul and Universe in Science and Islam, P. 110

11. Ibid. P. 120

12. Ibid. P. 121

13. Jaleel. T. B, P. 24

14. Ibid.

15. Ibid.

16. Ibid.

17. Stoner W. Peter - 'Genesis 1 in the light of Modern Astronomy' - The Evidence of God in an Expanding Universe - Edited by John Clover Monsma, Gospel Literature Service, Bombay, India. (1973) P. 139

18. Kessel, Edward Luther, 'Let's Look at Facts, without Bent or Bias' - The 'Evidence of God in an Expanding Universe, P. 51

19. அசிமோவ், ஐசக், 'விஞ்ஞான விளக்கம்' கலைக்கதிர் வெளியீடு, கோவை. 18 (1966) பகுதி. 1, பக்கம். 69

20. Ibid.

21. Dr. Muhammad Jamaluddin El-Fandy - 'On Cosmic Verses in the Quran, The Supreme Council for Islamic Affairs, Cairo, U. A. R. (1967) P. 53-54

22. Mohammed Abdul Quddus - 'The Quranic Idea of Evolution' Published in Karachi-5 (1971) P. 156

23. Porter, Donald Henry - 'The Answer to the Unanswered Questions' - The Evidence of God in an Expanding Universe, P. 45

24. Man and His Universe, The Book of Knowledge, New York - (1966) Vol. II P. 3859

25. Vaucouleurs, Gerard De. 'The Galaxies The Book of popular Science, New York - (1966) Vol. 8, P. 51

26. The Milky Way - The Book of Popular Science, Vol. 8, P. 158

27. Jaleel, T: B. P. 25

28. The Book of Popular Science, Vol. 8, P. 156C

29. Jaleel, T. B. - P. 25

30. விஞ்ஞான விளக்கம், பகுதி. 1, பக்கம். 65

31. On Cosmic Verses in the Quran P. 52

32. Stars - Where life begins, Time Magazine Dec. 27, 1976, P. 23

33. Ibid. P. 22

34. Dr. Majid Ali Khan, 'Science and Islam on the Origin of Life' - The Journal - Rabitat Al-Alam Al-Islami, Vol. 4 No.9 (July. 1977) P. 32

35. பரிஸ் லேவின், 'பூமியும் கிரகங்களும் எப்படித் தோன்றின?' மாஸ்கோ. மொழிபெயர்ப்பாளர்: எஸ். தோதாத்ரி, பக்கம். 47-48

36. Encyclopaedia Britannica-Vol.21, P.119

37. Stars, where life begins-Time, December - 27, 1976 P. 23

38. Ibid.

39. Ibid. P. 24

40. Jaleel, T. B. P. 28

41. Ibid.

42. On Cosmic Verses in the Quran P. 57

43. Jaleel, T. B. P. 20

44. Ibid

45. Ibid.

46. Ibid.

47. Ibid.

48. Ibid.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய

# ஒழுக்கவியல் வளர்ச்சி

மூலம்: **பேராசிரியர் குர்ஷித் அஹ்மத்,** M. A., LLB.
தமிழில்: **எம். வை. எம். மீஆத்** B. A., Dip-in Ed.

ஒழுக்கவியல் வளர்ச்சியென்பது உண்மையிலேயே விரிவான தொரு விடயமாகும்; வாழ்நாள் முழுக்க நீண்டது. எனவே, ஆலோசனைக்கும் செயல் முறைக்குமேற்ற சில அம்சங்களை வலியுறுத்துவது மட்டுமே இங்கு சாத்தியமாகின்றது.

ஒழுக்கம், ஒழுக்கவியல் வளர்ச்சி என்ற விடயம் உளவியல், சமூகவியல், சமூகமானிடவியல் போன்ற துறைகளுடன் சம்பந்தப்பட்டது. மதமோ, அதனைத் தனது மையப் பிரச்சினையாக மதிக்கிறது. மனித நெறிமுறைக்கு ஒருமைப்பாட்டையும், தொடர்ச்சியையும், உறுதியையும் வழங்கும் சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், நடத்தை என்பவற்றின் ஒத்திசைவான அமைப்பையே ஒழுக்கம் எனக் கருதலாம். ஒழுக்கவியல் வளர்ச்சியில் இயற்கையாய் அமையப்பெற்ற ஒருமைப்பாட்டின் தன்மை காரணமாக, ஒருவர் குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் என்ன செய்யக்கூடும் என்பதைப் பற்றி முன்னரே உய்த்துணர்ந்து கூறிவிடலாம். நான் ஆராயவிருக்கும் பரீட்சார்த்தமான வரைவிலக்கணத்தை அநேக அல்லது எல்லா உளவியல் ஆய்வாளர்களும், இந்த விடயத்தோடு தொடர்புடைய கல்விமான்களும் ஏற்றுக் கொள்வர்.

திருக்குர்ஆன், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஸுன்னு ஆகியவற்றிற்கேற்ப வாழ்க்கையை நடாத்த விழையும் ஒரு முஸ்லிமிடத்தில் இந்தக் குறிப்பிட்ட சிந்தனை, நடத்தைப் பாங்கு அமைந்துவிடுகின்றது. ஒருவர் முஸ்லிம் என்ற காரணத்திற்காக, அவர் இந்தச் செயலை அல்லது அந்தச் செயலைச் செய்ய முடியாதென நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் கூறியிருப்பதை, ஹதீஸை வாசிக்கும் ஒருவர் கண்டுகொள்ளலாம். குர்ஆனின் 'மையக்கரு' ஒன்றிருக்குமென்றால், அது மனிதனைச் சரியான பாதையில் வழிநடாத்துவதேயாகும். இது தான் ஒழுக்கத்திற்கும், ஒழுக்க உருவாக்கத்திற்கும் இட்டுச்செல்கின்றது. குர்ஆனைப்பின்பற்றுவதன் மூலம் சமுதாயத்திலும், தனிமனிதனிடத்திலும் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைப் பாங்கு உருவாகிவிடும்.

**தஸ்கியா என்றால் என்ன?**

குர்ஆனின் மையக்கருவை உருவாக்கும் அம்சங்கள், எம்மால் ஆய்ந்துணர முடியாத அளவிற்கு ஆழமானவை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரசாரப்பணி, திருக்குர்ஆனில் 'தஸ்கியா' (Tazkiyah) என்ற பதத்தினால் வர்ணிக்கப்பட்டிருப்பது, இந்த மையக்கரு ஒழுக்கவளர்ச்சியோடு நெருங்கிய தொடர்புடையது என்ப

மூலம்: **The Muslim (October - 1970), London.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையே உறுதிப்படுத்துகின்றது. 'உடல் நலத்திற்கு ஒவ்வாத விடயங்களையும், விரும்பப்படாத விடயங்களையும், தேவையற்ற விடயங்களையும் விட்டுப் புனிதமாக்கல் அல்லது சுத்தமாக்கல்' என்பதே தஸ்கியா என்பதன் பொருளாகும். அதே வேளையில், அது வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும், மலர்ச்சிக்கும் அவசியமான எல்லாச் சாதனங்களையும் மனிதனுக்கு அளிக்கின்றது. ஒரு மனிதனைப் பொறுத்தவரை அது அவனது ஒழுக்கம், சிந்தனை, நெறிமுறை என்பவற்றை விருத்தி செய்தல் எனப்பொருள்படும்; தீங்குகள், அல்லாஹ்வின் பார்வையில் விரும்பத்தகாததும், அருவருக்கத்தக்கதுமான பண்புகள் என்பவற்றிலிருந்து விடுபட்டு, அல்லாஹ், மனித வாழ்வில் செழித்தோங்கச் செய்ய விரும்பும் நல்லொழுக்கத்தை ஏற்படுத்துவதற்காக முழுச் செயல்களினதும் போக்கை உருவாக்குதல் என்பதும் அதன் பொருளாகும். 'தஸ்கியா' என்பது ஒழுக்கவியல் வளர்ச்சி பற்றிய கருத்தைக் குறிக்கும் ஒரு 'சுருக்கெழுத்துச் சொல்' எனவும் கூறலாம். அது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உதாரண வாழ்க்கைக்கும், பிரசாரப் பணிக்கும் எவ்வளவு மையமாக இருக்கிறது என்பதை நபி இப்ருஹீம் (அலை) அவர்கள் கஃபாவுக்கு அடிக்கற்களை வைத்துக் கொண்டிருந்த வேளையில் புரிந்த பிரார்த்தனையின் போது, தமது சந்ததிக்கு நபித்துவம் வழங்கும்படி கேட்டதைக் கொண்டு உணர்ந்துகொள்ளலாம். அவர்களது பிரார்த்தனை பின்வருமாறு இருந்தது:

> "எங்கள் இறைவனே! (என் சந்ததிகளாகிய) அவர்களுக்கு உன்னுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து, வேதத்தையும், ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, அவர்களைப் பரிசுத்தமாக்கிவைக்கக்கூடிய (யுஸக்கீகும்- 'தஸ்கியா' என்ற மூலத்திலிருந்து வந்தது) ஒரு தூதரை, அவர்களிலிருந்தே அவர்களிடையே எழுந்தருளச் செய்வாயாக! நிச்சயமாக நீயே மிக்க வல்லோனும் நுண்ணறிவுடையோனுமாக இருக்கின்றாய்' (எனப் பிரார்த்தித்தனர்)"
>
> (அல்-குர்ஆன்: - 2 : 129)

நபி இப்ருஹீம் (அலை) அவர்களின் இந்தப் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர்கள் இறைஞ்சிக்கேட்ட நபி, இறுதியாக மனித இனத்திற்கு, முழு மனித சமுதாயத்திற்குமே அனுப்பப்பட்டுவிட்டார். அவரே ஸய்யிதினா முஹம்மது (ஸல்) அவர்களாவர். இந்தப் பிரார்த்தனை ஏற்கப்பட்டது என்பதும், நிறைவேற்றப்பட்டதென்பதும் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள்.

> "அவ்வாறே, உங்களுக்கு நம்முடைய வசனங்களை ஓதிக்காண்பித்து, உங்களைப் பரிசுத்தமாக்கி வைக்கவும், (யுஸக்கீகும்), உங்களுக்கு வேதங்களையும் (அவைகளிலுள்ள) ஞானத்தையும் கற்பித்து, நீங்களறியாத (மற்ற) வற்றையும் உங்களுக்குக் கற்றுக்கொடுக்கக் கூடிய தூதரை, உங்களிலிருந்தே, உங்களுக்கிடையில் நாம் அனுப்பி வைத்தோம்."
>
> (அல்-குர்ஆன் 2: 151)

இறைவனிடம் கேட்கப்பட்ட அதே விடயம் வழங்கப்படுகிறது. 'தஸ்கியா' என்பது அதில் ஒரு முக்கியமான பகுதியாக அமைகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிகளிலே இது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

### ஆன்ம பரிசுத்தம்

தனிநபரைப் பொறுத்தவரையில், ஒழுக்கவியல் வளர்ச்சி பற்றிய பிரச்சினையை நோக்குமிடத்து, 'தஸ்கியா' என்ற அதே விடயமே வலியுறுத்தப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனுக்கும் திருக்குர்ஆன் முன்வைத்துள்ள மூலப்பிரமாணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எவன் அதனை (ஆன்மாவை)ப் பரிசுத்தமாக்கிக் கொண்டானோ அவன் நிச்சயமாகச் சித்தியடைந்து விட்டான். எவன் அதனைப் புதைத்துவிட்டானோ, அவன் நிச்சயமாக நஷ்டமடைந்து விட்டான்."
(91 : 9 – 10) என்பதுதான்.

எனவே, ஒருவனின் வெற்றி அவனது ஆன்மாவைப் பரிசுத்தப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. இதனைவிட, 'தஃவா' அல்லது 'இஸ்லாமிய அழைப்பு' என்ற நோக்கில், இத்தூய்மையாக்கம் ஒரு சமுதாயத்திற்கும், பொதுவாக முழு மனித இனத்திற்குமே முக்கியமாகின்றது. எனினும், அது ஒரு தனிநபரிலிருந்தே ஆரம்பமாகின்றது. இங்கு நாம் திருக்குர்ஆனிலிருந்தே மூலப்பிரமாணத்தைப் பெறுகின்றோம். இஸ்லாம் உண்மையான மார்க்கமாக இருந்தபோதிலும், எந்தவொரு இயக்கத்தினையும், தூதினையும் பொறுத்தவரையில் அதன் வாய்மை நிலையையும், சத்தியத்தன்மையையும் அதனைப் பின்பற்றும் மக்களின் நடத்தையைக் கொண்டே மக்கள் மட்டிடுவர். இஃது ஒரு பொய்யான அளவுகோலன்று. குர்ஆனின் மெய்மை, வாய்மை ஆகியவற்றை நிரூபிக்கும் வகையிலான அல்லாஹ்வின் வாதங்களுள் ஒன்று, நபிகள் நாயகத்தின் வாழ்க்கை முறை, என்பதைக் குர்ஆனின் பின்வரும் திருவசனங்களில் காண்கின்றோம்:

"நிச்சயமாக நான் இதற்கு முன்னரும் நீண்டகாலம் உங்களுடன் வசித்திருக்கின்றேன். - (அல்லவா? நான் பொய் சொல்பவனல்லன் என்பதை நீங்கள் நன்கு அறிந்திருக்கின்றீர்கள். இவ்வளவுகூட) நீங்கள் அறிந்து கொள்ள முடியாதா?" (10 : 16)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பின்பற்றப் போகும் மக்களுக்கு, அவர்கள் மத்தியில் தான் வாழ்ந்த வாழ்க்கை முறையின் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு, தமது தூதின் மெய்ம்மையை மட்டிட்டுக்கொள்ளும்படி வேண்டினார்கள். அந்த வாழ்க்கையும், தூதும் ஒன்றையொன்று உறுதிப்படுத்துவனவாக இருந்தன; ஆதரிப்பவையாக அமைந்தன; ஒன்று மற்றையதிற்குச் சாட்சியாகவும் இருந்தது. இதுவே, இஸ்லாமிய தூதுக்கும் அதன் தூதுவருக்கும், நடத்தை பற்றியவகையில் காணப்பட்ட தொடர்பாகும்; இஸ்லாத்தின் உண்மைத் தன்மைக்குரிய தொடர்புமாகும்.

**ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்வதன் அவசியம்**

ஒழுக்கவியல் வளர்ச்சிபற்றி ஆராயப்புகுமுன், எமது தற்காலச் சூழ்நிலையில் ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்வதன் முக்கியத்துவத்தை வற்புறுத்த விரும்புகின்றேன். உண்மையில் அதன் முக்கியத்துவம்எங்குமேபிரதானமானது தான். ஆனால், இன்று நாம் வாழ்கின்ற மேற்கத்திய சமுதாயத்திலே அதன் முக்கியத்துவம் மேலும் அதிகமாக இருக்கின்றது. ஏனெனில், கீழைநாட்டுச் சமுதாயச் சூழ்நிலை குறைந்த அளவுக்காயினும் கைகொடுத்துதவுகின்றது; ஆனால், மேல்நாட்டுச் சூழ்நிலையோ முற்றிலும் அவ்வாறு கைகொடுத்துதவும் தன்மையுடையதாக இல்லை. ஓர் இந்தியக் கவிஞன் ஒருமுறை கூறியது எனக்கு ஞாபகம் வருகின்றது.

"இந்த நகரில், யாருக்கும் என்னைத் தெரியாதபோது, (மது) குடிப்பது எனக்குத் தடை செய்யப்பட்டுள்ளதா?"

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயம் இப்படிப்பட்டதே. அழிவுச் சக்திகள் கடுமையும், பலமும் வாய்ந்தனவாக இருக்கின்றன. மேலும், பலம் மிக்க எதிர்ச்செயலையும், எதிர் முயற்சியையும் தன்னிலும், தனது சமுதாயத்திலும் படிப்படியாக ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திக்கொள்வதன் மூலமே அவற்றை வெற்றி கொண்டு, விஷயங்களை அவ்வவற்றிற்குரிய நிலையில் வைத்துக் கொள்ள முடியும்.

எனவே, தனிப்பட்டவர் மட்டத்திலும், குழுமட்டத்திலும், ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்வதன் முக்கியத்துவம் இந்த நிலைமையினால் மேலும் அதிகரிக்கின்றது. 'ஒவ்வொரு சவாலும் ஒவ்வொரு சந்தர்ப்பம்' என ஒருவர் கூறியது எனக்கு ஞாபகம் வருகின்றது. இந்தச் சமுதாயம், எமது சமய நம்பிக்கைக்கும், நடத்தைக்கும் ஒரு பெருஞ்சவாலாயின், அது எமது தகைமையை நிரூபித்துக்காட்ட ஓர் அவகாசத்தையேஅளிக்கின்றது என்றே கூறவேண்டும்.

தஸ்கியாவின் தன்மையைத் தெளிவுபடுத்துவதற்காக நான்கு அம்சங்களைப்பற்றி விரிவாக ஆராய விரும்புகின்றேன். இந்த ஆய்வு முறையில், இஸ்லாத்தில் பண்பொழுக்கத்தைப் பற்றிய கருத்தின் பரந்த தன்மை சம்பந்தமாகச் சில கருத்துகளைத் தரவிரும்புகின்றேன்.

சுய முயற்சி

முதலாவதாக, ஒழுக்கவளர்ச்சியானது பெரும்பாலும் தனிநபர் சம்பந்தப்பட்டதொரு செயல் முறையாகும். உண்மையில், இஸ்லாம் கூட்டு — மனப்பாங்கு (Collective spirit)க்குப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. இக்கட்டுரையின் பிற்பகுதியில் எடுத்துக்காட்டப்படுவது போன்று. இது ஒழுக்கவியல் வளர்ச்சியில் ஒரு பங்கை வகிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால், இறுதியாக நோக்குமிடத்து, ஒழுக்கவளர்ச்சி என்ற செயல்முறையானது, பெரும்பாலும் தனிநபரோடு சம்பந்தப்பட்டதொன்றே. ஒருவனை நல்ல பண்பாடுடையவனாக, தானாகவே மாற்றியமைக்கக்கூடிய உளவியல், சமூகவியல் அல்லது இலட்சியவாத இயந்திரமொன்றில்லை. இது தனிப்பட்ட ஒருவரின் சொந்த முயற்சியாலேயே சாத்தியமாகும். ஒருவன் தானாக உணர்ந்து, திடசங்கற்பம் பூண்டு, அதற்காகப் பாடுபடுவதன் மூலமாக மாத்திரமே பண்பாட்டை வளர்த்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு நபரும் தனது வாழ்நாளில் செய்தவைகளைப் பற்றித் தனிப்பட்ட முறையில் இறைவனுக்குப் பதில் கூற வேண்டியிருக்கிறது; நியாயத்தீர்ப்பு நாளில் தனித்தனியாகப் பதில் கூற வேண்டியிருக்கிறது என்று இறைவன் குர்ஆனில் குறிப்பிட்டிருப்பதே இதற்குச் சான்றாகும். 'உம்மத்'துக்குச் சில குறிப்பிட்ட கூட்டுப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது; சில கூட்டுக்கடமைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், வாழ்க்கை முழுதும் நீடித்திருக்கின்ற இந்த அம்சத்தைப் பொறுத்தவரை, அது ஒவ்வொரு நபரினதும் பொறுப்பாகும். ஒழுக்கம் உருவாகின்ற தன்மையையும், வழிமுறையையும் கொண்டு பார்க்கும்போது அது தனிநபரைச் சார்ந்த செயலாகவும், முயற்சியாகவுமே இருக்கிறது. இச்செயலை எவ்வளவு சிறப்பாகச் செய்யலாம் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியுள்ளது. உண்மையில், இஸ்லாமிய சமுதாயம் கைகொடுக்கின்றது; ஒத்துழைக்கின்றது; அது கடினமான விஷயங்களை இலகுபடுத்துகின்றது. எனினும், நடைமுறைப்படுத்த வேண்டிய கடமையோ தனிநபருக்குரியதாகவே அமைகின்றது. ஒரு பழமொழி கூறுவதுபோல, குதிரையை நீர்நிலையமொன்றிற்குக் கூட்டிச் செல்லலாமேயொழிய, அதற்கு நீரைக் குடிக்கச் செய்ய முடியாது. அவ்வாறு குடிக்கும் செயல் தனிப்பட்ட ஒன்றுக்குரியதாகவே அமைகின்றது. உங்கள் மத்தியிலிருக்கின்ற சிறந்த சமுதாயமானது, உங்களை அந்த நீர் இருக்கும் இடத்திற்கு மட்டுமே 'இட்டுச்செல்லக்கூடியது. அதனைவிட மேலதிகமாக எதனையும் அதனால் செய்ய முடியாது. இஸ்லாமிய இயக்கமொன்று என்ன செய்துவிட முடியும்? இந்தத் திசையில் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேறிச் செல்வதற்குகந்த வாய்ப்புகளையும், சூழ்நிலையையும் அவ்வியக்கம் உங்களுக்கு ஆக்கித்தர முடியும். ஆனுல், அதற்குமேல் அதனுல் ஒன்றும் செய்துவிட முடியாது. ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ளும் செயலோ உங்களது தனிப்பட்ட முயற்சியாகவே இருக்கும். முதற்படியாக நான் இதனைக் குறிப்பாக வலியுறுத்துவது' தனிநபர்' என்ற முறையில் இது சம்பந்தமாக அவன் மீது எத்தகைய பொறுப்பிருக்கிறது என்பதை உணர்த்துவதற்கும் இரண்டாவதாக, தனிநபரது பொறுப்பு, தனிநபரால் ஆற்றப்பட வேண்டிய செயல் என்ற வகையில் சூழ்நிலைஎவ்வளவு மோசமாகஇருந்தபோதிலும், ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்ள முடியாதென்பதைச் சுட்டிக்காட்டுவதற்குமேயாகும். அதிலிருந்து நமக்கு விடுபட முடியாது. ஆகவே, நாம் எங்கிருப்பினும் இம்முயற்சியில் ஈடுபட்டவர்களாகவே இருக்க வேண்டும்.

### முஸ்லிம்களாகவன்றி மரணிக்காதீர்கள்!

இரண்டாவதாக, ஒழுக்கத்தை வளர்க்கும் முயற்சி ஒரு பகுதி நேர வேலையல்ல என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அது தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டிய ஒரு முயற்சியையே வேண்டி நிற்கிறது. அது முடிவற்றதும், ஓய்ந்துவிடாததுமான செயற்பாடாகும்; அதற்குக் குறுக்கு வழிகளும் கிடையா. அது ஒரு தினத்திற்கோ, ஒரு வாரத்திற்கோ, ஒரு மாதத்திற்கோ, ஒரு வருடத்திற்கோ மட்டும் உரியதுமல்ல. பெர்னட்ஷோவின் வார்த்தைகளில் சொல்வதானுல், அது வாழ்நாள் முழுதும் நீடித்திருக்கின்ற ஒரு விஷயமாகும். அதனுலேயே அல்லாஹ், பின்வருமாறு கூறி, எமக்கு உணரவைக்கின்றுன்:

> "முஸ்லிம்களாகவன்றி மரணிக்காதீர்கள்."
>
> (அல்-குர்ஆன் 32 : 102)

இந்தச் செயற்பாடு வாழ்நாள் முழுவதையும் உள்ளடக்கியது; உங்கள் வாழ்க்கை முழுவதும், அதன் மேடு பள்ளங்கள் அனைத்திலும் மாத்திரமல்ல உங்கள் இறுதி மூச்சுவரை நீங்கள் முஸ்லிமாக இருக்க வேண்டும். எனவே, இந்தச் செயற்பாட்டுக்கு முடிவேயில்லை; எத்தகைய குறுக்கு வழிகளாலும் ஒழுக்கத்தை அடைந்துகொள்ளவும் முடியாது; அதற்கு எந்தவொரு எளிமையான சூத்திரமும் இல்லை; உடன் விற்பனைக்குத் தயாராக இருக்கும் கடையிலிருந்து அதனைப் பெறவும் முடியாது. இடையீடற்ற இச்செயல் முறையானது உமது முழு ஆயுட்காலத்துடனும் ஒன்றுகப் பின்னிப்பிணைந்தது. இதனை நன்கு கருத்திலிருத்தல் வேண்டும். ஏனெனில், குர்ஆன் கூறுவதுபோல, 'மனிதன் அறியாமை மிக்கவன்'. நாம் மிகவும் இலகுவில் ஏமாற்றமடைகின்றோம்; பொறுமை என்பது எம்மிடம் மிகக் குறைவாகவே இருக்கின்றது. ஒரு சில தடவைகள் முயற்சி செய்து வெற்றி பெருவிடில், நாம் மனமுடைந்து விடுகின்றோம். ஆனுல், வெற்றி பெற்றுவிட்டாலோ, அகந்தை கொண்டுவிடுகின்றோம். இவ்விரு வழிகளிலும் நாம் நஷ்டமடைந்தவர்களாகவே இருக்கின்றோம். அதனுலேயே ஒழுக்க வளர்ச்சியானது, ஆயுட்காலம் வரை நீடித்திருக்கின்றதும், முடிவற்றதும், நின்றுவிடாததுமான ஒரு செயல்முறை என்பதை மனதிற்கொள்ள வேண்டும்.

### அகல்விரிவான தன்மை

மூன்ருவது அம்சமாவது, 'தஸ்கியா' (Tazkiyah) 'தர்பியா'(Tarbiyah) என்பது அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு செயல்முறையாகும். உங்கள் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொண்டும், தெளிவுபடுத்திக் கொண்டுமிருக்கின்ற அதேவேளையில் அரசியல், பொருளாதார, சமூகச் சீர்கேடுகளில் நீங்கள் மூழ்கிக் கிடக்க முடியும் என்ற வகையான 'தஸவ்வுபில்' (Tasawwuf)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் நம்பிக்கை கொண்டதல்ல. 'தஸ்கியா' என்பது வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும், விவகாரங்களையும் உள்ளடக்கியது; வேறு வகையில் கூறுமிடத்து, எமது எண்ணங்களும், எமது வாழ்க்கையின் சமூகச் செயற்பாடுகளின் அந்தரங்கங்களும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்பவே அமைதல் வேண்டும். எனவே, இது அனைத்தையும் உள்ளடக்கிய முறையாக இருப்பதனால், சமயக்குழுக்களால் வகுக்கப்பட்ட ஒழுக்க வளர்ச்சி முறைகள் அல்லது, தஸ்கியாவானது. 'தஸ்கியா' பற்றிய இஸ்லாமிய கருத்து என்ற உறைகல்லில் வைத்து மட்டிடும் பொழுது அவை செயலிழந்து விடுகின்றன. துறவறம், பௌத்தம், தஸவ்வுப் ஆகியவை ஒரு மனிதனது வாழ்க்கையில் குறிப்பிட்ட ஓர் அம்சத்தை மட்டுமே விருத்தி செய்யும். உதாரணமாக, ஒழுக்கம், சமூக விவகாரங்கள், நிதி விடயங்கள் என்பவற்றில் ஏனையோரிடமிருந்து வேறுபாடான ஒரு புது மனிதனை உருவாக்கலாம். அவை இறையச்சமுடைய ஒருவனின் பண்புகளாகும். ஆனால், அனைத்தும் பொதிந்த அகல்விரிவான 'தஸ்கியா'வையே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செயல்முறைப்படுத்திக் காட்டினார்கள். நமது அண்ணல் நபியவர்கள் எமக்கு இபாதத்தைப் போதித்தார்கள். எமது பணக்கொடுக்கல் வாங்கல்கள், பொருளாதார, அரசியல் விவகாரங்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் கற்பித்தார்கள். ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்ட அரசியற் பொறுப்புகளும் கூட 'அமானத்' எனக்கூறப்படுவதோடு, நம்பத்தக்கவர்களுக்கே அதனைக் கொடுக்க வேண்டும் என்றும் நாம் ஏவப்பட்டிருக்கின்றோம். இவையெல்லாம் 'தஸ்கியா'வின் ஒரு பகுதியாகும்.

## இபாதத் என்பதன் பொருள்

கதீஜா நாயகியின் வர்த்தகப் பண்டங்களை எடுத்துச் சென்ற, வர்த்தகக் கூட்டங்களில் பங்குகொண்ட வர்த்தகத் தொடர்புகளே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதன் முதல் வேலையாக விளங்கியது என்பதனை அவதானிக்கலாம். ஒருவர் இன்னொருவரை பக்திமான் எனக்கூறியபொழுது, உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அவ்வாறு கூறியவரிடம் நாவை அடக்கிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள் எனக் கூறப்படுகின்றது. பின்பு உமர் (ரலி), "அவருடன் நீர் வசிக்கிறீரா? அல்லது அவர் உமது அயலவரா?" என்று கேட்டார்கள். அதற்கவர், "இல்லை" எனப் பதிலளித்தார். "நீர் அவருடன் பணக்கொடுக்கல் வாங்கல் செய்தீரா?" என்று உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அவர் 'இல்லை' என்றார். உமர் (ரலி) அவர்கள் மீண்டும் கேட்டார்கள்—"அவருடன் என்றாவது பிரயாணம் செய்திருக்கிறீரா? நீர் அவருடன் வசிக்காவிடின், ஆகக்குறைந்தது, அவருடன் பிரயாணம் செய்தாவது அவரைப் பற்றி அறிந்திருக்கின்றீரா?" அவர், "இல்லை" என்று கூறினார். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அவர் பக்திமான், நல்லவர் என்று கூற உமக்கு உரிமையில்லை. பள்ளிவாசலில் நீண்ட தொழுகையில் ஈடுபடுவது மட்டும் அவரை பக்திமானாக ஆக்கிவிடாது" என்று கூறினார்கள். எவ்வாறாயினும், இது இபாதத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடுவதில்லை. இபாதத்தின் முக்கியத்துவம் பாரியது. 'தர்பியா' என்பது அனைத்தையும் தழுவிய செயல்முறை என்பதையே இங்கு நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அது வாழ்க்கையின் பலதரப்பட்ட நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றது, என்பது அவதானிக்கற்பாலது.

## படிமுறை வளர்ச்சி

இவ்விடயம் சம்பந்தமாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரும் இறுதி அம்சம் யாதெனில், 'தஸ்கியா' என்பது படிப்படியாக, தானே வளர்ச்சியுறுகின்ற ஒரு செயல் முறையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே. அதாவது ஒருவர் எல்லாவற்றையும் உடனடியாக ஒரே தடவையில் விழுங்க விரும்பினால், அவ்வாறு அவருக்குச் செய்ய முடியாது; இது இயற்கைக்கு எதிரானது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை எப்பொழுதும் கருத்தில் கொண்டவர்களாக இருந்தார்கள் என்பதை அவதானிக்கலாம். ஒருவர் இஸ்லாத்தைத் தழுவுமிடத்து, அவரை உடனடியாக எல்லாவற்றையும் ஏற்றொழுகுமாறு பணிக்க மாட்டார்கள். மாறாக, தமது கடமைகளைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டுமென்றே அவர் எதிர்பார்க்கப்பட்டார். திருக்குர்ஆன் படிப்படியாக அருளப்பட்டமையிலுள்ள முக்கியமான நுட்பம் இதுதான். அதாவது, அவ்வாறு அருளப்படுவதற்கேற்ப, சமூகம் அதனைப் பின்பற்றவும், ஒரு புதுச் சமூகமாக மாற்றமடையவும் முடிந்தது. ஒழுக்கசீலத்தை வளர்த்துக் கொள்வதற்கான முயற்சி பற்றிய வகையில் இதனைக் கருத்திற் கொள்ளல் வேண்டும். அன்றேல் ஒருவன் விரக்தியடையலாம்; அல்லது முடியாததை அடைய முயற்சி செய்வான். அதன் காரணமாகவே, இஸ்லாத்தில் ஒழுக்க விதிகள் பற்றிய கருத்து விரிவானதாக இருக்கிறது; மனித வாழ்வின் எல்லா அம்சங்களையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கிறது.

ஈமானும், அறிவும்

தஸ்கியா, தர்பியா என்பவற்றின் அடிப்படைத் தத்துவங்களைத் திருக்குர்ஆனிலிருந்தும் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றிலிருந்தும் பெற முடியும். ஒழுக்க வளர்ச்சிக்கு அடிப்படை, அறிவே என்பது முதலாவதாக நாம் கூறவிரும்பும் தத்துவமாகும். குர்ஆனின்படி, ஈமான் (விசுவாசம்) என்பதே எல்லாவற்றிற்கும் ஆரம்ப நிலையாகக் கணிக்கப்படுகின்றது. ஈமானற்ற நற்செயல்கள் பயனற்றவை, எனவே, ஆரம்ப அம்சம் ஈமானாகவே இருத்தல் வேண்டும். ஈமான் என்பது உமது இரட்சகனை-படைத்தவனை அறிவதாகும். ஒருவன் அல்லாஹ்வின் விருப்பு அல்லது அவனது 'ரிழா'-நாம் என்ன செய்ய வேண்டுமென அவன் விரும்புகின்றான் — போன்றவைகளை அறியமுயலாவிடின், இந்த ஈமான் பூர்த்தியற்றதாகின்றது. அதன் காரணமாகவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் கட்டாயக் கடமை" எனக்கூறியுள்ளார்கள். அதனாலேயே மனித இனத்திற்கான அவர்களது நபித்துவப்பணி பின்வருமாறு ஆரம்பிக்கின்றது:

> "அவனே ஆதம்(அலை)அவர்களுக்கு எல்லாப் (பொருள்களின்) பெயர்களையும் கற்றுக் கொடுத்தான்."
>
> (அல்-குர்ஆன் 2 : 31)

அறிவுடையவன் பார்க்கக்கூடியவனென்றும், கண்களையுடையவனென்றும் மதிக்கப்படுகின்றான். அறிவற்றவன் குருடனுக்கே சமமாக்கப்பட்டுள்ளான்.

குறைந்த பட்ச அறிவு

ஒருவன் 'பிக்ஹ்' கற்பின், இஸ்லாம் என்றால் என்ன என்றும், இஸ்லாம் அல்லாதது என்ன என்றும் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதைக் கண்டு கொள்ளலாம். இதுவே, ஒருவனிடம் எதிர்பார்க்கப்படும் மிகக் குறைவான அறிவாகும். இமாம் கஸ்ஸாலி (ரஹ்) தமது 'இஹ்யா உலூமுதீனில்' (சமய இயல்களின் மறுமலர்ச்சி), இதனை முறையாகவும், விஞ்ஞான ரீதியாகவும், அற்புதமான வகையிலும் விரித்துரைத்தார்கள்; ஒருவன் இஸ்லாத்தைத் தழுவிவிட்டால், சில மணித்தியாலங்களின் பின் தொழுகைக்கு நேரம் வந்துவிடில், ஆகக் குறைந்தது தொழுகையை எவ்வாறு நிறைவேற்றவேண்டுமென்று அறிவது அவன் மீது கடமையாகின்றது. உண்மையில், 'இல்ம்' (அறிவு) என்ற சொல்லின் பொருள் மிக விரிந்தது. இது மார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவையோ அல்லது 'பிக்ஹ்' பற்றிய அறிவையோ குறிப்பதோடு, இவற்றில் ஒருவன் ஆகக் குறைந்த அறிவையாவது பெற்றிருக்க வேண்டுமென்றும் வேண்டி நிற்கின்றது. மேலும், மானிட வாழ்க்கை, சமுதாயம் பற்றிய அறிவு, இவற்றினை நிலைபேறுடையதாக்குவதற்கும், முன்னேற்றுவதற்கும் தேவைப்படும் அறிவு என்றும் பொருள்படும். ஒவ்வொரு நபரும் கட்டாயமாக அறிந்திருக்கவேண்டியதும்,அன்றேல் அதற்கு இறைவனிடம் பதில் கூறவேண்டியிருப்பதுமான பகுதியே மார்க்கத்தினைப் பற்றிய மிகவும் குறைவான அறிவாகும். இதுவே, 'பர்ளு ஐன்' எனப்படுகின்றது. மறுபுறம், சமுதாயத்திற்குத் தேவையான கைத்திறன், கைத்தொழில், தொழில் நுட்பம் ஆகியவற்றின் விருத்திக்கு அவசியமான அறிவைத் தேடுதலும், நிலைநாட்டுதலும் முழுச் சமுதாயத்தின் மீதும் கட்டாயக் கடமையாகின்றது. இதனை 'பர்ளு கிபாயா' என்று கூறலாம். மக்களில் சிலர் அதனை நிறைவேற்றினால், எல்லோரினதும் பொறுப்பு நிறைவேறிவிடுகின்றது. இப்னு தைமியா உதாரணம் கூறுவதுபோன்று, இரண்டாவது பகுதி, 'ஜிஹாத்' என்ற தன்மையானது.ஆனால், முதலாவது பகுதியோ, உதாரணமாக 'பர்ளு ஐன்' தொழுகை என்ற வகுப்பினுள் அடங்குகின்றது. இவ்வாறு அடிப்படையில் அறிவே ஆரம்பக்கட்டமாக இருக்கின்றது. பொது நோக்காகப் பார்த்தாலும், ஒருவர் தனது வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய 'ஸிபதுன் மஹ்மூதா' (போற்றற்குரிய பண்பு) என்ற பண்புகளையும், வாழ்க்கையில் தவிர்த்துக் கொள்ளவேண்டிய 'ஸிபதுன் மத்மூமா' (வெறுக்கத்தக்க பண்பு) என்ற பண்புகளையும் தெரிந்திருத்தலே ஒழுக்கவியல் வளர்ச்சி எனப் பொருள்படுகின்றது. உண்மையில் இவ்வாறின்றேல், இஸ்லாம் எதிர்பார்க்கும் முறைப்படி ஒருவனுக்கு வாழ முடியாது.

இந்தப் பயிற்சியைப் பொறுத்தமட்டில் அறிவு என்பது, சரியானது எது, பிழையானது எது என்பதையும், நன்மையானது எது, தீமையானது எது என்பதையும், 'ஹஸன்' எது 'ஸய்யிஆ' எது என்பதையும் கண்டறிதலாகும்.

### திருக்குர்ஆன்

இவ்வறிவின் முதலாவது ஊற்றுக்கண் திருக்குர்ஆனே. குர்ஆனைப் பல கோணங்களிலிருந்தும் ஆராயலாம். உதாரணத்திற்கு அதன் ஆழத்திற்கே செல்ல விரும்பும் அறிஞர்களின் கண்ணோட்டம் அதில் ஒன்றாகும். ஆனால், 'தஸ்கியா' என்ற நோக்கின் அடிப்படையில் பார்க்குமிடத்து குர்ஆன் எளிமையானது; மிக எளிமையானது: எவருக்கும் அஃதோர் திறந்த புத்தகமாக இருக்கிறது. அதன் அறிவைப் பெற நாடுபவரின் கிரகிப்புச் சக்திக்கேற்ப, அது தன்னைத் திறந்து வெளிப்படுத்திக்கொள்கிறது. 'தஸ்கியா'வைப் பொறுத்தவரையில் கைக்கொள்ள வேண்டிய பொதுநிலையான மனப்பாங்கு யாதெனில், குர்ஆனை ஓதுகையில், 'இக்குர்ஆன் உன்னிடம் என்ன கேட்கிறது?' என்ற வினாவை எழுப்புவதாகும். எளிதில் விளங்கக் கூடிய வார்த்தைகளில் சொல்வதானால், குர்ஆன் உன்னை என்ன விடயங்களைத் தவிர்க்கும் படியும், எவற்றைக் கைக்கொள்ளும் படியும் வேண்டுகிறது என்பதுதான். இந்த அடிப்படையில் நோக்குவதற்கு எவருக்கும் எந்தத் 'தப்ஸீரும், (வியாக்கியானம்) தேவைப்படுவதில்லை. குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் மிகத் தெளிவானதாக இருக்கிறது. எனவே, இக்கண்ணோட்டத்தில் குர்ஆனை ஓதினால், ஒரு தனிநபர் என்ற முறையில், அது உனக்கு உயிருள்ள வழிகாட்டி போன்று செயல்படுகிறது. அது உன்னிடம் நீ இதனைச் செய்ய வேண்டுமென்றும், இதனைச் செய்யக் கூடாதென்றும் கூறுகின்றது.

இவ்வாறுதான் ஸஹாபாக்கள் (நபி நாயகத்தின் தோழர்கள்) திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆனைப் பயின்று வந்தனர். ஓர் அறிவிப்பின்படி, அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் ஸூரத்துல் பகராவை எட்டு வருடங்களில் ஓதி முடித்ததாகவும், மற்றுமொரு அறிவிப்பின்படி பத்து வருடங்களில் ஓதிமுடித்ததாகவும் கூறப்படுகின்றன. எனினும், குர்ஆன் முழுவதையும் ஓர் இரவிலே ஓதிமுடிக்கவும் இயலும். ஆனால், அவர்கள் ஏன் அவ்வளவு காலமெடுத்தார்கள்? ஏனென்றால், குர்ஆனை ஓதுதல் என்பதன் பொருள் அதனை விளங்கிக் கொள்ளலும், அதனைப் பின்பற்றலுமேயன்றி, அவசரமாக ஓதிமுடித்தல் என்பதல்ல.

ஸுன்னு

மற்றைய மூலாதாரம் ஸுன்னுவாகும். தஸ்கியாவைப் பற்றியவரையில், திருக்குர்ஆனுக்குப் பிறகு ஸுன்னுவைவிடச் சிறந்ததொன்றைக் கண்டு கொள்ள முடியாது. உண்மையில், 'ஸுன்னு' எமக்கு மிகவும் சிறந்த படிப்பினையூட்டுவதாய் அமைகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்கள் மத்தியில் தஸ்கியாவுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றி வந்தார்கள் என்பதும், இந்தச் செயல்களை நிறைவேற்றும்பொழுது, இவைகளே அவர்கள் உரைத்த சொற்கள் என்பதையும், இவையே அவர்கள் ஆற்றிய செயல்கள் என்பதையும் ஸுன்னு புலப்படுத்துகின்றது. அது சிலவேளை ஒருவரது உள்ளத்தில் தானுகவே நுழைந்துவிடுவதைக் காணலாம். அதற்குத் தனிப்பட்ட ஒரு சக்தி இருக்கிறது. அதனால், அது ஒருவனது வாழ்க்கையை மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கிறது. மேற்கத்திய சமுதாய வாழ்க்கை முறையில் திருக்குர்ஆனுடனும், ஸுன்னுவுடனும் தொடர்பு கொண்டிருப்பதற்குப் பெருமுயற்சி செய்யவேண்டியிருக்கின்றது, என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

மன உறுதி

எனவே, ஒழுக்க உருவாக்கத்தின் அடிப்படைத் தத்துவம் அறிவேயாகும். ஆனால், அறிவு மாத்திரம் போதியதன்று. அது நிச்சயமாக அத்தியாவசியமானதுதான். ஆனால், ஒழுக்க உருவாக்கத்திற்குப் போதிய மூலாதாரமன்று. இரண்டாவது தத்துவம், உறுதியும் திடசங்கற்பமுமாகும். அது விருப்பம், ஆர்வம் என்பவற்றிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது. எமக்கு வேண்டியவாறு எத்தனை விருப்பங்களையும் கொள்ள முடியும்: அது ஒரு மோசமான விடயமல்ல. ஆனால், அது எமக்கு நற்குணமும், பயபக்தியும் மிக்க வாழ்க்கையொன்றை வாழ்வதற்கு உதவி செய்யாது. ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்வதற்குத் தேவைப்படுவது வெறும் விருப்பமல்ல: மன உறுதியேயாகும். அதனைக் குர்ஆனுடைய சொற்பிரயோகத்தின்படி 'அஸ்ம்' எனக் கூறலாம். 'அஸ்ம்' என்றால், நடைமுறையில் அதனைப் பின்பற்றுவதற்கும், அதற்காக ஒரு திட்டம் வகுப்பதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்குமுரிய தூண்டுதல் அல்லது எண்ணம் என்னோடு இணைந்த மனவுறுதி அல்லது திடசங்கற்பமாகும். எமது நம்பிக்கை அல்லது விருப்பம் பயன்முனைப்பானதாகவும், அர்த்தமுடையதாகவும் மாறுகின்றபோதே, அது 'அஸ்ம்'ஆகின்றது. இதனை விளக்கிக் காட்டுவதற்கு ஒரு சம்பவத்தைக் கூறலாம். மக்கா காலப்பிரிவில், தமது நபித்துவப் பணியைக் கைவிடவேண்டும் என்பதற்காக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சகல எதிர்ப்புச் சக்திகளும் ஒன்று திரண்டெழுந்தன. அதே வேளையில், அவர்களுக்கு ஒரேயொரு ஆதரவாளராக இருந்த சிறிய தந்தை (அபூதாலிப்) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அவர்களது பிரசார வேலையைக் கைவிட முடியாதா? என்று கேட்டபோது, நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் பின்வருமாறு பதிலிறுத்தார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர்கள் (குறைஷிக் காபிர்கள்) எனது வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் வைத்த போதிலும் எனது பிரசாரப் பணியைக் கைவிடமாட்டேன்.''

இதுவே 'அஸ்ம்' ஆகும். ஆகவே, தேவைப்படுவது மனவுறுதியும், திடசங்கற்பமுமேயாகும். இது நம்பிக்கை விருப்பு ஆகியவற்றினடியாகத் தோன்றலாம். ஆனால், அது முதலாவதாக வெளிப்பட வேண்டும். அப்போதுதான் ஒருவரின் பண்பாட்டு வளர்ச்சிக்கு அது உதவ முடியும்.

மனவுறுதியை வளர்த்துக்கொள்வதெப்படி?

அவ்வாறாயின், இந்த மனவுறுதியை எவ்வாறு உருவாக்கிக்கொள்ள முடியும்? அது மிகவும் தந்திரமானதொரு பிரச்சினை. இதற்குக் குர்ஆனில் காணப்படுகின்ற 'கஸஸ்' பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது ஒரு வழியாகும். குர்ஆனில் பல வரலாறுகள் (கஸஸ்) கூறப்பட்டிருப்பதைக் காணலாம். அவை வெறுமனே கதை சொல்வதற்காக மாத்திரம் குர்ஆனில் வந்தவைகளல்ல. அவைகளை வாசியுங்கள். அப்போது தனிநபர்களினதும், சமுதாயங்களினதும் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்புமையங்களின் வரலாறுகளைக் கண்டு கொள்வீர்கள். அப்படியான திருப்புமையங்களில், நேர்மையானவர்கள் தமது வாழ்க்கைப் பாதையில் தொடர்ந்து செல்வதற்கு எவ்வாறு மனவுறுதி கொண்டார்கள் என்பதைக் கண்டுகொள்ள முடியும். உதாரணத்திற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களினதும் ஸஹாபாக்களினதும் வாழ்க்கையை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் எவ்வாறு பாடுபட்டார்கள்! அவர்கள் வாழ்ந்த பிரதிகூலமான நிலைமைகளையும், அவர்களது மனவுறுதி திடசங்கற்பம் ஆகியவற்றையும் எண்ணிப்பாருங்கள்! இந்த விடயங்களை வாசிப்பதன் மூலம் ஒருவன் உணர்ச்சி பெறுவதோடு, இவ்வாறான மனவுறுதியையும், திடசங்கற்பத்தையும் தன்னில் வளர்த்துக்கொள்ளவும் முடியுமாகிறது.

ஒருவகையில், ஒருவரது வாழ்க்கையில் கைக்கொண்டுள்ள மனவுறுதி, திடசங்கற்பம் ஆகியவற்றினளவு, அவர் அல்லாஹ்வின் வாக்குறுதிகளிலும், அவனது தண்டனைகளிலும் கொண்டுள்ள உயிரோட்டமிக்க விசுவாசத்தைக் காட்டுகிறது எனக் கூறலாம். இந்த வாக்குறுதிகளிலும், இவ்வுலகிலும், மறுமையிலும் இறைவன் வாக்களித்த வெகுமதிகளிலும் கொண்டுள்ள எமது விசுவாசம், உண்மையான விசுவாசமாயின், அது எந்த அளவிற்கு உண்மையானது என்பது, மனவுறுதி, திடசங்கற்பம் ஆகியவற்றின் தீவிரத்திலேயே வெளிப்படும். மறுபுறமாகப் பார்க்குமிடத்து, தெய்வீகத் தண்டனையைப் பற்றிய வகையில் எமது விசுவாசம் பலமிக்கதாயிருப்பின், அது மனவுறுதி, திடசங்கற்பம் ஆகியவற்றில் வெளிப்பட்டுவிடும். இந்த மனவுறுதியை ஏற்படுத்தவல்ல மற்றுமொரு விடயம் நல்லவர்களின் சகவாசமாகும். இதுவரை நான் கூறியதெல்லாம் கடந்த காலத்தில் நிகழ்ந்த உதாரணங்களுடன் தொடர்புடையவை. ஆனால், இன்றைய சூழ்நிலையிலிருந்து கிடைக்கும் உதாரணங்கள் ஆழ்ந்த உணர்ச்சியைத் தூண்டத்தக்கதாயும், பயனுடையதாகவும் இருக்கின்றன. எனவே, நல்லோர் தோழமை மனவுறுதியை வளர்ப்பதற்குப் பெருமளவு உதவுகிறது.

மூன்றாவது அடிப்படைத் தத்துவம், 'அல்-அமலுல் ஸாலிஹ், (நற்கருமங்கள்) ஆகும். இது இல்லாமல் எவ்விதமான 'அஸ்பியா' (தெளிவு பெற்றோர்)களும் இருக்க மாட்டார்கள். 'தஸ்கியா' சாதாரண எண்ணங்களைப் பற்றியதல்ல. ஆனால், அது வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தை, ஒழுக்கம் போன்றவைகளைப் பற்றியது.

நாம் அறிவோடு ஆரம்பித்தோம். அறிவைச் செயற்படுத்துவதற்குத் திடசங்கற்பம் தேவை. இந்தத் திடசங்கற்பமே உண்மையில் அல் – அமலுல் ஸாலிஹூக்கு இட்டுச் செல்கிறது; அன்றேல் அதனை உருவாக்குகிறது. ஆனால், அதனையிட்டு ஆழமாகச் சிந்திப்பின், இந்தச் செயற்பாட்டின் மெய்ப்பாடுகள் அல்லது தீவிர உணர்ச்சிகளின் பங்கினை மனதில் இருத்தல் வேண்டும், என்பதைக் கண்டு கொள்ளலாம். உண்மையிலேயே, ஒருவர் அறிவுடனேயே ஆரம்பிக்கின்றார். பிறகு அவர் திடசங்கற்பம் பூண்டுகொள்கின்றார். ஆனால், அதன் பிறகு இந்தத் திடசங்கற்பம் செயல் முறைக்கு வருவது ஒருவரின் சமபலத்தாலும், உணர்ச்சி வேகத்தாலும், தூண்டுதலாலுமேயாகும். அதுவே, ஒருவரது வாழ்க்கையில் உணர்ச்சி வேகம் வகிக்குமிடமாகும். இந்த மூன்று நிபந்தனைகளான அறிவு, திடசங்கற்பம், மெய்ப்பாடுகளை வாய்க்காற்படுத்துதல் ஆகியவற்றின் மூலமே 'அல்-அமலுல் ஸாலிஹ்' என்பதை உருவாக்க முடியும். திருக்குர்ஆன் தூய தர்க்கசாஸ்திரமல்ல. தர்க்கவியலின் துணையால் ஒருவரை வென்றுவிடலாம்; ஆனால், ஒருவரது வாழ்க்கையையும், நடத்தையையும் மாற்றியமைக்கக் கூடிய சக்தியை உருவாக்க முடியாது. ஒழுக்கம் என்ற நோக்கில் பார்க்குமிடத்து, எந்தவொரு தத்துவஞானியினது தத்துவமும், தனியாட்களையோ, சமுதாயங்களையோ மாற்றியமைத்ததாக நான் கேள்வியுறவில்லை. யாரோ ஒருவர் கூறியது போன்று, தர்க்கத்தின் மூலம் ஒருவரை நம்பவைக்கலாம்; ஆனால், ஒருவரை மாற்றியமைத்துவிட முடியாது'

(அடுத்த இதழில் முடியும்)


# இஸ்லாமிய சிந்தனை

## சந்தா விபரம்

- 'இஸ்லாமிய சிந்தனை' வருடத்திற்கு நான்கு இதழ்களாக, ஜனவரி, ஏப்ரல், ஜூலை, ஒக்டோபர் ஆகிய மாதங்களில் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ரூ. | 2-00 |
| தனிப்பிரதி (தபால் மூலம்) | ரூ. | 2-30 |
| வருடச் சந்தா | ரூ. | 9-20 |

- சந்தாக்களுக்கான காசுக்கட்டளை அல்லது தபால்கட்டளை எழுதும்போது Manager, Naleemiah Bureau of Islamic Publications என்றும், பணம் பெறும் கந்தோர் Beruwala என்றும் குறிப்பிடவும்.
- வி. பீ. பீ. கிடையாது.
- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


The Manager,
Naleemiah Bureau of Islamic Publications,
P. O. Box: 1,
BERUWALA (SRI-LANKA).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைப் போக்கில் திருப்பம் ஏற்படுத்திய

# பேரறிஞர் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) III



— கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள், தங்களது அறிவு, ஆத்மீக அனுபவம் ஆகியவற்றினடிப்படையில் ஒரு மாபெரும் சிந்தனைக் கோட்பாட்டை, ஆத்மீகத் தத்துவத்தைக் கட்டியெழுப்பினுர்கள். அவர்களது ஆக்கங்களில் இந்தச் சிந்தனைக் கோட்பாட்டை நாம் இனங்கண்டு கொள்ளலாம். பிரபஞ்சம், மனிதன், வாழ்வு ஆகியவற்றிற்கிடையேயுள்ள தொடர்பினை அல்-குர்ஆனினதும், ஹதீஸினதும் வழிநின்று அவர்கள் விளக்கும்பான்மை அற்புதமானது.

இஹ்யா உலூமுத்தீனின் மூன்ரும் பகுதியில் இமாமவர்களின் மனிதனைப் பற்றிய கோட்பாடு விரித்துரைக்கப் படுகின்றது. மனிதன் ஏனைய மிருகங்களைப் போன்று புலனுணர்வுகளைப் பெற்றிருந்தாலும், அவனுக்கேயுரிய தனிப்பண்புகளான, 'அறிவு' 'செயல் சுதந்திரம்' என்பன அவனை ஏனைய மிருகங்களிலிருந்து வித்தியாசப்படுத்துகின்றன. இமாமவர்கள் மனிதனை வித்தியாசப்படுத்தும் அறிவு, பொருட்களைப் பகுத்தறிந்து நோக்கி அதன் உண்மை நிலையை உணர்ந்துகொள்ளவும், பொருட்களைப் பற்றிய விரிவான விளக்கத்தைப் பெறவும், அறிவோடு தொடர்புடைய விடயங்களில் சத்தியத்தை அறிந்துகொள்ளவும் அவனுக்கு ஆற்றலை அளிக்கின்றது என்பதைக் குறிப்பிடும் அதே நேரத்தில், மனிதனின் செயல்சுதந்திரமானது, அவனது பகுத்தறிவு, நல்லது என அங்கீகரித்துத் தீர்ப்பு வழங்கிய ஒரு பொருளை அடையும் தீவிர ஆசையை அவனில் தோற்றுவிக்கின்றது எனவும் குறிப்பிடுகின்ருர்கள்.

ஆரம்பத்தில் குழந்தைகளின் அறிவு, செயல்சுதந்திரம் ஆகிய இரண்டும் வளர்ந்த நிலையில் காணப்படுவதில்லை. அவர்கள்பால் ஆசை, வேட்கை, கோபம் போன்ற பண்புகளும், ஏனைய வெளிப்படையான, மறைவான உணர்வுகளும் காணப்பட்டாலும் அவர்கள் வளர்ச்சியடைந்த நிலையிலேயே அவை வெளிப்பட ஆரம்பிக்கின்றன.

### அறிவின் படித்தரங்கள்

அறிவு என்பது மனிதனில் பொதிந்துள்ள ஆற்றல் சக்திக்கேற்பவும் அந்த அறிவின் சக்தி, தன்மைக்கேற்பவும் வித்தியாசப்படுகின்றது. எனவே தான் இறைதூதர்கள் (அன்பியா), மார்க்க அறிஞர்கள் (உலமா), மெஞ்ஞானிகள் (ஸூஃபி), தத்துவஞானிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு படித்தரங்கள் காணப்படுகின்றன. எனவே அவரவர்களது தகைமைக்கும், ஆற்றலுக்குமேற்ப 'அறிவு' பற்றிய உணர்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பெறுகின்றனர். உதாரணமாகப் பருவமடைந்தவன் அடையும் அனுபவங்கள் பற்றிய அறிவைக் குழந்தைகள் பெறுவதில்லை. ஒருவன் பருவமடைந்தவனுயினும், அவனுக்கு அறிவின்றேல், ஓர் அறிஞனின் அறிவையும் அனுபவத்தையும் அவன் அடைவதில்லை. அதேபோன்று ஓர் அறிஞன், மெஞ்ஞானிகளினதும், இறைதூதர்களினதும் ஆத்மீக அனுபவம் பற்றிய அறிவை அடைவதில்லை. எனவே, இறைவனின் அருட்கொடைகள் எல்லாச் சிருஷ்டிகளையும் பொதுவாகப் பொதிந்திருப்பினும், அவனுக்கே முற்றிலும் வழிப்பட்ட, தூய்மையான உள்ளமுடையோர்களே அதனை அடையும் தகைமை பெறுகின்றனர். எனவே, இறைவனின் அருட்கொடைகள் மனிதனைவிட்டும் தடுக்கப்படவில்லை. ஆனுல், பாபக்கறையால் மாசுபடிந்த உள்ளங்கள் அவற்றை அடைவதில்லை.[1]

மனம் ஒரு கண்ணுடி

எனவே, இறைவனின் பண்புகள், செயல்கள் பற்றிய அறிவையும், பிரக்ஞையையும் பெறுவதிலேயே மனிதனின் மேன்மையும், சிறப்பும் தங்கியுள்ளது. அதில்தான் அவனது பரிபூரணத்துவம் அடங்கியுள்ளது. மனிதனின் உள்ளத்தை இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் உருவங்களைப் பிரதிபலிக்கும் கண்ணுடிக்கு உவமிக்கின்முர்கள். கண்ணுடி, அதில் பிரதிபலிக்கப்படும் உருவம், பிரதிபலிக்கும் முறை ஆகிய மூன்றும் வித்தியாசமான மூன்று பொருட்களாகக் காணப்படுவது போல, மனிதனின் உள்ளம், பொருட்கள், அந்தப் பொருட்களை அறியும் முறை ஆகிய மூன்றும் வித்தியாசமானவை.

ஒரு பொருள் கண்ணுடியில் பிரதிபலிப்பதற்கு ஐந்து காரணங்கள் தடைக்கல்லாக அமையலாம்:

1. கண்ணுடியில் ஏதாவது குறை காணப்படலாம்.
2. கண்ணுடியல்லாத வேறு ஏதாவதொன்று இடைப்பட்டு பிரதிபலிப்பைத் தடுக்கலாம்.
3. பிரதிபலிக்கப்படும் பொருள் கண்ணுடிக்கு நேராக இல்லாமலிருக்கலாம்,
4. கண்ணுடிக்கும் பிரதிபலிக்கப்படும் பொருளுக்குமிடையில் ஏதாவதொன்று இருக்கலாம்.
5. கண்ணுடியைச் சரியாக வைப்பதற்கு, பிரதிபலிக்கப்படும் பொருள் எங்கே இருக்கின்றது என்று தெரியாமலிருக்கலாம்.

இவ்வாறு கண்ணுடியில் ஒரு பொருள் உரியமுறையில் பிரதிபலிப்பதை மேற்குறிப்பிட்ட ஐந்து காரணிகளும் தடுப்பதுபோன்று, மனிதனின் உள்ளம் யதார்த்தமான, சத்திய அறிவைப் பெறுவதை ஐந்து காரணிகள் தடுக்கின்றன என இமாமவர்கள் அந்த ஐந்து காரணிகளையும் பின்வருமாறு வகைப்படுத்துகின்முர்கள்:

1. உள்ளம் பூரண வளர்ச்சியடையாமல் குறைவான வளர்ச்சியை அடைந்திருக்கலாம். (உ-ம்: குழந்தைகளின் உள்ளம்)
2. பாபங்களும், தவறுகளும் உள்ளத்தில் கறைபடியச் செய்து அதனைத் திரையிட்டிருக்கலாம்.
3. அடைய விரும்பும் பொருளிலிருந்து உள்ளத்தின் கவனம் வேறுபக்கம் திரும்பியிருக்கலாம்.
4. புறப்பொருள் ஒன்று, யதார்த்தமான பொருளை அடைவதைத் தடுக்கலாம். (உ-ம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கீழான உணர்வுகளை வெற்றிகொண்ட மனிதன்கூட தொடர்ந்து சில விடயங்களைக் கண்மூடித்தனமாகச் செய்வதனுல் சத்தியத்தை அடைவதில்லை.

5. சத்தியத்தை அடையும் வழிமுறைகள் பற்றி ஒருவன் அறியாதிருக்கலாம்.

எனவே, இறைவனின் ஆத்மீக அருட்கொடைகள் எத்தகைய வேற்றுமையுமின்றி அனைத்து மனிதர்களையும் பொதிந்திருந்தாலும், மேற்குறிப்பிட்ட அம்சங்கள் காரணமாக மனிதன் அப்பேரருட் சுடரின் ஒளியைத் தரிசிக்கத் தவறிவிடுகிருன்.[3]

## ஆத்மா அழிவற்றது

இமாம் கஸ்ஸாலி அவர்கள் மனிதனுக்கு மேன்மையும், கண்ணியமுமளித்து அவனை ஏனைய படைப்பினங்களிலிருந்து வித்தியாசப்படுத்தும் அம்சமாக 'ஆத்மா'வை மதிக்கின்ருர்கள். தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்த ஆத்மாவைக் குறிக்க 'கல்ப்', 'ரூஹ்', 'நப்ஸ்', 'அக்ல்' ஆகிய பதங்களைப் பிரயோகிக்கின்ருர்கள்.[3] மனிதன் மிக வளர்ச்சியடைந்த மிருகமேயன்றி வேருென்றன்று என்ற சடவாதிகளின் கோட்பாட்டைத் தகர்த்தெறிந்து ஆத்மாவின் நித்திய தன்மையை நிதர்சனமாக அவர்கள் விளக்கியுள்ளார்கள்.[4] உடலுக்கும், ஆத்மாவுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை விளக்கமுனையும் அவர்கள், முன்னையது ஆன்மீக உலகைச் சேர்ந்தது என்றும், பின்னையது சடரீதியான பிரத்தியட்ச உலகைச் சேர்ந்ததென்றும் விளக்குகின்ருர்கள். பிளேட்டோ கருதுவதுபோன்று, ஆத்மா என்பது நித்தியமாக இருந்துவரும் பொருளன்று எனக்குறிப்பிடும் இமாமவர்கள், ஒரு குழந்தை தாயின் கர்ப்பத்தில் கருத்தரிக்கும் பொழுது 'ஆலமுல் அர்வாஹ்' என்னும் ஆன்மீக உலகில் இறைவனுல் அது சிருஷ்டிக்கப்படுகிறது என விளக்கி, இவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட ஆத்மா என்றும் அழிவற்ற நித்தியமான தன்மையைப் பெறுகிறது எனக் குறிப்பிடுகின்ருர்கள்.

'ஆத்மா', இவ்வுலகிற்கு ஒரு தண்டனையை அனுபவிக்கவே வருகின்றது என்ற கிறிஸ்தவக் கோட்பாட்டை மறுத்துரைக்கும் இமாமவர்கள், ஒவ்வொரு ஆத்மாவும் தன்னை ஓர் உயர்ந்த வாழ்விற்கு ஆயத்தப்படுத்திக்கொள்ளும் ஓர் உயர் பணிக்காகவே இவ்வுலகிற்கு வருகின்றதென விளக்குகின்ருர்கள். ஆத்மா என்பது அதன் மூல உருவில் தூய்மையானதாகவும், புனிதமானதாகவுமே விளங்குகின்றது. எனவே, தீமையின்பால் திரும்புவதென்பது அதன் மூலப்பண்பிற்கு முரணனதாகும். ஒவ்வொரு ஆத்மாவும் தனது நித்திய வாழ்விற்கான சாதனங்களைப் பெற்றுக்கொள்ளத் துணைசெய்யும்வகையில் அதற்கு ஓர் உடல் வழங்கப்படுகின்றது. எனவே, ஆத்மாவிற்கு உடல் மிகவும் அவசியமாகின்றது. எனவே, உடலின் நலத்திலும் பரிபூரண கவனம் செலுத்தப்படல் வேண்டும்.[5]

உடலில் உள்ள எல்லாப் பொருட்களும் ஆத்மாவின் வளர்ச்சிக்கு உதவும் வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. உடலின் அவயவங்கள் போன்ற இவற்றிற் சில கண்ணுக்குப் புலப்படுபவை; ஆசை, வேட்கை, கோபம் போன்ற உணர்வுகள் கண்ணுக்குப் புலனுகாதவை. ஆனுல், இந்தப் புலன்களும், உணர்வுகளும் மனிதனுக்கும், மிருகங்களுக்கும் பொதுவானவை. ஆனுல், மனிதனை, மிருகங்களிலிருந்து வித்தியாசப்படுத்தும் அம்சமாக 'அறிவு' விளங்குகின்றது. புலன்களுக்குப் புலப்படாத பல விடயங்களை இந்த அறிவே மனிதனுக்குத் தெரியப்படுத்துகின்றது.

## மகிழ்ச்சி மிக்க மறுமை வாழ்வு

இந்த அறிவும், இறைதூதும் இணைந்து மனித ஆத்மாவை வெற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதைக்கு அழைத்துச் செல்கின்றது. மனித வாழ்வின் அடிப்படை இலட்சியம் மறுமை வாழ்வின் மகிழ்ச்சியே, (அஸ்-ஸஆததுல் உக்ரவிய்யா) எனக் குறிப்பிடும் இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள், மனிதனின் நியாயமான உணர்வுகளை ஒழிப்பதன் மூலமாக வன்றி, அவற்றைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதன் மூலமாகவே இது சாத்தியமாகும் எனக்குறிப்பிடுகின்றூர்கள்.[6] மறுமை வாழ்வில் மகிழ்ச்சியும், நிறைவும் பெறத் துணை புரியும் செயல்களே சிறந்த செயல்களாகும். மறுமை வாழ்வின் மகிழ்ச்சியும், நிறைவுமே இறைதூதர்கள் அனைவரினதும் போதனையின் அடிப்படையாக விளங்கியது. மறுமை வாழ்வின் மகிழ்ச்சியும், நிறைவும் நான்கு முக்கிய பண்புகளை உள்ளடக்கியுள்ளது: அவையாவன முடிவும், எல்லையுமற்ற நித்தியத் தன்மையும், துயரமற்ற மகிழ்ச்சியும், அறியாமையின் ஆதிக்கமற்ற பேரறிவும், எத்தகைய தேவையுமற்ற பரிபூரண திருப்தியுமாகும் என இமாமவர்கள் குறிப்பிடுகின்றூர்கள்.[7]

மறுமை வாழ்வின் மகிழ்ச்சிக்கும் வெற்றிக்கும் துணை புரியும் சாதனங்களாக அறிவையும் நற்செயலையும் இமாமவர்கள் கணிக்கின்றூர்கள். இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

> "(ஆகவே) பொருளும் மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே (யன்றி நிலையானவைகளன்று). என்றுமே, நிலையான நற்கருமங்கள் தாம், உம் இறைவனிடத்தில் நற்கூலியைப் பெறுவதற்கும் நன்னம்பிக்கை கொள்வதற்கும் மிக்க மேலானவையாகும்." (18 : 46)

நற்பண்புகள்

மறுமையின் மகிழ்ச்சிக்கு வழிகோலும் நற்செயல்கள் வரிசையில் நற்பண்புகளுக்கே இமாமவர்கள் சிறப்பிடம் வழங்குகின்றூர்கள். மனிதனின் உள்ளத்திலிருந்து தீமையான பண்புகளை அகற்றி, நன்மையான பண்புகளை வளர்ப்பதே இதன் அடிப்படையாகும். இந்த நற்பண்பினை 'ஹுஸ்னுல் குல்க்' என அழைக்கும் இமாமவர்கள், ஞானம், துணிவு, நிதானம், நீதி ஆகியவற்றை இந்தப் பண்புகளின் அடிப்படையாகக் கருதுகின்றூர்கள். ஒரு மனிதன் இறையருளால் நற்பண்புகளைப் பெற்றிருக்கலாம். எனினும், நற்பண்புகளைப் பெறும் முக்கிய வழிகளாக 'முஜாஹதா', 'ரியாழா'[8] ஆகியவற்றை இமாமவர்கள் குறிப்பிடுகின்றூர்கள். இத்தகைய ஆத்மீகப் பயிற்சிகளுக்கு, நல்ல மனிதர்களின் வாழ்வை அவதானிப்பதும், அவர்களோடு இணைந்து பழகுவதும் ஒருவனின் நற்பண்புகள் வளரத் துணை புரியும் எனக்குறிப்பிடும் இமாமவர்கள், மனிதன் இயற்கையாகவே பிறரைப் பின்பற்றுபவனென்றும், எனவே தன்னையறியாமலேயே ஏனையவர்களின் பண்புகளைச் சூழலிலிருந்து அவன் பெற்றுக்கொள்கின்றுன் என்றும் குறிப்பிடுகின்றூர்கள். நற்பண்புள்ளவர்களை, அவதானிக்கும் வாய்ப்போ, அவர்களோடு பழகும் வாய்ப்போ அற்றவர்கள், அவர்களது குணநலன்களை, அவர்களது வாழ்க்கை வரலாறுகளை வாசிப்பதன் மூலம் அடைதல் முடியுமென விளக்கும் இமாமவர்கள், இப்பயிற்சிக்காக நபி, ஸஹாபாக்கள், தாபிஈன்கள் போன்ருேரின் வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய 'ஹில்யதுல் அவ்லியா'[9] போன்ற நூல்களை வாசிப்பதற்குச் சிபார்சு செய்கின்றூர்கள். நற்பண்புடையோர்களின் நடத்தைகளை அவதானித்தும், அவர்களோடு நெருங்கிப் பழகியும் நற்பண்புகளைப் பற்றிய அறிவைப் பெறும் இப்பண்பு குழந்தைகளுக்கு நற்பண்புகளில் பயிற்சியளிப்பதில் முக்கியமாகக் கையாளப்படல் வேண்டுமென்றும், ஏனெனில், குழந்தைகள்பால் பிறரைப் பின்பற்றும் பண்பு இயல்பாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுவதால், குழந்தைகளைப் பொறுத்தவரையில், அவர்களது பண்பாட்டுப் பயிற்சிக்கு இம்முறை சிறந்த பலனையளிக்குமென்றும் இமாமவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

### குழந்தைகளுக்கான ஒழுக்கப் பயிற்சி

குழந்தைகளின் ஒழுக்கப் பயிற்சி பற்றிய இமாமவர்களின் கருத்தை விளக்க இது பொருத்தமான சந்தர்ப்பமாகும். குழந்தைகளுக்குச் சிறந்த ஒழுக்கப் பயிற்சியை அளிப்பது பெற்றோர்களின் கடமையென இமாமவர்கள் கருதுகின்றார்கள். இதற்காதாரமாகப் பின்வரும் திருமறை வசனத்தை மேற்கோளாகக் காட்டுகின்றார்கள்.

> "விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும், மனிதர்களும் கற்களும் எரிபொருளாகக்கூடிய நரக நெருப்பிலிருந்து இரட்சித்துக் கொள்ளுங்கள்."
>
> *(66 : 6)*

குழந்தைகளின் ஒழுக்கப் பயிற்சியில் ஆசிரியர்கள் வகிக்கும் முக்கிய இடத்தைப் பற்றிச் சிறப்பித்துப் பேசும் இமாமவர்கள், முதியோரைப் பொறுத்தளவில் நல்லவர்களோடு இணைந்து நடப்பது நற்பண்புகளின் வளர்ச்சிக்கு ஏதுவாக அமைவதுபோல, குழந்தைகளைப் பொறுத்தளவில் தீயவர்களின் சகவாசத்திலிருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளலே நற்பண்புகளுக்கான அடிப்படை எனக் குறிப்பிடுகின்றார்கள். குழந்தைகள்பால் பின்பற்றுதல் இயற்கையாகவே சிறப்பாகக் காணப்படுவதாலேயே இம்முறை அவர்களைப் பொறுத்தளவில் கடைப்பிடிக்கப்படல் வேண்டுமென்பது இமாமவர்களின் கருத்தாகும்.[10]

குழந்தையின் ஒழுக்கப் பயிற்சி குழந்தைப் பருவத்திலிருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும், எனக் குறிப்பிடும் இமாமவர்கள் சன்மார்க்கப்பற்றும், பக்திசிரத்தையுமிக்க ஒரு தாயினால் குழந்தைக்குப் பாலூட்டப்படல் வேண்டுமென்றும் தீய பண்புள்ள ஒரு மூலத்திலிருந்து பெறப்படும் பால், தீமையின்பால் அக்குழந்தையின் இயற்கைத் தன்மையை இட்டுச் செல்லும் எனவும் குறிப்பிடுகின்றார்கள். ஒரு குழந்தை பேச ஆரம்பிக்கும் பொழுது, அவனைச் சிருஷ்டித்த, வல்ல இறைவனின் நாமம் அவனுக்குப் படிப்பிக்கப்படல் வேண்டும். அவன் நன்மையைத் தீமையிலிருந்து பிரித்தறியும் பக்குவநிலை (தம்யீஸ்)யை அடைந்ததும் அவனில் வெட்க உணர்வு தோன்ற ஆரம்பிக்கும். இந்நிலையில், அந்தப் பிரித்தறியும் ஆற்றலினால் சில தீமைகளிலிருந்து அவனாகவே ஒதுங்கிக்கொள்வான். வெட்கம், நாணம் என்பன சிறந்த பண்புகளாகும். இவை ஒரு குழந்தையில் தோன்ற ஆரம்பித்ததும், இப்பண்புகள் மேலும் வளர்க்கப்படல் வேண்டும்.[11]

### நற்பழக்க வழக்கங்கள்

குழந்தையில் முதலில் தோன்றும் வேட்கை, உணவு பற்றியதாகும். உணவை அருந்த முன்னர் இறைவனின் நாமத்தை உச்சரிக்கவும், உணவு அருந்துவதில் வலது கையைப் பயன்படுத்தவும், அவனுக்குப் பக்கத்தில் உள்ளதையே சாப்பிடவும், சாப்பாட்டை நன்கு மென்று சாப்பிடவும், பிறருக்கு அருவருப்பில்லாமல் நடந்து கொள்ளவும் பயிற்சியளிக்கப்படல் வேண்டும். உணவு பற்றிய பேராசையை மிருகங்களின் பண்பாக அவனுக்கு உணர்த்தி, இப்பண்பின் இழிநிலை அவனுக்கு உணர்த்தப்படல் வேண்டும். ஆடம்பரமான உணவு, பானம், உடை ஆகியவற்றிற்கான அவனது ஆர்வம் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். பொறாமை, களவு, பெருமை முதலிய பண்புகளிலிருந்து அவனைக் காப்பாற்றுவதற்காக இத்தகைய பண்புகளுடையோருடன் அவன் பழகுவது தவிர்க்கப்படல் வேண்டும். குழந்தை ஏதாவதொரு நல்ல செயலைச் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால், அவன் பிறரின் முன்னிலையில் பாராட்டப்படல் வேண்டும். அவன் முதன் முதலில் ஒரு தவறைச் செய்து, குறிப்பாக அவன் அதை மறைக்க முயன்றால் அதனைப் பொருட்படுத்தல் கூடாது. அதனை அவன் மீண்டும் புரிந்தால், அவன் இரகசியமாகக் கண்டிக்கப்படல் வேண்டும். ஆனால், அவனை எப்பொழுதும் கண்டித்துக் கொண்டிருக்கலாகாது. தந்தையின் கண்டிப்பையும், தண்டனையையும் அவனுக்கு உணர்த்தி, தாய் அவனைத் தவறு செய்வதில் நின்றும் தடுத்தல் வேண்டும்.[12]

கல்வி

பாடசாலையில் அவனுக்குத் திருக்குர்ஆன், ஹதீஸ், மகான்களின் வரலாறு என்பன போதிக்கப்படல் வேண்டும். கீழான உணர்வுகளைத் தூண்டும் காதல் கவிதைகளைப் படிப்பதைவிட்டும் அவன் தடுக்கப்படல் வேண்டும். அவனது உடல் நலன்கருதி, நடத்தல், தேகப்பயிற்சி போன்ற உடற்பயிற்சிகளில் ஈடுபடத் தூண்டல் வேண்டும். பகலில் அவனைத் தூங்கவோ, அன்றி இரவில் அதிக நேரம் தூங்கவோ அனுமதிக்கக் கூடாது. ஏனெனில், இஃது அவனைச் சோம்பேறியாக மாற்றிவிடும். பெற்றோர், ஆசிரியர், முதியோர் ஆகியோர்களுக்குக் கண்ணியமளிக்கவும், அவனில் வீரம், ஆண்மை, மன உறுதி ஆகியவற்றை வளர்த்துக்கொள்ளவும் அவனுக்குப் போதிக்கப்படல் வேண்டும்.

நன்மையைத் தீமையிலிருந்து பிரித்தறியும் ஆற்றல் பெற்ற பருவத்தில் இவ்வாறு போதனையும் பயிற்சியும் அளிக்கப்படும் ஒருவன், 'புலூக்' என்னும் பருவ வயதையடைந்ததும் அவனுக்கு இதுவரையும் போதிக்கப்பட்ட, பயிற்சியளிக்கப்பட்ட விடயங்களின் ஆழ்ந்த தத்துவங்களை உணர்ந்துகொள்வான். எனவே, இதற்கான காரணங்கள் தர்க்க ரீதியாக அவனுக்கு இப்பொழுது விளக்கப்படல் வேண்டும். அதாவது, உணவு என்பது வெறும் இன்பத்திற்காக அல்ல, இறைவனை வணங்குவதற்கான சக்தியை உடல் பெறுவதற்காகவே அருந்தப்படுகின்றது. மறு உலக வாழ்விற்கு ஆயத்தப்படுத்துவதற்கான விளைநிலமே இவ்வுலகம் போன்ற உண்மைகள் அவனுக்கு உணர்த்தப்படல் வேண்டும். அவன் ஏற்கெனவே ஒழுக்க வாழ்வில் பயிற்சி பெற்று விட்டதால் இந்தக் காரணங்கள் அவனது உள்ளத்தில் மிக ஆழமாகப் பதிந்துவிடும்.[13]

குழந்தையின் பண்பாட்டு வளர்ச்சி பற்றிய இமாமவர்களின் இக்கோட்பாடு, இமாமவர்களின் சிந்தனையில் ஆத்மீக வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பிடத்தை விளக்குகின்றது. பல்வேறு கலைகளையும் இமாமவர்கள் வகைப்படுத்துகின்ற பண்பும் இதனை மேலும் தெளிவுபடுத்துகின்றது.

கலைகள்

இமாமவர்கள் கலைகளை, சன்மார்க்கக் கலைகள் (ஷர்இய்யா), சன்மார்க்கக் கலைகளல்லாத கலைகள் (கைர் ஷர்இய்யா) என வகுக்கின்றார்கள். சன்மார்க்கக்கலை என்பது இறைதூதர் ஒருவர் மூலமாகவும், அதல்லாத கணிதம் போன்ற பிற கலைகள் பகுத்தறிவு மூலமாகவும், மருத்துவக்கலை போன்று பரிசோதனை மூலமாகவும், மொழி போன்று செவிப்புலன் மூலமாகவும் பெறப்படுகின்றன. சன்மார்க்கக் கலைகளல்லாத பிற கலைகளை மருத்துவம், கணிதம் போன்ற விரும்பத்தக்க கலைகள் என்றும், சூனியம், மாந்திரிகம் போன்ற விரும்பத்தகாத கலைகளென்றும், வரலாறு, கவிதை போன்ற அனுமதிக்கப்பட்ட கலைகளென்றும் அவர்கள் வகைப்படுத்துகின்றார்கள்.

விரும்பத்தக்க சன்மார்க்கக் கலைகள் நான்கு வகைப்படும். அவையாவன: மார்க்கத்தின் மூலாதாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய கலைகள் (உஸூல்), மார்க்கக் கிளைகள், பிரிவுகள் பற்றிய கலைகள் (புரூ), மார்க்கத்தின் முக்கியமானவை பற்றிய கலைகள் (முகத்தமாத்), அவற்றிற்குத் துணையான கலைகள் (முதம்மிமாத்).

மார்க்கத்தின் உஸூல் எனப்படும் மூலாதாரங்கள் நான்காகும். அவை யாவன: குர்ஆன், ஸுன்னு, இஜ்மா, அதாருஸ் ஸஹாபா என இமாமவர்கள் குறிப்பிடுகின்ருர்கள். மார்க்கத்தின் கிளைகள், பிரிவுகள் பற்றிய கலைகள் இம்மூலாதாரங்களிலிருந்தே பெறப்படுகின்றன.

இஹ்யாவின் மூன்ரும் பகுதியில் இமாமவர்கள் இக்கலைகளை எவ்வாறு பெற முடியும் என்பது பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இங்கு அவர்கள் அவற்றை சன்மார்க்கக் கலைகள் (ஷர்இய்யா) என்றும், பகுத்தறிவோடு தொடர்புடைய அறிவு (அக்லிய்யா) எனவும் பிரிக்கின்ருர்கள். பின்னையது பகுத்தறிவின் துணை கொண்டு பெறப்படுகின்றது, என விளக்கும் இமாமவர்கள் அவற்றை அவசியமான கலைகள் (அல் உலூமுள் ளரூரிய்யா) எனவும், பெறப்பட்ட கலைகள் (உலூமுல் முக்தஸப) எனவும் வகுக்கின்ருர்கள். சன்மார்க்கக் கலைகள் இறைதூதர்கள் மூலமாகவும், அவர்களுக்களிக்கப்பட்ட வேதநூல்கள் மூலமாகவும் பெறப்படுகின்றன, என அவர்கள் விளக்கியுள்ள சன்மார்க்கக்கலைகள், உலகியல் கலைகள் ஆகிய இரண்டையும் இணைத்து ஒருமுகப்பட்ட கல்விக் கோட்பாட்டைச் சமர்ப்பித்த இமாமவர்களின் பங்களிப்பு மகத்தானது. அவர்களது இந்த ஒருமுகப்பட்ட கல்வித் தத்துவத்தை இஹ்யாவில் பின்வருமாறு அழகாக விளக்குகின்ருர்கள்.

"ஆத்மாவின் வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்கும் பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்த கலைகள் அவசியப்பட்டாலும், அவை ஆத்மீக வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்கும் போதியதன்று. பகுத்தறிவிலிருந்து முற்றிலும் விடுபட்டு, கண்மூடித்தனமான பின்பற்றுதலை விரும்பும் ஒருவனும், திருக்குர்ஆன், ஸுன்னுவின் வழிகாட்டலிலிருந்து விடுபட்டு பகுத்தறிவோடு, திருப்தியடையும் ஒருவனும் ஏமாற்றத்திலேயே இருக்கின்றனர். இந்த இருபிரிவினரோடும் இணைந்திருப்பதைப் பற்றி எச்சரிக்கையாயிரு! இந்த இரண்டு முரண்பாடுகளையும் இணைப்பவனுக ஆகிவிடு! ஏனெனில், பகுத்தறிவின் அடிப்படையில் எழுதப்பட்ட கலைகள் உணவைப்போன்றவை. சன்மார்க்கக்கலைகள் மருந்துக்கு ஒப்பானவை. ஒரு நோயாளி மருந்தில்லா நிலையில் உணவினுல் பாதிக்கப்படுகின்ருன். அதேபோன்று ஆத்மாவின் நோய்களுக்கான பரிகாரம் ஷரீஅத்திலிருந்து பெறப்பட்ட மருந்துகள் மூலமாகவே நிவாரணம் பெறும். பகுத்தறிவினடிப்படையில் அமைந்துள்ள கலைகளுடன் திருப்தியடையும் ஒருவன், நோயாளி உணவினுல் பாதிக்கப்படுவதுபோல, அக்கலைகளினுல் பாதிக்கப்படுவான். பகுத்தறிவின் அடிப்படையிலமைந்த கலைகள் சன்மார்க்கக் கலைகளுக்கு முரணுனவை எனவும், அவற்றிற்கிடையே உடன்பாடு காணமுடியாதெனவும் கற்பனை செய்யும் ஒருவனின் கற்பனை, அவனது பகுத்தறிவுக் கண் குருடாகியதனுல் தோன்றிய கற்பனையாகும்."[14]

(முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைக் குறிப்புகள்:

1. இஹ்யா 11 பக்கம் 3
2. இஹ்யா 11 பக்கம் 2
3. இஹ்யா 111 பக்கம் 5
4. கீமியே ஸஆதா - பக்கம் 12, 13. மேலும் பார்க்க: முன்கித் மினளழால் - பக்: 30 - 31
5. ஜவாஹிருல் குர்ஆன், பக்கம் 16
6. இஹ்யா பாகம்: 4. பக்கம் 89, 139
7. இஹ்யா பாகம்: 4. பக்கம் 89
8. 'முஜாஹதா', 'ரியாழா' போன்ற பதங்கள் மனிதன் தனது கீழான உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, ஆத்மீக உயர்ச்சி பெறுவதற்காக மேற்கொள்ளும் ஆத்மீகப் பயிற்சிகளைக் குறிக்கின்றன. இது பற்றிய பூரண விளக்கத்திற்குப் பார்க்க:

   அபூதாலிப் அல் - மக்கி, கூதுல் குலூப் பாகம்: 2 பக்கம்: 225, 230
   அல் - ஹுஜ்விரி, கஷ்புல் மஹ்ஜூப் - பக்கம் : 331 - 332
9. இஹ்யா-பாகம் 4 : 89 'ஹில்யதுல் அவ்லியா' எனும் நூல் கி. பி. 1038ல் மரணித்த அபூநுஐம் அல் - இஸ்பஹானி அவர்களால் எழுதப்பட்டது. இந்நூல், ஸஹாபாக்கள், தாபிஈன்கள், ஸூபிகள் வாழ்வு பற்றிச் சிறந்த விளக்கங்களைக் கொண்டுள்ளது.
10. இஹ்யா பாகம் : 3 பக்கம் : 62
11. இஹ்யா பாகம் : 3 பக்கம் : 62
12. இஹ்யா பாகம் : 3 பக்கம் : 63
13. இஹ்யா பாகம் : 3 பக்கம் : 64
14. இஹ்யா பாகம் : 3 பக்கம் : 14 - 15
    மேலும் பார்க்க:
    அல்-கஸ்ஸாலி, "முஸ்தபா மின் இல்மில் உஸூல்"
    - பாகம்: 1 பக்கம் : 62, 63

*

## வாசகர் கவனத்திற்கு

தவிர்க்க முடியாத வகையில் அச்சகத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளால், ஜனவரியில் வெளிவர வேண்டிய சஞ்சிகை பெப்ரவரியில் வெளிவருவது குறித்து வாசகர்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

*

'இஸ்லாமிய சிந்தனை'யில் பிரசுரிப்பதற்காக இஸ்லாமிய கருத்துகளைத் தழுவிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. எழுதப்படும் கட்டுரைகள் ஆழமாகவும், ஆராய்ச்சி ரீதியாகவும் அமைதல் வேண்டும். தகுதியெனக் கருதப்படும் கட்டுரைகள் பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பவேண்டிய விலாசம்:

"Islamia Chinthanai"
Naleemiah Bureau of Islamic Publications,
P. O. Box. 1,
BERUWALA. (Sri-Lanka)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமானாரும் குழந்தைகளும்

— பேராசிரியர் அப்துல் காதிர் ஹுபைதி —

ஒரு நாட்டினரின் கலாசாரம், நாகரிசம் என்பன மட்டுமன்றி, ஆத்மீக, லௌகீக முன்னேற்றமும், உயர்ச்சியும் கூட, பெருமளவிற்குப் பிள்ளைகள் மீது காட்டும் கவனத்திலும், அவர்களது வளர்ச்சியிலும், நலனிலும் செலுத்தும் அக்கறையிலுமே தங்கியிருக்கின்றது. பிள்ளைகளைப் பற்றிய வரையில் மனிதனது நடத்தை, அவர்கள் பால் காட்டும் அன்பு, கருணை என்பனவெல்லாம் பிள்ளைகளது ஆளுமையைச் சீராக வளர்ப்பதற்கும், தம் மீதும், தம்மைச் சூழவுள்ள சமூகத்தின் மீதும் அவர்கள் நம்பிக்கை கொள்வதற்கும் முக்கியமானவையாக இருக்கின்றன. இது பிள்ளைகளிடையே வாழ்க்கை பற்றிய ஆக்கபூர்வமான நடத்தை விருத்தியடைவதற்குத் துணை புரியும்.

பிள்ளைகளுக்கு அன்பும் இரக்கமும், கவனமும் கருணையும் காட்டுவதனுல் அவர்களுக்குச் சமுதாயத்தின் மீது நல்லுறவும், நல்லுணர்ச்சியும் வளர்கின்றன. மாருக, அவர்களைத் தள்ளிவைத்தலாலும், அவர்களைப் பற்றிப் பாராமுகமாக இருப்பதனுலும் அவர்களது ஆளுமைசீர்குலைக்கப்படுகின்றது. எனவே, அவர்கள் மனமுறிவுக்குள்ளாவதோடு நெறிபிறழ்ந்தும் சென்று விடுகின்றனர். இதன் காரணமாகப் பிள்ளைகளிடம் எதிர்ப்புணர்ச்சியும், எதிரான நடத்தையும், வாழ்க்கை, சமூகம் என்பவற்றிற்கெதிராகக் கிளர்ச்சி செய்யும் மனநிலையும் தோன்றிவிடுகின்றன. பிள்ளைகள் சிறியவர்களாகவும், பக்குவமற்றவர்களாகவும் இருந்த நிலையில், மனிதன், அவர்களிடம் எதை விதைத்தானே அதனையே அறுவடை செய்யவேண்டியவனுக இருக்கின்ருன்.

### வாழ்க்கைக்கு அலங்காரம்

எவ்வாறெனினும், வாழ்க்கையில் தொடர்ச்சியும், சுபீட்சமும், முன்னேற்றமும் நிலவுவான் வேண்டி, அல்லாஹ் மனிதனுக்குக் குழந்தைப் பாசத்தை ஏற்படுத்தி உதவியுள்ளான். குழந்தைப் பாசமானது எல்லா மனிதரிடத்தும் உள்ளார்ந்த வகையில் காணப்படுகின்றது.

அன்பின் அரவணைப்போடு குழந்தை இவ்வுலகிற்கு வருகின்றது. அதன் உள்ளார்ந்த ஆற்றலை விருத்தி செய்யும் வகையில், இரக்கத்துடனும், கருணையுடனும் அது பராமரிக்கப்படுகின்றது. இது கௌரவமும், மதிப்பும் மிக்க ஆதமுடைய மக்களுக்கு அல்லாஹ் வகுத்தளித்த உயரிய திட்டமாகும். இத்தெய்வீகத் திட்டத்தின் இலட்சியங்களை உணர்த்துவதற்காகவே, பிள்ளைகள் மீதுள்ள பற்றை மானிடனது இயற்கை உணர்ச்சியாக ஆக்கியுள்ளான். பிள்ளைகள் பெற்ருேர்களது வாழ்க்கைக்கு மகிழ்ச்சியளிப்ப

மூலம் : The Journal Rabitat Al-Alam Al-Islami (1979), Mecca.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களாகவும் அலங்காரமாகவும் திகழ்வதாகத் திருக்குர்ஆன் வர்ணிக்கின்றது.

"பொருளும் மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே."
(18: 46)

பெருமானாரின் வருகைக்கு முன்

நாயகம் (ஸல்) அவர்கள் தெய்வீகத் தூதான இஸ்லாம் மார்க்கத்துடன் அனுப்பப்பட்ட வேளையில், மானிட இனமே இருளில் தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தது. அவர்களது சகல நடவடிக்கைகளிலும் அறியாமை ஆதிக்கம் செலுத்திற்று. பிள்ளைகளை நடாத்தும் முறைகூட இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. பிள்ளைகளோடு எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பதே மனிதனுக்குத் தெரியாதிருந்தது. அநீதியாலும், கொடுமைகளாலும் பிள்ளைகள் பாதிக்கப்பட்டனர். ஆத்மீக, லௌகீகப் பாதுகாப்புக்கான அவர்களது சட்டப்படியான உரிமைகள்கூட மறுக்கப்படும் நிலையே அக்காலத்தில் நிலவிற்று. குடும்பம் பாதுகாப்பாயும், முழுமை கெடாதுமிருந்த நிலையிலோ, அல்லது அது பிளவுபட்டும் இணைப்பறுந்தும் இருந்த நிலையிலோ, அல்லது பிள்ளைகள் தமது பெற்றோர்களது அன்பையும், சிரத்தையையும் அனுபவித்த நிலையிலோ,அல்லது பெற்றோரில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்த நிலையிலோ அல்லது அவர்கள் பெற்றோரது செல்வத்துக்கு உரிமையாளராக இருந்த நிலையிலோ, அல்லது எத்தகைய செல்வமும் அற்ற நிலையிலோ, பிள்ளைகளைப் பொறுத்த வரையில், மனித நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டங்கள் எதுவுமே இருக்கவில்லை. எல்லாவற்றையும் விட, குழந்தைகள் முதிர்ச்சியும், பக்குவமும் அடைந்த பிறகு, வாழ்க்கையின் இலட்சியத்தை உணரக்கூடிய வகையில், பிள்ளைகளது முன்னேற்றத்திற்கான அனைத்துச் செயல்முறைகளையும் வழிப்படுத்துகின்ற அந்த இலட்சியமோ, தெரியாததாயும், தெளிவற்றதாயும் இருந்தது.

பெருமானார் கொண்டுவந்த
மகத்தான மாற்றம்

பிள்ளைகளை நடாத்தும் முறையில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய சீர்திருத்தம், மானிட இனத்தைக் கவர்வதாயும், அதனை உயர்வுபடுத்துவதாயும் அமைந்தது. எனவே, பெருமானார் (ஸல்) அவர்களை, உலகின் அருட்கொடை (ரஹ்மத்துல் லில் ஆலமீன்) என அல்லாஹ் வர்ணிப்பதில் எத்தகைய அதிசயமுமில்லை. மானிட அறிவும், நடத்தையும் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகளாலும், முன்மாதிரிகளாலும் தூண்டப்பெற்றன. அப்பெருந்தகைமீது அன்பும், மரியாதையும் கொண்டிருந்த, நேர்மையான நடத்தையையுடைய நாயகத் தோழர்கள். அவர்களுக்குப் பின்னர் மக்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்தனர். இவர்களே நாயகம் (ஸல்) அவர்களின் சொல், செயல் பற்றிய தஸ்தாவேஜுகளைப் பாதுகாத்தனர். அன்னாருடைய போதனைகளை அகிலமெங்கும் பரப்பினர். ஸுன்னா சம்பந்தப்பட்ட நூல்களிலே, குழந்தைகளைப் பற்றிப் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகளிலுள்ள ஒப்பற்ற அறிவு நுட்பத்தைக் கண்டு கொள்ள முடியும். அதே நேரத்தில் அவர்களது உண்மையான நடத்தை என்ற மரபுரிமைச் செல்வமோ, விலைமதிக்கமுடியாத ஐஸ்வரியமாக, சந்ததி சந்ததியாக வந்து கொண்டிருக்கிறது. பதினான்கு நூற்றாண்டுகள் கழிந்த பின்பும், எமது பிள்ளைகளின் உயிர்களைக் காப்பாற்றியமைக்கும், அவர்களது நிலையை உயர்த்தியமைக்கும், நாம் அவர்கள் மீது சொரிகின்ற அன்புக்கும், அவர்களுக்குச் சூட்டுகின்ற அழகான பெயர்களுக்கும் இன்றும் கூட, நாயகம் (ஸல்) அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கடமைப்பட்டவர்களாகத் தானிருக்கின்றோம். முஸ்லிம்களிடமுள்ள ஒவ்வொரு சிறந்த பண்பும், நற்குணமும் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்தே பெறப்பட்டதாகும். பிள்ளைகளின் வாழ்க்கையில் நிலவும் மகிழ்ச்சிக்கும், திருப்திக்கும் அவர்களது உள்ளத்தையும், ஆத்மாவையும் இன்னமும் ஆட்கொண்டிருக்கும் அப்பெருந்தகையின் சீரிய செல்வாக்கே காரணமாகும். அன்னாரது போதனைகளும், முன்மாதிரியும் முழு மனித இனத்திற்கும் உள்ளுணர்வு பெறப் போதுமானவை. அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றுவதிலும், அவர்களது மேலான போதனைகளைச் செயல்படுத்துவதிலுமே எமது வெற்றி தங்கியிருக்கின்றது.

அல்லாஹ் தனது எல்லையற்ற கருணையின் காரணமாக, அவனுக்கு நாம் நன்றியுடையோராயிருக்கும் பொருட்டு, எமக்கு அவன் புரிகின்ற உதவிகளைப் பற்றித் திருக்குர்ஆனிலே ஞாபகமூட்டுகின்றான். குர்ஆன் கூறுகின்றது:

> "அல்லாஹ் விசுவாசிகள் மீது மெய்யாகவே அருள் புரிந்திருக்கின்றான். அவர்களுக்காக ஒரு தூதரை, (அதுவும்) அவர்களிலிருந்தே எழுந்தருளச் செய்தான். அவர், அவர்களுக்கு அவனுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து அவர்களைப் (பாபத்திலிருந்து) பரிசுத்தமாக்கியும் வைக்கின்றார். அன்றி அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். நிச்சயமாக, அவர்கள் இதற்கு முன் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருந்தனர்." (3: 164)

இத்திருவசனம் மேலே கூறப்பட்ட கருத்துகளை அழகாகச் சுருக்கித் தருகின்றது. இனி பிள்ளைகளின் நலனுக்குப் பெருமானார் (ஸல்) அவர்களின் பங்களிப்பைப் பற்றி சற்று விரிவாக ஆராய்வோம்.

**அண்ணல் நபியின் அழகிய முன்மாதிரி**

வாழ்க்கைக்கு இன்பமும், பெருமையும் அளிப்பவர்கள் பிள்ளைகளே, என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆதலால், அவர்களை அல்லாஹ் அளித்த பரிசு அல்லது அருட்கொடை என்றோ அல்லது அல்லாஹ் ஒப்படைத்த நம்பிக்கைப் பொறுப்பு என்ற வகையிலோ தான் ஏற்கவேண்டும். அவர்களை அன்போடும், மிக்க கவனத்தோடும் நடாத்தவேண்டும். ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்களின் புத்திரியான பாத்திமா நாயகி அவர்களின் பிள்ளைகளிலொன்று, பெருமானார் (ஸல்) அவர்கள் கொத்பா உரையாற்றிக் கொண்டிருக்கும்போது பள்ளிவாசலினுள் வந்தது. பிள்ளையைக் கண்டதும் பெருமானார் (ஸல்) அவர்கள் பிரசங்க மேடையிலிருந்து இறங்கினார்கள்; அதனைத் தமது கையிலெடுத்துக் கொண்டு, பிரசங்க மேடைக்கேறி, மீண்டும் தமது பிரசங்கத்தைத் தொடர்ந்தார்கள். இது மேலே கூறப்பட்ட உண்மையைக் கோட்பாட்டளவிலும், நடைமுறையிலும் உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

பிள்ளைகள் மீது மிகுந்த விருப்பமுடைய ஒரு தகப்பனாராகப் பெருமானார் (ஸல்) அவர்கள் இருந்தார்கள். அவர்களுக்குப் புத்திரர்களும், புத்திரிகளும் இருந்தனர். அன்னார் ஒரு தந்தை என்ற வகையில் தமது பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும், பொதுவாக எல்லாப் பிள்ளைகளுக்கும் கருணைகாட்டுவதில் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அபூஹுரைரா (ரலி) அவர்களின் அறிவிப்பொன்றின்படி, ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள், தமது பேரப்பிள்ளையான ஹஸன் இப்னு அலியை, அக்ரா இப்னு ஹாலிஸ் என்பாரின் முன்னிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் முத்தமிட்டார்கள். அப்போது அக்ரா, 'எனக்குப் பத்துப் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரைக் கூட நான் ஒருபோதும் முத்தமிட்டது கிடையாது' என்று கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவரைப் பார்த்து, 'கருணையற்றவன் கருணை காட்டப்படமாட்டான்' என்று கூறினர்.

வீட்டினுள் நுழையும்போது தமது பிள்ளைகளுக்கு வாழ்த்துக் கூறுவதும், முத்தமிடுவதன் மூலம் அவர்களுக்கு அன்பும் இரக்கமும் காட்டுவதும், அவர்களுடன் சேர்ந்து விளையாடுவதும் அவர்களுடைய வழக்கமாகும். அதே போன்று தமது தோழர்களுடைய பிள்ளைகளுக்கும் வாழ்த்துக் கூறுவார்கள். கருணைமிக்க சொற்களாலும், அன்பினாலும் அவர்களை மகிழ்விப்பார்கள். அவர்களைத் தமது ஒட்டகையின் மீதேற்றி மகிழ்வூட்டுவதையும் கூடத் தமது வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அன்பும், இரக்கமுமுள்ள அவர்கள், பிள்ளைகளைச் சந்திக்கும் போதெல்லாம் மிக்க பாசமும், கனிவும் உடையவர்களாக மாறிவிடுவார்கள். பிள்ளைகள் அழுவதைக் கேட்கும்போதெல்லாம் மனம் வருந்துவார்கள். அவர்கள் பள்ளிவாசலில் தொழுகையை நடாத்திக் கொண்டிருக்கும்போது, பிள்ளைகள் அழும் சப்தம் கேட்டால், பின் வரிசையில் தொழுது கொண்டிருக்கும் தாய்மார்கள் சென்று, பிள்ளைகளின் தேவைகளைக் கவனித்து, அவர்களைச் சாந்தப்படுத்துவதற்காகத் தொழுகையைச் சுருக்கிக் கொள்வார்கள்.

''பிள்ளைகளுக்கு இரக்கம் காட்டாதவனும், முதியோருக்கு மரியாதை செய்யாதவனும், கற்றோரைக் கண்ணியப்படுத்தாதவனும் என்னைச் சேர்ந்தவனல்லன்'' என நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். குழந்தைகளுக்குக் காட்டும் இரக்கத்தின் காரணமாகவே, இச்சமூகம் ஏனைய சமூகங்களிலிருந்து பிரித்தறியப்படுகின்றது என்றும் பகர்ந்தார்கள். தனது பிள்ளையாக இருந்தாலும், அனாதைப் பிள்ளையாக இருந்தாலும், பிள்ளைகள் பற்றிய வகையில் பெரிதும் சிரத்தை காட்டுதல் மிகவும் புகழத்தக்க செயல் எனக் கருதினார்கள். அவர்களுடைய உடல் சார்ந்த தேவைகளையும், ஆத்மீக நலனையும், கல்வித் தேவைகளையும், பொதுநலன்களையும் கவனித்துக் கொள்ளல் மிகப் பெரிய தர்மமாகும் என்றும் கூறிச்சென்றார்கள்.

### பெயர் சூட்டல்

எதிரிகளுக்குப் பயத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில், மலை, நெருப்பு, போர் போன்ற விரும்பத்தகாத பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்டும் முரட்டு விக்ரக வழிபாட்டு அரேபியரின் வழக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில், பிள்ளை பிறந்து ஏழு நாட்களின் பின்னர், உயர்ந்த கருத்தைத் தரும் சிறந்ததொரு பெயரைச் சூட்ட வேண்டுமெனப் பெருமானார் (ஸல்) அவர்கள் வலியுறுத்தினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், அவ்வாறான பெயர்களை விரும்பாததால், தமது தோழர்களுடைய அத்தகைய பெயர்களை அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியதும், மனதிற்கு உகந்த பெயர்களாக மாற்றியமைத்தார்கள்.

### 'அகீக்கா'

சுகாதாரத்திற்கு உகந்த நடவடிக்கை என்ற முறையில், பிள்ளையின் தலைமயிர் சிரைக்கப்பட்டு, அதன் நிறைக்குச் சமனான வெள்ளியை தர்மமாகக் கொடுத்தல் வேண்டும். பிள்ளை ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, இது மகிழ்ச்சியையும், தர்மத்தையும் குறிக்கும் சந்தோஷகரமான சந்தர்ப்பமாக இருக்கின்றது. 'அகீக்கா' எனப்படும் இஸ்லாமிய மரபு, அதாவது, இச்சந்தர்ப்பத்தில் ஆட்டையோ, செம்மறி ஆட்டையோ குர்பான் கொடுத்தல்— நாயகம் (ஸல்) அவர்களின் காலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்தே நடைமுறையிலிருந்து வருகின்றது.

'குழந்தைகளுக்குப் பொறுப்பாளியாக இருப்பதும். அவர்கள் மீது இரக்கம் காட்டுவதும் மார்க்க முக்கியத்துவம் வாய்ந்ததும், சமுதாயச் சார்புடையதுமான விடயமாகும். பெற்றோர்கள் உயிர் வாழ்ந்துகொண்டிருந்தாலும், இறந்து போயிருந்தாலும், ஆஜராயிருந்தாலும், இல்லாவிட்டாலும், பிரிந்திருந்தாலும், சேர்ந்திருந்தாலும், அவர்கள் அறியப்பட்டவர்களாக இருந்தாலும், அறியப்படாதவர்களாக இருந்தாலும் பிள்ளைகள் மீது மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம். குழந்தையினது நலனைக் கவனிப்பதற்கு உறவினர்களோ அல்லது நிறைவேற்றுநர்களோ இருப்பார்களாயின், அவர்கள் இக்கடமையினைச் செய்யுமாறு பணிக்கப்படுவார்கள். ஆனால். உறவினர் என்று சொல்ல யாருமில்லாத பட்சத்தில் பிள்ளைகளைக் கவனிக்கும் பணியானது, அதற்கென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களதும், பொதுமக்கள் உள்ளடங்கிய முஸ்லிம் சமூகத்தினர் அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாக ஆகிவிடுகின்றது.'[1]

குழந்தைகளின் தூய தன்மை

சமுதாயத்தில் குழந்தைகளின் அந்தஸ்தை அபிவிருத்தி செய்வதற்காகவும், அவர்கள் நீதியாகவும், கருணையாகவும் நடாத்தப்படுதலை உறுதிப்படுத்துவதற்காகவும் பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வருமாறு பிரகடனப்படுத்தினார்கள். 'ஒவ்வொரு குழந்தையும் தூய்மையும் பாவங்களற்ற நிலையிலுமே பிறக்கின்றது. இறைவன் சூழ்நிலைக்கேற்ப மாற்றியமைக்கத் தகுந்த தன்மையை (fitrah) அதற்கு அளித்துள்ளான். அதன் பின்னர் அதனுடைய பெற்றோர்களே, அதனை ஒரு யூதனாகவோ கிறிஸ்தவனாகவோ அல்லது விக்ரக வழிபாட்டுக்காரனாகவோ மாற்றிவிடுகின்றனர்.' இவ்வாறு குழந்தையின் கள்ளங்கபடமற்ற தன்மையும், தூய்மையும் நிலைநிறுத்தப்பட்ட உண்மையாகப் பிரகடனப்பட்டதுடன், அவர்களது ஆளுமையை உருவாக்குவதில் பெற்றோரது பங்கு தெளிவாக வலியுறுத்தவும் பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையானது பின்வரும் தத்துவத்தை நிலைநிறுத்துகின்ற குர்ஆனின் வழிகாட்டல் பற்றிய ஒரு விளக்கமேயாகும்.[2]

* குழந்தை மதிப்புக்கும், கண்ணியத்திற்கும் உரியதொன்றாகும்; "ஆதமுடைய சந்ததியை நிச்சயமாக நாம் கண்ணியப்படுத்தினோம்." (17;70)

* குழந்தை தூய்மை வாய்ந்ததாக இருப்பதோடு, மிகச் சிறந்த இயல்பும் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது:

"நிச்சயமாக நாம் மிகவும் நேர்த்தியான அமைப்பில் மனிதனைப் படைத்திருக்கின்றோம்." (அதாவது தூய்மையும், பரிபூரணமானதுமான தன்மை.)

* குழந்தை பாவமற்றது. தனது மூதாதையரின் பாவச் சுமையை மரபுரிமையாகப் பெறாது, தனது நடத்தைக்கு மட்டுமே தனிப்பட்ட முறையில் பொறுப்புடையதாக இருக்கின்றது. தன்னறிவு வருகின்ற வயது வரைக்கும் குழந்தை கள்ளங்கபடமற்றதொன்றாகவே கருதப்படுகின்றது. எனவே, தவறான நடத்தையின் நிமித்தம், வளர்ந்தோருக்கு அளிக்கப்படும் தண்டனையிலிருந்து அது பாதுகாப்புப் பெற்றதாகக் கருதப்படுகின்றது.

"பாபம் செய்யும் ஒவ்வோர் ஆத்மாவும் தனக்கே கேட்டைத் தேடிக் கொள்கின்றது. ஆகவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆத்மாவின் (பாபச்) சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது.'' (6: 164)

இத்தத்துவங்கள் மனிதனது கௌரவத்திற்கும், உண்மையான பெறுமதிக்கும், மகிழ்ச்சிக்கும் வழிகாட்டிகளாகத் திகழ்கின்றன. இவற்றைப் பங்கப்படுத்துவதன் காரணமாக, வரலாற்றில் அடிக்கடி நிகழ்ந்துள்ளதைப் போன்று, வறுமையும், வழிதவறலுமே ஏற்பட்டுவிடும்.

குழந்தைக் கொலை

பொதுவாகப் பிள்ளைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், குறிப்பாக இஸ்லாத்தின் வருகைக்கு முன் விக்ரக வணங்கிகளான அரேபியர்களிடமும், ஹிந்துக்கள், உரோமர் என்போரிடமும் காணப்பட்ட குழந்தைகளைக் கொலை செய்துவிடும் வழக்கத்தையும் பெருமானார் (ஸல்) அவர்கள் கண்டித்தார்கள். பெண் குழந்தைகள் பிறப்பதே கெட்ட சகுனம் என அரேபியர் கருதினர். தமது பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்துவிடும் அல்லது கொன்றுவிடும் அளவுக்கு, அவர்கள் அவ்வளவு கொடுமை நிறைந்தவர்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும் இருந்தார்கள். கொடியதும், மானிடத்தன்மையற்றதுமான இவ்வழக்கம் கண்டிக்கப்பட்டதோடு, முற்றாகத் தடை செய்யவும் பட்டது. மனம் விரும்பிச் செய்யப்படும் கருச்சிதைவும் ஒரு வகையில் குழந்தைக் கொலை எனக் கருதப்பட்டதால், அதுவும் தடைசெய்யப்பட்டது.

இவ்வகையில் குர்ஆனுடைய கட்டளைகள் மனித இனத்திற்குக் கருணை காட்டுவதாகவே அமைந்துள்ளன:

* ''நீங்கள் தரித்திரத்திற்குப் பயந்து, உங்கள் குழந்தைகளைக் கொலை செய்து விடாதீர்கள்: நாம் அவர்களுக்கும் உணவளிப்போம்: உங்களுக்கும் (அளிப்போம்.) அவர்களைக் கொலை செய்வது, நிச்சயமாக (அடாத) பெரும் பாபமாகும்.'' (17:31)

* ''எவர்கள் அறிவின்றி மூடத்தனத்தால் தங்கள் மக்களைக் கொலை செய்தார்களோ, அவர்களும், எவர்கள் அல்லாஹ் தங்களுக்கு(ப் புசிக்க)க் கொடுத்திருந்த (நல்ல)வற்றை, (ஆகாதென) அல்லாஹ்வின் மீது பொய் கூறித் தடுத்துக் கொண்டார்களோ அவர்களும், நிச்சயமாக நஷ்டமடைந்து விட்டார்கள். (ஆகவே,) அவர்கள் நிச்சயமாகத் தீய வழியிலேயே சென்றுவிட்டனர். நேர்வழியில் சென்றவர்களல்லர்.'' (6;140)

அவமானத்திற்குப் பயந்து, அருமைப் புத்திரிகளைக் கொலை செய்வதைக் குர்ஆன் தடுத்ததோடு இக்காட்டுமிராண்டித்தனமான பழக்கத்தை ஒரு குற்றமென்றும், அருவருப்பான செயலென்றும் அது வர்ணிக்கின்றது:

* ''அவர்களில் ஒருவனுக்குப் பெண் குழந்தை பிறந்ததாக நன்மாராயம் கூறினால், அவனுடைய முகம் (துக்கத்தால்) கறுத்து, கோபத்தை விழுங்குகின்றான்; (பெண் குழந்தை பிறந்ததாக) அவனுக்குக் கூறப்பட்ட இந்தக் கெட்ட நன்மாராயத்தைப் பற்றி (வெறுப்படைந்து) இழிவுடன் அதை வைத்திருப்பதா? அல்லது (உயிருடன்) அதை மண்ணில் புதைத்துவிடுவதா? என்று (கவலைப்பட்டு) மக்கள் முன் வராது மறைந்து கொண்டலைகின்றான். அவர்கள் செய்யும் தீர்மானம் மிகக் கெட்டதல்லவா?'' (16:58-59)

* ''உயிருடன் புதைக்கப்பட்ட பெண் குழந்தைகளை நோக்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எக்குற்றத்திற்காக நீங்கள் (உயிருடன் புதைக்கப்பட்டுக்) கொலை செய்யப்பட்டீர்கள்?' என்று கேட்கப்படும்." (81:8-9)

* நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: "யாரேனும் ஒருவனுக்கு ஒரு பெண்பிள்ளை இருந்து, அதனை உயிரோடு புதைக்காமலும், அநீதியான முறையில் நடாத்தாமலும், ஆண் பிள்ளையை அவனிலும் மேலாகக் கருதாமலும் இருப்பவனை அல்லாஹ் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வான்," நாயகம் (ஸல்) அவர்களின் மற்றுமொரு ஹதீஸ் பின்வருமாறு: "யார் இரு பெண்குழந்தைகளைப் பருவவயதடையும் வரை பராமரிக்கின்றனரோ, அவர் மறுமை நாளன்று என்னுடன் இவ்வாறு நெருக்கமாக இருப்பார்." எனக் கூறித் தமது விரல்களை ஒன்று சேர்த்துக் காண்பித்தார்கள்.

போர்களின்போது கூட குழந்தைகளைக் கொலை செய்வது தடை செய்யப்பட்டது. ஒரு முறை போர்க்களத்தில் இறந்துபோன குழந்தையொன்றைக் கண்டு, பெருமானார் (ஸல்)அவர்கள் மிகவும் வருந்தினார்கள். அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் உருண்டோடிற்று. சமாதான காலத்திலும், யுத்த காலத்திலும், எந்நிலையிலும் குழந்தைகளது உயிர் காப்பாற்றப்படவேண்டும் எனக் கட்டளையிட்டார்கள்.

நல்லொழுக்கம் கற்பித்தல்

கண்ணியமும், கௌரவமுமிக்க ஆண்களாகவும் பெண்களாகவும் வளர்வதற்கு உதவும் வகையில் தமது பிள்ளைகளைப் பொறுமையாகவும், நீதியாகவும், மரியாதையாகவும், அன்பாகவும் நடாத்தும்படி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மக்களுக்குக் கற்பித்தார்கள். தமது பிள்ளைகளின் நடத்தை பற்றிச் சிரத்தையுடையவர்களாக இருக்கவேண்டுமென்றும், அவர்களுக்குப் போதிய இஸ்லாமியக் கல்வி அளிக்கப்படவேண்டுமென்றும் பெற்றோரை வற்புறுத்தினார்கள். "பிள்ளைகளோடு ஒட்டியிருந்து, அவர்களுக்கு நல்லொழுக்கம் கற்பியுங்கள்" என அவர்கள் கூறினார்கள்.

"நல்லொழுக்கத்தை விடச் சிறந்த பரிசை எந்தத் தந்தையும் தனது மகனுக்குக் கொடுக்க முடியாது."

"வசைமொழிக்குப் பதிலாக அவனுக்கு அறிவுரை கூறுங்கள். நிச்சயமாக, அறிவுரை பகரல் வசைமொழி கூறுவதைவிடச் சிறந்தது."

இவ்வகையில், நல்லறிவூட்டவல்ல பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையொன்று பின்வருமாறு: "ஏழு வருடங்கள் உங்கள் குழந்தையோடு விளையாடுங்கள்: ஏழு வருடங்கள் அவனுக்கு நல்லொழுக்கம் கற்பியுங்கள்; ஏழு வருடங்கள் அவனைக் கண்காணியுங்கள்: பின்னர் அவனை உங்களது சகோதரனாக ஏற்றுக் கொள்ளுங்கள்."

பாத்திமா நாயகி அவர்கள் மீது, நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் செலுத்திய ஆக்கரீதியானதும், உயர்வானதுமான செல்வாக்கு, ஒரு தகப்பனாராக அன்னார் ஆற்றிய முன்மாதிரியான பணியைப் பெருமளவிற்கு எடுத்துக் காட்டுகின்றது. பாத்திமாநாயகி வரும்போது நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று, தமது பக்கத்தில் அவர்களை உட்கார வைத்துக்கொள்வார்கள். அவர்கள் மீது அன்னார் காட்டிய அன்பும், மரியாதையும், கருணையும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கல்வியும், அவர்கள் வளர்க்கப்பட்ட முறையும், பாத்திமா நாயகி அவர்கள் மிகச் சிறப்புவாய்ந்த நிலையை அடைவதற்கு உதவியாக இருந்தன. இவ்வுண்மை, அவர்களது தந்தையாராலேயே ஒரு தடவை குறிப்பிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பல ஆண்கள் உயர்ந்த அந்தஸ்தை அடைந்தார்கள். ஆனால், பெண்களில் நால்வர் மட்டுமே அந்தத் தரத்தை எய்தினார்கள்: அவர்கள் புஹறப்மதின் மகளான பாத்திமாவும், குவைலிதின் மகளான கதீஜாவும், முஸாஹிமுடைய மகளான ஆயிஷாவும், இம்ரானின் மகளான மரியமும் ஆவர்.''

பெண்ணின் பெருமை

இவ்வகையில் குர்ஆனுடைய கோட்பாடுகளினதும், கட்டளைகளினதும் அடிப்படையிலமைந்த அவர்களது முன்மாதிரி, நமது பிள்ளைகள் உயர்ந்த தரத்தையும், கீர்த்தியையும் அடைவதற்குத் துணைசெய்யும் ஒரு தப்பஞரின் பங்குக்கு முழு மானிட இனத்திற்குமே உன்னத எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

'பெற்றோரது வாழ்க்கையின் பெறுமதி மிக்க இன்பம்' எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் பெண் மக்களை வர்ணித்தார்கள். தமது பெண்மக்களுக்கு அன்பு செலுத்தும்படியும், அவர்களுக்கு நன்மை செய்யும் படியும், அவர்களைப் பற்றி உயர்வாகக் கருதும்படியும் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களுக்குக் கற்பித்தார்கள். பெண் பிள்ளைகள் பருவமெய்தி, திருமணம் செய்து கொடுக்கும் வரை, அவர்களைக் கவனமாக வளர்ப்பதற்கும், சிறந்த முறையில் நடாத்துவதற்கும் உரிய பரிசு மகத்தானதாக இருக்குமென்று கூறிய பெருமானார் (ஸல்) அவர்கள், இவ்வாறு நடந்துகொள்ளும் பெற்றோர் சுவனம் புகுவார்கள் என்றும் நன்மாராயம் கூறினார்கள்.

பெண் குழந்தையொன்று பருவமடைந்துவிட்டால், அவள் ஓர் ஆணின் பாதியாக ஆகிவிடுகின்றாள், எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் பகன்றார்கள்; உரிமைகள், கடமைகள் என்பவற்றிலும், அவளது வாழ்க்கையின் தனிப்பட்ட பொறுப்புகளிலும், இறுதி நாளில் இறைவனின் முன்னிலையிலும் ஆணுக்குச் சமமான நிலையை அவள் அடைகின்றாள், என்பதே இதன் பொருளாகும்.

தாய்மார்களின் பாதத்தின் கீழேயே சுவர்க்கம் இருக்கின்றது என்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் போதித்தார்கள். இதன் பொருள் பிள்ளைகளை வளர்த்தல், பயிற்றுவித்தல், அவர்கள் மீது கவனம் செலுத்தல், நற்குண நல்லொழுக்க இஸ்லாமியப் பாரம்பரியத்தைக் கையளித்தல் போன்ற தாய்மார்களது மகத்தான எதிர்காலப் பங்கினை மனதிற்கொண்டே, பெண் பிள்ளைகளை உயர்வாக மதித்து, அவர்களை நல்ல முறையில் நடாத்த வேண்டும். குழந்தைப் பருவத்திலும், இளம் வயதிலும் அவர்களைக் கவனத்தோடு வளர்க்கும் தாய்மார்களின் பண்பிலேயே, அடுத்த தலைமுறையினரின் ஒழுக்க, பண்பாட்டு நிலை நேரடியாகத் தங்கியிருக்கின்றது. இதைக் கருத்திற்கொண்டே, தாய்மார்களாகப் போகும் பெண் குழந்தைகள் நல்ல முறையில் வளர்க்கப்பட வேண்டுமென்றும், அன்போடும், கவனத்தோடும் ஆதரிக்கப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்க வேண்டும். நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவ காலத்திற்கு முன்னைய அரேபியரின் அல்லது இன்னும் சரியாகக் கூறுவதாயின், அனைத்து நாட்டினரதும் நடத்தைக்கும், அரேபியருக்கும் முழு மனித இனத்திற்கும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அளித்துச் சென்ற உயர்ந்த கோட்பாடுகளுக்குமிடையில் எவ்வளவு வேறுபாடு இருக்கின்றது!

பிள்ளைகளின் நன்றிக்கடன்

முஸ்லிம் பிள்ளைகள், தமது பெற்றோருக்குப் பின்வருமாறு பிரார்த்தனை புரிய வேண்டுமெனக் குர்ஆன் மூலம் கற்பிக்கப்படுகின்றனர்.

''என் இறைவனே! நான் குழந்தையாக இருந்தபொழுது (மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாக) என்னை அவர்கள் வளர்த்து, போஷித்த பிரகாரமே நீயும் அவ்விருவர் மீதும், அன்பும் அருளும் புரிவாயாக! என்றும் நீர் பிரார்த்திப்பீராக!"

(17: 24)

பெற்றோர் மீதான நன்றியுணர்வை வெளியிடுகின்ற இப்பிரார்த்தனையானது, பிள்ளைகள் முதிர்ச்சியடையும் வரை அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, பெற்றோர் மீது ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பைக் காட்டுகின்றது. பெற்றோரது இக்கருணைக்குப் பதிலாக பிள்ளைகள் தமது பெற்றோருடன், அவர்கள் முஸ்லிமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், சந்தர்ப்பசூழ்நிலைகள் எத்தகையதாக இருந்தாலும், கருணையும், இரக்கமும் உடையவர்களாக நடந்து கொள்ளுமாறு பணிக்கின்றது. குர்ஆன் கூறுகின்றது:

"உமதிறைவன் தாய் தந்தைக்கு நன்றி செய்யும் படியாகக் கட்டளையிட்டிருக்கின்றான்." (17: 23)

இரக்கமும் கருணையும் காட்டுவதன் மூலமும், நற்பண்புடையவர்களாக நடந்துகொள்வதன் மூலமும் தமது பெற்றோருக்கு நன்றியுடையவர்களாக இருக்கும்படி குர்ஆன் விசுவாசிகளைத் தூண்டுகின்றது.

"அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்துவிட்டபோதிலும், உம்மிடமிருந்து அவர்களை வெருட்டவும் வேண்டாம்; அவர்களை (நிந்தனையாக)ச் 'சீ' என்று சொல்லவும் வேண்டாம். அவர்களிடம் (எதைக் கூறியபோதிலும் புஜம் தாழ்த்தி) மிக்க மரியாதையாக (வும், அன்பாக)வுமே பேசும், அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடப்பீராக! அன்றி 'என் இறைவனே! நான் குழந்தையாக இருந்தபொழுது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் வளர்த்து, போஷித்த பிரகாரமே, நீயும் அவ்விருவர் மீதும், அன்பும், அருளும் புரிவாயாக!' என்றும் நீர் பிரார்த்திப்பீராக."

(17 : 23 -24)

நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

"உங்களது பெற்றோருக்குக் கீழ்ப்படிவுள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள்; உங்களது பிள்ளைகள் உங்களுக்குக் கீழ்ப்படிவுள்ளவர்களாக இருப்பார்கள்."

"தமது பெற்றோருடன் முறைகேடாக நடந்துகொண்டவன், தனது, மகனால் முறைகேடாக நடாத்தப்படுவான்."

"பெற்றோரது நல்லெண்ணம், இறைவனது நல்லெண்ணத்தைத் தோற்றுவிக்கும்."

"தனது பெற்றோருக்குக் கீழ்ப்படிவுள்ள மனிதனுக்கு, சுவர்க்க லோகத்தின், தலைவாயில் திறக்கப்பட்டிருக்கும்"

"தாய்மார்களின் கட்டளையின் பேரில், சுவர்க்கலோகம் திறக்கப்படும்."

"நீயும் உனக்குச் சொந்தமானவையும், உனது தகப்பனுருக்கு உரியவையே."

சகல வழிகளிலும், சமூகத்தின் சிறந்ததும், பரிபூரணத்துவம் வாய்ந்ததுமான அங்கத்தவர்களாகக் கூடியமுறையில், பிள்ளைகளுக்கு வழிகாட்டவும், அறிவுறுத்தவும், அவர்களை நல்வழிப்படுத்தவும் தமது கவனத்தைச் செலுத்தும்படி குர்ஆன் பெற்றோரைத் தூண்டுகின்றது. அது பின்வரும் திருவசனங்களில் வருவது போன்று ஒரு பிரார்த்தனையின் வடிவில் காணப்படுகின்றது:

"(என் இறைவனே!) எனக்காக என்னுடைய சந்ததியை நீ சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தி வை." (46: 15)

"எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் சந்ததிகளையும் எங்களுக்குக் கண்குளிர்ச்சியாக்கித் தந்தருள்வாயாக! அன்றி, பரிசுத்தவான்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக!" (25: 24)

நரகிலிருந்து காப்பாற்றுதல்

பின்வரும் திருவசனத்திலுள்ளது போன்று, நமது பிள்ளைகளை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக்கொள்ளும்படியும் திருக்குர்ஆன் நமக்கு அறிவுறுத்துகின்றது.

விசுவாசிகளே! நீங்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும், மனிதர்களும் கற்களும் எரிபொருளாகக் கூடிய நரக நெருப்பிலிருந்து இரட்சித்துக்கொள்ளுங்கள்." (66: 6)

உடல் ரீதியாகவும், அறிவு ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், ஆத்மீக ரீதியாகவும் அவர்களைப் பற்றிக்கூடிய சிரத்தை எடுப்பதன் மூலமே, பிள்ளைகளை நரக நெருப்பிலிருந்து காத்துக் கொள்ள முடியும். இதன் மூலமே பிள்ளைகளைச் சிறந்தவர்களாகவும், சீர்திருந்தியவர்களாகவும், பரிபூரணத்துவம் வாய்ந்த மானிடராகவும் மாற்றியமைக்க முடியும். இவ்வாறுனவர்கள் தாம் நேர்மையானவர்களாகவும், இறையச்சமுடையவர்களாகவும் இருப்பதோடு, முஸ்லிம் சமூகத்திற்கு மட்டுமன்றி, முழு மனித இனத்திற்கும் நன்மைபயப்பவர்களாகவும் விளங்குவார்கள். இதனையே பின்வரும் திருவசனமும் உறுதிப்படுத்துகின்றது.

"எவர்கள் விசுவாசித்து, அவர்களுடைய சந்ததிகளும், விசுவாசத்தில் அவர்களைப் பின்பற்றுகின்றார்களோ (அத்தகைய) அவர்களுடைய சந்ததிகளை, (அந்தச் சந்ததிகளின் நன்மைகள் குறைவாக இருந்தபோதிலும், அவர்களின் பிதாக்கள் திருப்தியடையும் பொருட்டு) அவர்களுடன் (சுவனபதியில்) சேர்த்து விடுவோம். (பிதாக்களின் நன்மையான) செயல்களில் ஒன்றையுமே அவர்களுக்கு நாம் குறைத்துவிடமாட்டோம்."

(அல்குர்ஆன் 52: 21)


REFERENCES :

1. Abdul Ali Hamudah, Islam in Focus, IIFSO, 197; P. 120
2. Ansari, - Fazlur Rahman, Qur'anic Foundation and Structure of Muslim Society, Vol. ii PP. 180-182

BIBLIOGRAPHY :

1. Siddiqi, Naeem, Muhammed, The Benefactor of Mankind, Islamic Publications (Lahore) PP. 49&50
2. Imam Islamil, Vehbi, Muhammad, The last Prophet, Igram Press, Cader Rapids, Iowa, USA, 1962
3. Nadwi, Sulaiman, Muhammad, The Ideal Prophet, Islamic Research & Publications (Lucknow) 1977; PP. 1-37.
4. Nadwi, Sayyid Abul Hassan, Al-Seerah Al-Nabawiah (Arabic) Darul-Shurooq, Jeddah, Saudi Arabia, 1977 pp. 71-81


தமிழில் : ஸிமெய்மே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலகின் பிடியில் இஸ்லாம் - II

எஸ். எம். பஸீல் பீ. ஏ. (ஆனர்ஸ்)

இதுவரையில் ஆராய்ந்தவற்றிலிருந்து உலக சமுதாயங்கள் என்றுமில்லாதவாறு பிரச்சினைகளின் மத்தியில் சிக்கியுள்ளதென்பதனைத் தெளிவாக அறிய முடிகின்றது. இதற்கு மேல் மேற்குலக நாகரிகங்களினால் உருப்படியான எதனையும் மனித சமுதாயத்திற்கு அளிக்க முடியாது. உலகினை இந்த நெருக்கடியான சட்டத்திலிருந்து விடுவிப்பதற்குரிய தகுதியும், உரிமையும் இஸ்லாத்திற்கு மட்டுமே உண்டு என்பதனை முஸ்லிம்கள் மட்டுமல்லாது மேற்குலக அறிஞர்களும் கூடப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்கின்றனர். இதனால்தான் தத்துவஞானி பெர்னாட்ஷா, 'இன்னும் ஒரு நூற்றாண்டிற்குள் முழு உலகமுமே இஸ்லாத்தை ஏற்றுவிடும்' என்னு ர கருத்தைச் சில வருடங்களுக்கு முன் வெளியிட்டார்.

உலகின் பிரச்சினைகளுக்குரிய பரிகாரங்களையும், சமுதாயங்களைப் புனரமைப்புச் செய்து அவற்றிற்கு வழிகாட்டுதற்குரிய செயல் திட்டங்களையும் இஸ்லாம் மட்டுமே நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. ஆனால், 'இவைகள் எங்கே?' என்பது தான் மேற்கத்தியரும், வளர்ந்துவரும் இஸ்லாமிய இளைஞர்களும் எம்மிடம் கேட்கும் முதற்கேள்வியாகும். இஸ்லாமிய நாடுகளினதும், சமுதாயங்களினதும் நடை, உடை, பாவனைகளைப் பார்த்து இஸ்லாத்தின் பெறுமதிகளையும், அதன் தாத்பரியங்களையும் அவர்கள் குறைத்து எடை போடுகின்றனர். இன்றைய இஸ்லாமிய உலகின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளுக்கும், மேற்குலகின் அமைப்புகளுக்குமிடையில் வேறுபாடுகளைக் காண்பது கஷ்டமாக இருக்கின்றது. இன்றைய எமது நடத்தையும் போக்குமே எமது புனித மார்க்கத்தைப் பலவீனப்படுத்துவதற்கும், குறைகூறுவதற்கும் காரணமாக இருக்கின்றது. எமது பேச்சிலும், பெயர்களிலும்தான் இஸ்லாத்தின் சாயல் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் கட்டுக்கோப்பிலோ அல்லது செயலிலோ இஸ்லாத்தின் சாயலைக் காண முடியாதுள்ளது.

இஸ்லாம் வகுத்தளித்த அரசியல் அமைப்பு எங்கே? பொருளாதார ஒழுங்கு எங்கே? சமுதாயப் பிணிகளுக்கான தீர்வுகள் எங்கே? இதேபோன்ற கேள்விகளைத்தான் மேற்கத்தியர்களுடன் சேர்ந்து நாமும் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். இவற்றை யார் தோற்றுவிப்பது? இப்பணியை யார் முன்னின்று நடாத்துவது? - இவையொன்றும் இஸ்லாத்திற்குப் புதிதான விடயங்களோ அல்லது இயலாத காரியங்களோ அல்ல. உலகத்தை இருளிலிருந்து விடுவித்து, முறைப்படி வாழவைத்த இஸ்லாமியப் பெரும் வரலாறு இவற்றிற்கான சான்றுகளை அதிகமாகக் கொண்டிருக்கின்றது.

## அனுஷ்டானமே அவசியம்

உண்மையில், இவற்றைவிடப் பிரச்சினைகளும், பாவங்களும் நிறைந்த ஒரு காலப்பகுதியில்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வுலகில் தோன்றி, சமுதாயத்திற்கான தீர்வுகளை வழங்கினார்கள். அன்று இஸ்லாம் வேகமாகப் பரவி, உலகிற்கே முன்மாதிரியாக அமைந்ததற்கு முக்கிய காரணம் போதனைகளுடன் சாதனைகளையும் அது கொண்டிருந்தமையேயாகும். இஸ்லாம் போதனைகளை விட, செயல்திட்டங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும், அமுலாக்கத்திற்குமே கூடிய முக்கியத்துவமளிக்கின்றது. இதனால்தான் புனித திருக்குர்ஆன் சொற்சங் கொஞ்சமாக காலத்திற்கு ஏற்றவாறு இவ்வுலகிற்கு அருளப்பட்டது. இறைவன் விரும்பியிருந்தால், திருமறையை ஒரே முறையில் இறக்கியிருக்க முடியும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. திருக்குர்ஆன் போதிக்கும் இஸ்லாமிய வாழ்க்கை முறை, போதனைகளுடன் சேர்ந்தே வளர்ச்சிபெற வேண்டும் என்ற நோக்கோடுதான் இருபத்திமூன்று வருடகாலமாக அது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அருளப்பட்டது. எனவேதான், செயலுருப் பெறாத மதமோ, அதனோடொட்டிய சமூகமோ இந்த உலகில் என்றுமே நிலைக்க முடியாது.

இந்த உலகில் ஒரு மதம் உயிர்த் துடிப்புள்ளதாக வாழ வேண்டுமாயின், அதனடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட ஒரு சமுதாய அமைப்புத்தேவை. அந்தச் சமுதாயம் செழித்தோங்க வேண்டுமாயின், அம்மதத்தின் வழிநின்று ஒழுகக்கூடிய முன்மாதிரியான தலைவர்களை அது கொண்டிருத்தல் வேண்டும். இன்றைய சூழ்நிலையில், சமூக அமைப்பு, தலைவர்கள் ஆகிய இரண்டையுமே நாம் இழந்து நிற்கின்றோம். இந்த வேளையில் இஸ்லாம் எவ்வாறு தலைநிமிர்ந்து நின்று உலகிற்கு வழிகாட்ட முடியும் என்ற கேள்வி எழுகின்றது.

### தலைவர்களின் போக்கு

அதிகமான இஸ்லாமிய நாடுகள் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழிருந்து சுதந்திரம் பெற்றனவாகும். இவர்களை இந்த நாடுகளிலிருந்து வெளியேற்றும் நோக்கோடு தோற்றம் பெற்ற இஸ்லாமியத் தலைவர்களுக்கு, மக்களைத் தனிப்பட்ட அரசியல் நோக்கம் கருதிமட்டும் ஒன்றுசேர்ப்பது இயலாத காரியமாக இருந்தது. இந்த வேளையில் இஸ்லாத்தை ஒரு கருவியாகப் பாவிப்பதற்கு இத்தலைவர்கள் முனைந்தனர். குர்ஆனையும், ஹதீஸையும் முன்வைத்து, புனித யுத்தம் என்ற பெயரில் மக்களை அந்நியர்களுக்கெதிராகக் கிளர்ந்தெழச் செய்தனர். மக்களுக்கு மதத்திலிருந்த பற்றுதலின் காரணமாகவும், இச்சுதந்திரப் போராட்டங்களில் தமது உயிரையும் கொடுத்துப் போராடுவதற்கு இவர்கள் முன்வந்தனர். இந்த அடிப்படையில்தான் அதிகமான இஸ்லாமிய நாடுகள் விடுதலைப் போராட்டங்களில் வெற்றி பெற்று சுதந்திரம் பெற்றன. ஆனால், அந்நியர்கள் வெளியேறி, போராட்டங்களை முன்னின்று நடாத்திய தலைவர்கள் ஆட்சியாளர்களாக வந்ததும், முன்னுக்குப் பின் முரணான முறையில் அவர்களின் போக்கு அமைந்திருந்தது. திருக்குர்ஆனையும் இஸ்லாத்தின் கோட்பாடுகளையும், ஒரு பக்கத்தில் ஒதுக்கிவிட்டு, அமெரிக்காவின் சித்தாந்தங்களையும், ரஷ்யாவின் கோட்பாடுகளையும் வழிகாட்டிகளாக அவர்கள் பின்பற்றத் தொடங்கினர். இந்த அடிப்படையில் அதிகமான இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாம் ஒரு விடுதலைக் கருவியாக மட்டுமே பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

பயணத்தின் இறுதிக்கட்டத்தில் தமது வாழ்க்கையினை நடாத்திக் கொண்டிருக்கும் மேற்கத்திய நாடுகளா எமக்கு வழிகாட்ட முடியும்? வாழ்க்கையை வளம்படுத்துவதற்கான உன்னத அமைப்புகளைக் கையில் வைத்துக்கொண்டு வரட்டுக் கொள்கைகளை நாம் ஏன் பின்பற்ற வேண்டும்? இவ்வாறான வழிமுறைகள் முஸ்லிம் சமுதாயங்களினால் தோற்றுவிக்கப்பட்டவையல்ல. மாறாக, அவர்களை வழிநடாத்துவதற்காக வேஷங்களுடன் முன்வந்த தலைவர்கள் காட்டிவிட்ட வழிகள் இவை. ரியூனியத் தலைவர் 'போர்க்கீபா' 1962ம் ஆண்டளவில் ஒரு கருத்தினை வெளியிட்டார். நோன்பு அனுஷ்டான முறை தனது நாட்டிற்கு ஒத்துவராதெனவும், அதனைக் கடைப்பிடித்துக்கொண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக மக்கள் உழைக்க முடியாதெனவும் கூறினார். இவ்வாறான நிலையில் தான் இன்றைய முஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிம் நாடுகளின் அதிகமான தலைவர்களின் போக்கு அமைந்திருக்கின்றது. இந்நிலையில் எமது தலைவர்கள் இருந்தால் நாம் எவ்வாறு இஸ்லாமிய வாழ்க்கை முறையினை உலகிற்கு எடுத்துக்காட்ட முடியும்?

## முஸ்லிம் சமுதாயத்தின் போக்கு

அதிகமான முஸ்லிம் நாடுகள் மேற்கத்திய கலாசார, பண்பாட்டு முறைகளை இனம் கண்டுகொள்ள முடியாத அளவிற்குப் புகுத்தி, பின்பற்றி வருகின்றன. அதிகமான நாடுகளில் இஸ்லாத்தினால் சட்டத்திற்கு மாற்றமானவை என்றும், சமுதாயத்தைச் சீரழிக்கக் கூடியவை என்றும் வெறுத்தொதுக்கப்பட்ட சேளிக்கைகள், குடி, சூது, வட்டி என்பவற்றிற்குச் சட்டரீதியான அனுமதி வழங்கி, அவற்றை ஊக்குவித்தும் வருகின்றன. இதே நிலையில் எமது சமுதாயத்தின் போக்குத் தொடருமாயின், உலகத்திற்கு வழிகாட்டுவது ஒருபுறமிருக்க, நாம் எமக்கே வழிகாட்டிக்கொள்ள முடியாத ஓர் துர்ப்பாக்கிய நிலை இஸ்லாமிய உலகிற்கு ஏற்பட்டுவிடும்.

உண்மையில், இஸ்லாம் மானிட சமுதாயத்திற்கு நேர்வழிகாட்ட வந்த ஒரு மார்க்கமாகும். இன்று அதன் நிலை என்ன? மேற்குலகின் செல்வாக்கினாலும், அவற்றின் தவறான பிரசாரங்களினாலும் இஸ்லாத்தின் போக்கே முற்றாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது டன், முஸ்லிம்களிடையே சிந்தனைக் குழப்பங்களும் ஏற்பட்டுள்ளன.

## தவறான கருத்து

உலகத்தில் அமெரிக்காவை, ரஷ்யாவை, அல்லது மேற்கு ஐரோப்பாவைப் பின்பற்றியொழுகும் நாடும் சமுதாயமுமே உயர்ந்தது என்ற கருத்து பரவலான முறையில் இஸ்லாமிய நாடுகளில் மட்டுமல்லாது, ஏனைய நாடுகளிலும் கூட இன்று காணப்படுகின்றது. மத்தியதரைக் கடலுக்கு மேற்கிலுள்ள நாடுகளும் சமுதாயங்களுமே நாகரிகத்திலும், பண்பாட்டு வளர்ச்சியிலும் உயர்ந்தவை என்றும் அதற்குக் கிழக்கேயுள்ள நாடுகளும், சமூகங்களும் இவற்றில் தாழ்ந்தவை என்றும், மேற்கத்திய வல்லரசுகள் தமது செல்வாக்குகளினால் தவறான கருத்துகளைத் தூவிவிட்டிருக்கின்றன. ஒப்பீட்டு அடிப்படையில் பார்க்கப்போனால், ஆரம்பத்திலும் அதன் வளர்ச்சிக் கட்டத்திலும் மேற்குலகத்திலிருந்த எதிர்ப்பும், பகையும் இன்றைய நிலையில் குன்றிவிட்டதுபோல் தோன்றுகின்றது.

'இஸ்லாத்தை உலகத்திலிருந்து முற்றாகக் களைந்துவிடுதல்' என்ற நோக்கமே மேற்கு நாட்டவர்களின் நாடு பிடிக்கும் ஆசையைத் தூண்டியதென வரலாறு கூறுகின்றது. ஆனால், இதே வகையான எதிர்ப்பினை இன்று நாம் காண முடியாதுள்ளது. இதற்குரிய காரணம் என்ன? இஸ்லாத்தின் இன்றைய போக்கினைக் கொண்டு, இதற்குப் பிறகு இஸ்லாத்தினால் எதனையுமே சாதிக்க முடியாது என்பதனை அவர்கள் பூரணமாக நம்பிவிட்டனர். உண்மையில், இஸ்லாம் என்றோ செத்துவிட்டது. இஸ்லாத்தின் போக்கை மாற்றுவதற்கு, இஸ்லாமிய சமுதாயங்களைத் திருமறையிலிருந்தும், அதன் கோட்பாடுகளிலிருந்தும் பிரிப்பதற்கு, மேல்நாட்டவர் மேற்கொண்ட அத்தனை முயற்சிகளும் வெற்றியடைந்துவிட்டதனை இஸ்லாமிய உலகின் இன்றைய நிலை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

## 'உயிரற்ற உடல்'

திருமறையும், நபியவர்களின் வாழ்க்கை முறையும் எடுத்துக்காட்டும் இஸ்லாமிய நெறிக்கும், இன்று பின்பற்றப்பட்டுவரும் முறைக்குமிடையில் அகன்ற இடைவெளி உள்ளது. 'இன்று முஸ்லிம் நாடுகள் கடைப்பிடிக்கும் இஸ்லாம், உயிரற்ற உடல் போல் உள்ளது, எனப் பேரறிஞர் முஹம்மது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸாத் அவர்கள் குறிப்பிட்டுள்ள கருத்து பொருத்தமானதேயாகும். எனவே, உயிரற்ற பிணத்தைத் தாம் விரும்பியவாறெல்லாம் வல்லரசுகள் இன்று ஆட்டிப்படைக்க முடிகின்றது. இஸ்லாம் என்று உயிர்பெற்றெழுமோ, அன்றுதான் மேற்குலகின் பகைமை உணர்ச்சியும், எதிர்ப்புப் போராட்டமும் வெளிப்படையாகத் தோற்றமளிக்கும். இஸ்லாத்திற்கு இன்று எதிர்ப்பில்லை என்பது இதன் அர்த்தமல்ல; இன்றைய எதிர்ப்பும், பகையும் உள்நோக்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. மேலோட்டமாகப் பார்க்கும்போது, மேற்குலகத்திற்கிடையிலான எமது உறவு மிகவும் நெருங்கிவிட்டதைப்போல் தோன்றுகின்றது. இந்த உறவின் அடிப்படை, இஸ்லாத்தை வேரோடு களைவது என்பதுதான். மேற்குலகிலும், புதிய நாடுகளிலும் இஸ்லாமியக் கருத்துகள் வேகமாகப் பரவி வருகின்றன என்று கூறப்படுகின்றது. ஆனால், இதுவரை காலமும் இஸ்லாம் என்ற கொடியின் கீழ் அணிதிரண்டிருந்த மக்கள் பிளவுற்று, பல்வேறு திசைகளிலும் சென்றுகொண்டிருப்பதுதான் கவலைக்கிடமானது. இதனை எவ்வாறு தடுப்பது? உயிரற்றுக் கிடக்கும் உடம்பிற்கு யார் உயிரூட்டுவது?

**இளைஞர் சமுதாயம்**

இந்தப் பணியினைத் துடிப்போடு கூடிய இளைஞர் சமுதாயம் தலைமேற்கொண்டு நிறைவேற்ற முடியும். ஒவ்வொரு சமுதாயத்திலும் இளைஞர்களே செயற்றிறன் வாய்ந்த வீரர்களாகக் காணப்படுகின்றனர். இளைஞர் சமுதாயத்தினால்தான் உலக வரலாற்றினையே முற்றாக மாற்றியமைக்க முடியும். புரட்சிக்கவி அல்லாமா இக்பால் தமது உயிரோட்டமுள்ள கவிதைகள் மூலம் இளைஞர் சமுதாயத்தைத் தட்டியெழுப்புகின்றார். இஸ்லாமியக் கப்பலை வழி நடாத்திச் செல்லும் மாலுமிகளாக அவர் இளைஞர்களைக் காண்கின்றார். 'இரும்பினையொத்த இதயம் படைத்தவர்கள், வாளையும் விடச் சக்தி படைத்தவர்கள் எனக் கூறுகின்றார்.

எனவே, இன்று சீர்குலைந்து கிடக்கும் சமுதாயத்தைத் திருத்துவதற்கு, இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் வளர்க்கப்பட்ட, இரும்பிதயம் படைத்த இளைஞர் சமுதாயமே தேவைப்படுகின்றது. இவர்களை நாம் எங்கு தேடுவது? இஸ்லாமிய இளைஞர்களின் இன்றைய நிலை என்ன? இந்த இளைஞர் சமுதாயம் நாளுக்கு நாள் மதத்திலிருந்தும், ஏகத்துவக் கோட்பாட்டிலிருந்தும் விலகிக் கொண்டு செல்வதனைக் காண்கின்றோம். நாஸ்திகக் கருத்துகள் நாளுக்கு நாள் அவர்களிடையே வேரூன்றி வருகின்றன. இந்நிலைக்கு யார் காரணம்? எமது சமுதாய அமைப்புத்தான் காரணம்; எமது மதிப்பிற்குரிய தலைவர்கள்தாம் காரணம். எத்தகைய எதிர்காலத்திட்டத்தை இந்த அலைந்து திரியும் கூட்டத்திற்காக நாம் அமைத்துக் கொடுத்திருக்கின்றோம். இஸ்லாமிய அடிப்படையில் அவர்களைக் கட்டியெழுப்புவதற்காக எத்தகைய அத்திவாரத்தினை நாம் இட்டிருக்கின்றோம்?

இஸ்லாத்தைப் பற்றி நல்லமுறையில் அறியாததும், அதன் கோட்பாடுகளை அவர்கள் பகுத்துணராததுமே, இந்நிலைக்கு அவர்கள் மாறியிருப்பதற்கு அடிப்படைக் காரணமாகும். இந்த உலகில் தோற்றம் பெற்றுவரும் இளைஞர் சமுதாயத்தினால் இஸ்லாத்திற்கும் ஏனைய சமுதாயங்களுக்குமிடையில் எத்தகைய தெளிவினையும் உணர முடியாதுள்ளது; அல்லது இஸ்லாமியக் கோட்பாடுகளைக் கற்பனை செய்துகூடப் பார்ப்பதற்கு இன்றைய சூழ்நிலையில் அவர்களுக்கு அவகாசமில்லை. முஸ்லிம் நாடுகளினதும், சமுதாயங்களினதும் போக்குகளை நோக்குகின்ற வேளையில், ஓர் இஸ்லாமியனாக வாழ்க்கை நடாத்துவதைவிட, இஸ்லாத்திற்கு அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்பட்ட சித்தாந்தங்களின் அடிப்படையில் வாழ்க்கை நடாத்துவதற்கான சூழ்நிலைகளே அதிகமாகக் காணப்படுகின்றன.

கல்வித் திட்டம்

எமது கல்வித் திட்டங்களினூடாக மேற்குலகத்தின் அழிந்துபோன பெறுமதிகளை ஆக்கத்திற்குரியது என்ற தோரணையில், இளம் வயதிலேயே அவர்களின் உள்ளங்களில் நாம் பதிய விட்டிருக்கிறோம். ஆழமாகப் பதிந்த இவ்வாறான சிந்தனைகளிலிருந்தும் விடுபட முடியாத நிலை அவர்களின் போக்கில் காணப்படுகின்றது. 'எமது கல்வித் திட்டங்களின் அடிப்படைகளை மாற்றுதவரையில் இளைஞர் சமுதாயத்தின் போக்கினை மாற்ற முடியாது', என எகிப்திய சிந்தனையாளர் ஸெய்யித் குத்ப் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 'இஸ்லாமியக் குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் சொந்த நாட்டின் வரலாறு போதிக்கப்படல் வேண்டும். இந்த அடிப்படைகளைக் குழந்தைகளின் மனதில் ஆழமாகப் பதியவைத்த பின்பு, மேற்கத்திய அறிவு பற்றிய சுதந்திர வாசிப்பினை அவர்களுக்கு அனுமதிக்கலாம்' என்றும் அவர் கூறுகின்றார்.

இன்றைய சமூக அமைப்பில் எந்தளவிற்கு இந்த ஏற்பாடு காணப்படுகின்றது என்பது இன்று கேள்விக் குறியாகவே உள்ளது. முஸ்லிம்களுக்கென்று தனியாக நிறுவப்பட்டுள்ள கல்லூரிகளில் எவ்வகையான இஸ்லாமியச் சூழ்நிலைகளை அவர்களுக்காக நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம்? எனவே தான். ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையில் நோக்கப்பட்ட கல்வி முறைகளோடு, எமது பாடசாலைகளின் சூழ்நிலைகளை மாற்றியமைக்காதவரையில், இன்றைய இளைஞர்களின் போக்கில் மாற்றத்தினை நாம் காணமுடியாது. அவர்களும் மேற்கத்தியர்களோடு சேர்ந்து 'BE HAPPY' என்ற கோஷத்துடனேயே தொடர்ந்தும் சென்று கொண்டிருப்பர். இது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இஸ்லாமிய இளைஞன்

எனவே, இஸ்லாமிய அடிப்படையில் ஒரு சமுதாயத்தினைக் கட்டியெழுப்பும் பொறுப்பு, இன்றைய எமது இளைஞர்களின் கைகளிலேயே உள்ளது. இந்தச் சமூகம் அதன் பெறுமதிகளைத் தெளிவாக உணர்வதன் மூலம் மட்டுமே இச்சாதனையினைப் புரிய முடியும். எனவே, ஓர் இஸ்லாமிய அடிப்படையிலான சமுதாய அமைப்பில் எவ்வகையான இளைஞர்களை நாம் காண வேண்டி நிற்கின்றோம், அல்லது விரக்தியுற்றுச் செல்லும் இளைஞர் சமுதாயத்திற்கு இஸ்லாமிய வரலாற்றின் மூலம் எவ்வகையான முன்மாதிரியான இளைஞர்களை நாம் காட்டமுடியும்?

இஸ்லாம் தோற்றம் பெற்றதிலிருந்து அஃது இந்த உலகத்தில் உன்னத மதமாகப் பூரணத்துவப்படுத்தப்படும் வரையிலும், அதன் யதார்த்த பூர்வமான வரலாறுகளில், இளைஞர்களின் தீரச்செயல்களை எம்மால் உணர முடிகின்றது. இப்றாஹீம் நபியவர்களின் காலத்திலிருந்து இளைஞர்களுக்கான அழகிய முன்மாதிரிகளை இஸ்லாமிய வரலாறு படைத்திருக்கின்றது. நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் இறை கட்டளையைச் சிரமேற்கொண்டு, தமது மகனை அறுத்துப் பலியிடுவதற்கான அபிப்பிராயத்தினை வெளியிட்டவேளையில், இளைஞர் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களின் தியாக மனப்பான்மையினையும், இறைகட்டளை மீது அவர்கள் கொண்டிருந்த பணிவையும் அந்தச் சம்பவத்தின் மூலம் நாம் காணமுடிகின்றது. இதே போன்று தான் அலி (ரலி) அவர்களும் சிறுவனாக இருந்தபோது, இளைஞர்கள் பின்பற்றியொழுகவேண்டிய பல ஆக்கபூர்வமான செயல்களை, இஸ்லாத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துயிர் பெறச் செய்வதற்காகச் செய்திருக்கின்றார்கள். குறைஷித் தலைவர்கள் நபி (ஸல்) அவர்களின் தூதினையும் கருத்துகளையும் எள்ளி நகையாடிய வேளையில், தமது ஒன்பதாவது வயதிலேயே நபியவர்களின் தூதினையேற்று, இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள் இது மட்டுமல்லாமல், நபியவர்கள் 'ஹிஜ்ரத்' செல்லவிருந்த வேளையில், அவர்களின் படுக்கையில் உறங்குவதற்கு ஏற்றுக்கொண்டு, தூதரையும், இஸ்லாத்தையும் காப்பாற்றுவதற்காகத் தமது உயிரையும் துச்சமென மதித்து, அவர்கள் நடந்துகொண்டமை கவனிக்கற்பாலது.

இந்தியாவைக் கைப்பற்றுவதற்காகத் தனது பதினெட்டாவது வயதிலேயே இஸ்லாமியப் படைக்குத் தலைமை தாங்கி, கீழைத்தேய நாடுகளில் இஸ்லாம் பரவுவதற்குக் காரணமாக இருந்த, முஹம்மது பின் காஸிமும் இஸ்லாமிய வரலாறு உருவாக்கித் தந்த மற்றுமொரு முன்மாதிரியாவார். சிந்து நதியினைத் தாண்டிக் கொண்டிருந்த வேளையில், எதிரிகள் எய்திய அம்புகளை முதுகில் தாங்கிய வண்ணம், எந்தவிதமான போர்க்கருவிகளும் இல்லாமல் எதிரிகளை வென்று, இந்திய மண்ணில் இஸ்லாமியக் கொடியினைப் பறக்கவிட்ட அந்த இளைஞருடைய வீரச் செயல், இஸ்லாமிய வரலாற்றில் அழியாத இடத்தினைப் பெற்றுவிட்டது.

### இஃவானுல் முஸ்லிமீன்

சமீபத்தில், எகிப்தில் தோற்றம் பெற்று, இஸ்லாத்திற்காகத் தமது உயிர்களை அர்ப்பணிக்கத் துணிவு கொண்ட 'இஃவானுல் முஸ்லிமீன்' இயக்க இளைஞர்களுடைய செயல்கள், இஸ்லாமிய இளைஞர்களுக்கு மேலும் ஒரு படி முன்சென்று, கடமைகளை உணர்த்திக்கொண்டிருக்கின்றன. ஹஸனுல் பன்னா, ஸெய்யித் குத்ப் என்போர் அரசுக்கெதிரான இஸ்லாமியப் போராட்டங்களில் தமது உயிர்களையே பலிகொடுத்தனர். இவர்களின் வழியினைத் தழுவி, வருடக்கணக்காகச் சிறையில் கிடந்து வாடிய, பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் சித்திரவதைக்குட்பட்டதுமல்லாமல், வாழ்வில் எந்தவித சுகத்தையும் அனுபவியாது, தம் வாழ்வையே முடித்துக் கொண்டனர். இவையெல்லாம் இஸ்லாத்திற்காகவும், சமூகத்திற்காகவும் தமது வாழ்க்கையினை முடித்துக் கொண்ட சில இஸ்லாமிய இளைஞர்களின் தியாக வரலாறுகளாகும்.

இந்த வரலாறுகளும், இவர்களினால் இந்த உலகத்தில் தூவிவிடப்பட்ட கருத்துகளும் இன்றைய இளைஞர் சமுதாயத்தினைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக் கொண்டிருக்கின்றன. இவர்களின் தியாக வரலாறுகளைக் கண்டு தமக்கோ, சமுதாயத்திற்கோ பயன்படாதவகையில் சந்தர்ப்பவசமாக வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கும் இன்றைய இளைஞர் சமுதாயம் வெட்கித் தலைகுனிவதோடு மட்டுமல்லாது, ஒடி ஒளிக்கவேண்டியுமுள்ளது. எனவேதான் இஸ்லாமிய வரலாறு காட்டித்தந்த அழகிய முன்மாதிரிகளைத் தன்னகத்தே கொண்ட, தியாக உள்ளம் படைத்த, ஆனால் இரும்பினும் கடினமான இதயம் படைத்த, சமுதாயக் கலைகளைச் சிரமேற்கொண்ட, ஓர் இளைஞர் கூட்டம் இன்று எமக்கு அவசரமாகத் தேவைப்படுகின்றது. மெல்லமெல்ல அமிழ்ந்து கொண்டிருக்கும் அந்த இஸ்லாமியக் கப்பலை மீட்டெடுத்து, உரிய பாதையில் இட்டுச் செல்வதற்குரிய மாலுமிகளை இஸ்லாமிய சமுதாயம் வேண்டி நிற்கின்றது. இந்தக் கூட்டத்தினை நாம் உருவாக்கிவிட்டால், இஸ்லாமிய வரலாறு உலகிற்குப் படைத்தளித்த பொற்காலத்தினைப் போல் மேலும் ஒரு நிரந்தர அத்தியாயத்தினை இஸ்லாமிய உலகிற்கு மட்டுமல்லாது, முழு மனித இனத்திற்குமே உருவாக்கியளிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இஸ்லாத்திற்குப் புத்துயிரளித்தல்'

எமது இளைஞர்களையும், சமுதாயத்தையும் மேற்குலகின் செல்வாக்கிலிருந்து விடுவிப்பதே நாம் இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்குரிய ஒரேயொரு வழியாகும். இஸ்லாமிய உலகம் ஏனைய உலகின் வளர்ச்சிகளோடு ஒத்துச் செல்லவேண்டுமானால், மேற்குலகின் கோட்பாடுகளையும் வழிபாடுகளையும் பின்பற்றுதல் வேண்டுமென்ற தவறான கருத்து முஸ்லிம்களிடையே பரவியுள்ளது. திருமறையும், நபியவர்களின் நடைமுறையும் காட்டித் தந்த தீர்வுகளோடு உலகின் பிரச்சினைகளை அணுகாமல் அல்லது இஸ்லாத்தின் கோட்பாடுகள் பற்றிய போதிய விளக்கமில்லாமல், இஸ்லாம் காலத்திற்கு ஒவ்வாதது என்ற கருத்தே பெரும்பாலான இஸ்லாமியர்களிடம் காணப்படுகின்றது. மேற்குலகின் வரலாறுகள், சிந்தனைகள், வழிகாட்டுதல்கள் என்பவற்றினால் இஸ்லாத்தைத் தாழ்வு மனப்பான்மையோடு நோக்கும் வழக்கம் சமுதாயத்தில் பரவியிருக்கின்றது.

இஸ்லாத்திற்கேற்ப எமது சமுதாயத்தினை மாற்றியமைக்கும் பணியில், முதலாவதாக முஸ்லிம்கள் தமது மதத்தினைத் தாழ்ந்த மனப்பான்மையோடு நோக்குவதைக் கைவிட வேண்டும். முஸ்லிம்கள் எப்பொழுதும் உயர்ந்த சிந்தனைகளையும், நோக்கங்களையும் மேற்கொண்டவர்களாக வாழுதல் வேண்டும். உலகின் ஏனைய மதங்களிலிருந்தும், தத்துவங்களிலிருந்தும் இஸ்லாமும், இஸ்லாமிய சமுதாயமும் வேறுபாடானவை, உயர்ந்தவை என்பதற்காக அவர்கள் பெருமையடைதல் வேண்டும். இந்த எண்ணங்களுடன் உண்மை முஸ்லிமாக வாழ்ந்து இஸ்லாமிய சமுதாயத்தை வழி நடாத்தும் அதே வேளையில், இதனை உலக சமுதாயங்களுக்கு முன்மாதிரியாக எடுத்துக்காட்டுவதற்கு ஒவ்வொரு இஸ்லாமியனும் முனைதல் வேண்டும். இவற்றை மேற்கொள்வதற்குப் பதிலாக, ஏனைய கலாசாரங்களினதும், தத்துவங்களினதும் வட்டங்களில் அவன் இணைவதற்கு முயற்சி செய்வது, அவன் இந்த உலகில் பிறந்த நோக்கத்தை உணராமல் வாழுவதற்குச் சமமாகின்றது.

இவ்வாறு வாழுவதனால் இதனைச் சமுதாயவெறி என்றோ, இனவெறி என்றோ எவரும் கூறிவிட முடியாது. ஏனெனில், ஒரு மதத்தினைப் பின்பற்றி, அதன் சமுதாய அமைப்பில் ஓர் அங்கமாக விளங்கும் ஒருவன், அதன் நடவடிக்கைகளில் பங்குகொள்ளாது, ஒதுங்கி வாழ்வதன் மூலம் வாழ்க்கையின் குறிக்கோளை அவன் அடைந்து கொள்ள முடியாது. இவ்வாறு இஸ்லாமிய சமுதாயங்களோடு ஒன்றிணைந்து, அது வகுத்த எல்லைக்குள் முஸ்லிம்கள் வாழ்வதானால், அவர்கள் வெளியுலகத்தோடு தொடர்பற்று வாழுதல் வேண்டும். வெளியிலிருந்து வரும் ஓசைகளுக்குச் செவிமடுத்தல் கூடாது என்பது அர்த்தமல்ல. வாழ்க்கையின் ஓட்டத்தில், உலகத்தின் நாளாந்தச் சுழற்சியில் ஒரு மனிதனும், ஒரு சமுதாயமும் ஒவ்வொரு நாளும் பல புதிய புதிய அம்சங்களைப் பெற வேண்டிய நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், புதிய அம்சங்களைப் பெற்றுக் கொள்ளும் வேளையிலும், புதிய அம்சங்களைச் செவிமடுக்கும் வேளையிலும் ஒரு மனிதனோ, ஒரு சமுதாயமோ தனது சொந்தப் பெறுமதிகளை, அடிப்படைகளை இழத்தல் கூடாது. புதிதாகச் சேர்த்துக் கொள்ளும் மாற்றங்களினால் அந்தச் சமுதாயத்தின் அடிப்படைகளும், நோக்கங்களும் அழியக்கூடாது. ஐரோப்பிய மறுமலர்ச்சியினையும், அதன்பால் மேற்கு நாட்டவர் கொண்டிருந்த மனப்பாங்கினையும் இதற்குச் சிறந்ததோர் உதாரணமாகக் கூறலாம்.

மேற்கத்தியரின் உதாரணம்

மறுமலர்ச்சியினை ஏற்படுத்துவதில் இஸ்லாமிய உலகத்திடமிருந்து அறிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், கலைகளையும், சிந்தனையையும் மேற்கு நாட்டவர் பெற்றுக் கொண்டனர். இவற்றைப் பெற்றதற்காக வேண்டித் தமது சொந்தப் பெறுமதிகளையும், செல்வாக்குகளையும் அவர்கள் விட்டுக் கொடுத்ததாக வரலாறு கூறவில்லை. அரேபியரிடமிருந்து அறிவினையும், கலைகளையும் பெற்றுக்கொண்டார்களே தவிர, அதற்காக வேண்டி தமது சொந்தப் பெறுமதிகளை இழந்து, இஸ்லாமிய மதத்தையோ அல்லது கலாசார, பண்பாட்டு அம்சங்களையோ அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அரபுலகில் பெற்றுக் கொண்ட அறிவுச் செல்வங்களைத் தமது சொந்த நிலங்களில் உரமாகவே மட்டும் பாவித்து, தமது கலாசாரங்களை வளர்த்துக்கொண்டதுடன், தமது செல்வாக்குகளையும் அவர்கள் விரிவுபடுத்திக்கொண்டனர். இது ஒரு சமுதாயம் தனது அடிப்படைகளில் நின்று வளர்ச்சி பெறுவதற்குரிய உன்னதமான எடுத்துக்காட்டாகும். எந்த நாகரிகமும், அல்லது எந்தச் சமுதாயமும் அதன் சொந்தப் பெறுமதிகளை இழந்துவிட்டு வளர்ச்சியடைய முடியாது. இதே கண்ணோட்டத்தில் இஸ்லாமிய சமூகத்தின் கடந்த கால நிலையினை ஒப்பிட்டால் பல உண்மைகளை நாம் அறிந்து கொள்ள முடியும்.

மேற்குலகின் கலாசார, பண்பாட்டு முறைகளையும் சில்லறை நாகரிகங்களையும் பின்பற்றுவதற்காக சொந்தப் பெறுமதிகளையும், பெருமைகளையும் இஸ்லாம் இழந்துவந்திருக்கின்றது. மேற்குலகின் செல்வாக்கினால் நாம் எமது அடிப்படைகளை மாற்றி வந்திருக்கிறோம். மேற்குலகின் ஒருசில வளர்ச்சிகளைக் கண்டு, எம்மையும் எமது மதத்தையும் நாம் தாழ்த்தி மதிப்பிடுகிறோம். இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு எமது சமுதாயம் வளர்ச்சியடைய முடியும்? எவ்வாறு நாம் உலகிற்கு வழிகாட்ட முடியும்?

## முடிவுரை

எனவேதான், எமது சமுதாயத்தினைச் சிறந்தமுறையில் கட்டியெழுப்பி, உலகிற்கு வழிகாட்டும் வரிசையில் முதலாவதாக, மேற்குலகின் அடிமைத்தனத்திலிருந்தும், அதன் செல்வாக்கிலிருந்தும் நாம் விடுபடுதல் வேண்டும். இவ்வாறு நாம் விடுபட்டால் நாம் எல்லோரும் சுதந்திரப் பிரஜைகள்; இஸ்லாமிய வரலாற்றுப் பெருமைகளின் அடிப்படைகளில் நின்று இந்த உலகிற்கு வழிகாட்ட வந்த சத்திய சீலர்கள் என்பதை நாம் உணர முடியும். இவ்வாறு நாம் விடுபட்டால் எமக்கு மொழிப்பிரச்சினை தேவையில்லை; நிறப் பிரச்சினை தேவையில்லை. ஆனால், எமக்குத் தேவைப்படுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். உறுதியான ஈமானும் நபி வழியுமேயாகும்.

இந்த அடிப்படைகளை உருவாக்கி விட்டால், இஸ்லாம் கூறும் இலட்சிய சமுதாயத்தைத் தோற்றுவிக்க முடியும். இஸ்லாம் காட்டும் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். ஆனால், இஸ்லாத்தைப் புனரமைத்து, சீர்திருத்தி அமைக்க வேண்டிய கடமை எமக்கில்லை. மனிதனுக்கான உன்னத பெறுமதிகளை அடக்கிய வகையில் அது ஏற்கெனவே பூரணப்படுத்தப்பட்டுவிட்டது. இங்கு செய்ய வேண்டி இருப்பதெல்லாம், நாம் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான். எமது நடத்தைகளையும், நோக்கங்களையும் நாம் புனரமைத்தல் வேண்டும். இவ்வாறு எம்மை நாம் புனரமைத்துக் கொண்டால், இஸ்லாமியக் கப்பல் சீரான நிலையில் சென்றுகொண்டிருக்கும். எனவே, இந்த அடிப்படைகளில் எமது சமுதாயத்தைச் செப்பனிட்டு, அதனைக் கட்டியெழுப்புவதற்கு உறுதியான நம்பிக்கைகளுடன் கூடிய தியாகிகள் முன்வருவார்களா?

(முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With

best

compliments

from

**IFHAM GEM TRADERS**

(Prop: Al-Haj S. M. M. FASY)

15 A, Stadium Road,
Chinafort,
Beruwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best Compliments of*

# CRYSTALS

EXPORTERS OF GEMS

45, YUSUF AVENUE,

BERUWALA.

Printed at I. P. C. Printing Press, 350, N. M. M. Ishak Mawatha, Colombo-9.
Published by C. M. A. Ameen, Manager, Naleemiah Bureau of Islamic Publications
P. O. Box 1, Beruwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org